



# இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்

சென்னை / காஞ்சிபுரம் பதிப்பு ● செவ்வாய், ஆகஸ்ட் 17, 2021

RNI No.TNTAM/2018/76449 Vol.4 No.228

https://www.hindutamil.in

● அச்சகம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ●

● 12 பக்கங்கள் ₹ 7





ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய தலிபான்கள்.. போர் முடிவுக்கு வந்ததாக அறிவிப்பு

# காபூல் துப்பாக்கிச்சூட்டில் 5 பேர் உயிரிழப்பு

● அமெரிக்க விமானங்களைப் பிடித்து தப்பிச் செல்ல மக்கள் முயற்சி ● வன்முறையால் பதற்றம் நீடிப்பு

■ காபூல்

ஆப்கானிஸ்தான் முழுவதும் தலிபான்கள் கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளது. போர் முடிவுக்கு வந்திருப்பதாக தலிபான்கள் பகிரங்கமாக அறிவித்துள்ளனர். எனினும் தலைநகர் காபூலில் பதற்றம் நீடிக்கிறது. அங்குள்ள விமான நிலையத்தில் கூட்டத்தை கட்டுப்படுத்த அமெரிக்க படை வீரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 5 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் நடந்து வந்த தலிபான்கள் ஆட்சியை கடந்த 2001-ம் ஆண்டில் அமெரிக்க ராணுவம் அகற்றியது. சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க வீரர்களும் நேட்டோ நாடுகளைச் சேர்ந்த 40 ஆயிரம் வீரர்களும் அந்த நாட்டில் முகாமிட்டனர். புதிய அரசு ஏற்படுத்தப்பட்டு ராணுவம், போலீஸ் படைகள் உருவாக்கப்பட்டன.

ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் படைகளில் சுமார் 3.5 லட்சத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு அமெரிக்க ராணுவம் சிறப்புப் பயிற்சிகளை வழங்கியது. அரசுப் படைகளை எதிர்த்து கடந்த 20 ஆண்டுகளாக தலிபான்கள் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வந்தனர்.

அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்டு ட்ரம்ப் ஆட்சிக் காலத்தில், ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகளை முழுமையாக வாபஸ் பெற முடிவு செய்யப்பட்டது. கடந்த ஜனவரியில் புதிய அதிபராக பதவியேற்ற ஜோ பைடனும் படைகள் வாபஸ் திட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். கடந்த மார்ச், ஏப்ரல் நிலவரப்படி ஆப்கானிஸ்தானில் 2,500 அமெரிக்க வீரர்கள் மட்டுமே முகாமிட்டிருந்தனர்.

அமெரிக்க படைகள் வெளியேறியதால் தலிபான்களின் கை






▲ ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேற தலைநகர் காபூலில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியுள்ளனர். அங்கு நிறுத்தப்பட்டிருந்த விமானத்தின் மேற்கூரையில் சிலர் ஏறி அமர்ந்தனர். தரையில் ஏராளமானோர் காத்திருந்தனர். படம்: ஏஎப்பி

ஓங்கியது. கடந்த ஜூன் மாதத்தில் 50 முதல் 70 சதவீத பகுதிகளை தலிபான்கள் கைப்பற்றினர். ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் போர் தீவிரமானது. சில நாட்களுக்கு முந்தைய நிலவரப்படி தலைநகர் காபூலை தவிர இதர பகுதிகள் அனைத்தும் தலிபான்கள் வசமானது.

இதனிடையே, கத்தார் நாட்டில் அமெரிக்கா, தலிபான்கள் இடையே ரகசிய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதில் காபூல் மீது தாக்குதல் நடத்த மாட்டோம். ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கனி, வெளிநாட்டுப் படைகள் வெளியேறிய பிறகே காபூலில் நுழைவோம் என்று தலிபான்கள் வாக்குறுதி அளித்தனர். இதைத் தொடர்ந்து அதிபர் அஷ்ரப் கனி உட்பட முக்கிய தலைவர்கள் நேற்று முன்தினம் காபூலை விட்டு வெளியேறினர். அவர்கள் ஓமனில் தங்கியிருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

தலைநகர் காபூலில் நேற்று அதிகாலை எவ்வித எதிர்ப்பும் இன்றி தலிபான் படைகள் நுழைந்தன. அதிபர் மாளிகை உட்பட தலைநகர் முழுவதும் அவர்கள் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளன.

தலிபான் செய்தித் தொடர்பாளர் முகமது நயீம், தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், "ஆப்கானிஸ்தானில் போர் முடிவுக்கு வந்துவிட்டது. 20 ஆண்டுகளுக்குப் பிறகு ஆப்கானிஸ்தான் விடுதலை பெற்றிருக்கிறது. எங்கள் மண்ணை வெளிநாட்டினர் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம். யாரையும் காயப்படுத்த விரும்பவில்லை" என்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து தலிபான் துணைத் தலைவர் முல்லா அப்துல் கனி பராதர் வெளியிட்ட வீடியோவில், "நாங்கள் முன்னேறிய வேகத்தை யாரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆப்கானிஸ்தான் முழுவதும் அமைதியை ஏற்படுத்துவோம். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவோம். இழப்புகளை சரி செய்வதற்கான நேரம் வந்து விட்டது. எங்களுடைய சேவையை தேசத்துக்கு வழங்குவோம்" என்று தெரிவித்துள்ளார்.

யாரையும் காயப்படுத்த மாட்டோம். அமைதி திரும்பும் என்று தலிபான் தலைவர்கள் வாக்குறுதி அளித்தாலும் காபூல் முழுவதும் வன்முறை சம்பவங்கள் நடந்து வருகின்றன. ஆயிரக்கணக்கானோர் பலத்த காயமடைந்திருப்பதாகவும் மருத்துவமனைகள் நிரம்பி வழிவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. வாகனங்கள், பொருட்கள் சூறையாடப்பட்டு வருகின்றன.

காபூல் விமான நிலையம் மட்டும் அமெரிக்க படைகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த விமான நிலையத்துக்குள் ஆயிரக்கணக்கான ஆப்கானிஸ்தான் மக்கள் குழுமி உள்ளனர்.


(C) KSL Media Ltd

▲ காபூல் விமான நிலையத்தில் இருந்து அமெரிக்க விமானப் படை விமானம் நேற்று புறப்பட்டது. அந்த விமானத்தில் எப்படியாவது ஏற வேண்டும் என்று பொதுமக்கள் முயற்சி செய்கின்றனர். ஓடுபாதையில் விமானம் புறப்பட்டபோது விமானத்தின் இருபுறமும் ஏராளமானோர் பின்தொடர்ந்து ஓடினர்.

பயணிகள் விமான சேவை முழுமையாக நிறுத்தப்பட்ட நிலையில் அமெரிக்க விமானப் படை விமானங்களில் தப்பிச் செல்ல மக்கள் முயற்சி செய்து வருகின்றனர். அமெரிக்க விமானங்கள் புறப்படும்போது அதன் இறக்கை, சக்கர பகுதிகளில் தொற்றி ஏற முயன்றனர். இதுதொடர்பான வீடியோக்கள், புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் அதிகமாக பகிரப்பட்டு வருகின்றன. காபூல் விமான நிலையத்தில் கூட்டம் கட்டுங்கடங்காமல் சென்றதால் அமெரிக்க படை வீரர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 5 பேர் உயிரிழந்தனர்.

**விமானத்தில் இருந்து விழுந்தனர்**

மேலும், அமெரிக்க விமானம் ஒன்று மேலெழும்பி பறந்தபோது இறக்கை, சக்கர பகுதிகளில் சிலர் தொங்கிச் சென்றனர். விமானம் உயரத்தில் பறந்தபோது 3 பேர் அடுத்தடுத்து கீழே விழுந்து உயிரிழந்தனர். காபூலின் அவலத்தை வார்த்தைகளால் சொல்ல முடியாது என்று சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வேதனை தெரிவித்துள்ளன.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் ஆப்கானிஸ்தானுக்கான பிரதிநிதி குலாம் கூறும்போது, "காபூலில் வீடு வீடாக தலிபான்கள் சோதனை நடத்துகின்றனர். ஏராளமானோர் படுகொலை செய்யப்படுவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. உடைமைகள் சூறையாடப்பட்டு வருகிறது. இந்த வன்முறையை தலிபான்கள் நிறுத்த வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

**புதிய அதிபர் யார்?**

தலிபான் அமைப்பின் தலைவராக மவுலவி ஹிப்துல்லா அகுந்ஸாதா பதவி வகிக்கிறார். அரசியல் துணைத் தலைவர்களாக முல்லா அப்துல் கனி பராதர், முல்லா முகமது யாகூப், சிராஜுதின் ஹக்கானி ஆகியோர் உள்ளனர். இவர்களில் ஒருவர் ஆப்கானிஸ்தானின் புதிய அதிபராக பதவியேற்ககூடும் என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தான், சவுதி அரேபியாவின் மூத்த தலைவர்கள், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட நாடுகள் தலிபான்களுக்கு ஆதரவாக உள்ளன. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுடனும் சுமுக உறவை ஏற்படுத்த தலிபான்கள் முயற்சி மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது. தலிபான்களின் செயல்பாடுகளை இந்தியா மிகவும் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. அந்த அமைப்பின் செயல்பாட்டுக்கு ஏற்ப மத்திய அரசு அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்கும் என்று வெளியுறவுத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இந்தியர்கள் பத்திரமாக திரும்புவர்

ஆப்கானிஸ்தானில் செயல்பட்ட இந்திய தூதரகங்களில் பணியாற்றிய சுமார் 200 ஊழியர்கள் நேற்று முன்தினம் பத்திரமாக இந்தியாவுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். இந்திய விமானப் படையின் சரக்கு விமானம் காபூலில் இருந்து 46 இந்தியர்களுடன் நேற்று பிற்பகல் டெல்லி வந்தது. காபூலில் சுமார் 500–க்கும் மேற்பட்ட இந்தியர்கள் சிக்கியிருப்பதாக முதல்கட்ட தகவல்கள் வெளியாகி உள்ளன

இந்திய வெளியுறவுத் துறை நேற்று கூறும்போது, "ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியர்கள் வெளியேறுமாறு தொடர்ந்து அறிவுரை கூறிவந்தோம். உதவி எண்களையும் வெளியிட்டுள்ளோம். ஆப்கானிஸ்தான் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. அங்குள்ள நிலவரத்தை உன்னிப்பாக கவனித்து வருகிறோம். இன்னும் சில இந்தியர்கள் ஆப்கானிஸ்தானில் உள்ளனர். அவர்கள் பத்திரமாக நாடு திரும்புவார்கள். அவர்களோடு தொடர்பில் உள்ளோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படவில்லை

# பெகாசஸ் விவகாரத்தை விசாரிக்க நிபுணர் குழு அமைக்கப்படும்

● உச்ச நீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்

■ புதுடெல்லி

பெகாசஸ் விவகாரத்தில் எழுப்பப்பட்ட அனைத்து பிரச்சினைகளையும் விசாரிக்க நிபுணர் குழு அமைக்கப்படும் என்று உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண பத்திரத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் என்எஸ்ஓ அமைப்பின் பெகாசஸ் உளவு மென்பொருள் மூலம் இந்தியாவில் 40 பத்திரிகையாளர்கள், மத்திய அமைச்சர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட பலரின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டதாக செய்திகள் வெளியானது. இந்த விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சிகள் இரு அவைகளையும் முடக்கின.

நீதிமன்ற கண்காணிப்பில் விசாரணை நடக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படவில்லை என்று மத்திய அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. பத்திரிகையாளர்கள், தலைவர்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாகவும் இந்த விவகாரத்தில் நீதிபதி மூலம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மூத்த பத்திரிகையாளர் என்.ராம், முன்னாள் மத்திய அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா, எடிட்டர்ஸ் கில்ட் அமைப்பு மற்றும் 7 பேர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி. ரமணா, நீதிபதிகள் சூர்யகாந்த், அனிருத்த போஸ் ஆகியோர் கொண்ட அமர்வு விசாரிக்கிறது. இந்த வழக்கில் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை சார்பில் மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா நேற்று உச்ச நீதிமன்றத்தில் 2 பக்க பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்தார்.

மத்திய அரசின் பிரமாணப் பத்திரத்தில் கூறியிருப்பதாவது:

இஸ்ரேலின் பெகாசஸ் மென்பொருள் மூலம் இந்தியர்களின் செல்போன் ஒட்டுக் கேட்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டு தவறானது. முழுமை பெறாத தகவல்கள் மற்றும் ஊடகத்தில் வெளியான ஆதாரமற்ற செய்திகளை அடிப்படையாக வைத்தே வழக்குத் தொடரப்பட்டுள்ளது. தலைவர்கள், பத்திரிகையாளர்கள் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படவில்லை.

பெகாசஸ் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி உபாத்யாயா ஏற்கெனவே தெளிவுபடுத்தியுள்ளார். அனைத்துவிதமான குற்றச்சாட்டுகளையும் எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடமின்றி மறுக்கிறோம். தனிப்பட்ட நலன்களுக்காக தவறான தகவல்கள் பரப்பிவிடப்படுகின்றன. பெகாசஸ் விவகாரத்தில் எழுப்பப்பட்ட அனைத்து பிரச்சினைகளையும் விசாரிக்க மத்திய அரசு சார்பில் விரைவில் நிபுணர் குழு அமைக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தில் புதியவர்கள் நியமனம்

# கோயில்களில் பழைய அர்ச்சகர்களை வெளியேற்றியதாக சர்ச்சை

● அறநிலையத் துறை அதிகாரிகள் திட்டவட்ட மறுப்பு

■ சென்னை

அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தின் கீழ் கோயில்களில் புதிதாக அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பழைய அர்ச்சகர்கள் வெளியேற்றப்பட்டதாக சர்ச்சை எழுந்துள்ளது. எனினும், அவர்களது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவர்கள் பணியில் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளதாக இந்து சமய அறநிலையத்துறை விளக்கம் அளித்துள்ளது.

தமிழகம் முழுவதும் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 24 அர்ச்சகர்களுக்கு பல்வேறு கோயில்களில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. ஆணை பெற்ற அர்ச்சகர்கள் பணியில் இணைந்துள்ளனர்.

இந்நிலையில், சில கோயில்களில் ஏற்கெனவே பணியில் இருக்கும் அர்ச்சகர் பணியிடத்துக்கு புதிதாக அர்ச்சகர்களை நியமித்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால், ஏற்கெனவே பணிபுரிந்தவர்கள் அப்பணியிடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதாக சர்ச்சை எழுந்தது.

மேலும், சென்னை சைதாப்பேட்டையில் உள்ள காரணீஸ்வரர் கோயிலில் அர்த்தஜாம பூஜைகள் முடிந்த பின்பு புதிதாக பொறுப்பேற்றவர் அதிகாரிகள் முன்னிலையில் பூஜைகளை மேற்கொண்டதாக சர்ச்சை எழுந்தது.

இதுதொடர்பாக, பாதிக்கப்பட்ட அர்ச்சகர்கள் சிலர் கூறியதாவது: நாங்கள் ஏற்கெனவே பல ஆண்டுகளாக அர்ச்சகர்களாக பணியாற்றி வருகிறோம். ஆனால், எங்களுடைய பணியிடத்திலேயே புதிதாக அர்ச்சகரை நியமனம் செய்துள்ளனர். இதனால், பல ஆண்டுகளாக இப்பணியில் ஈடுபட்டுள்ள எங்களின் வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய அர்ச்சகர்களை நியமிக்கும்போது அவசர கதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் காலியிடம் இருக்கும் இடத்தில் பணி நியமனங்களை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதுதொடர்பாக, இந்து சமய அறநிலையத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தமிழகம் முழுவதும் கோயில்களில் தினக்கூலி அடிப்படையில் அர்ச்சகர்கள் பணியாற்றி வந்தனர். ஒவ்வொரு கோயில்களிலும் குறிப்பிட்ட பணியாளர்கள் தான் பணியாற்ற வேண்டும் என்ற விதி உள்ளது. அதனடிப்படையில், ஓய்வு பெறும் வயது உள்ளிட்ட பல்வேறு காரணங்களை கருத்தில் கொண்டுதான் தற்போது நிரந்தர அர்ச்சகர்கள் அதே பணியிடங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பழைய அர்ச்சகர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, அவர்கள் தொடர்ந்து பணியாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சைதாப்பேட்டை காரணீஸ்வரர் கோயிலில் ஆகம விதிகளை மீறி பூஜைகள் நடைபெறவில்லை. ஆகம விதிகள் மீறப்பட்டதாக பரவிய செய்தியில் உண்மையில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

**பெரியார் சிலைக்கு மாலை அணிவிப்பு**

இதற்கிடையே, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டத்தை வரவேற்று, கும்பகோணத்தை அடுத்த நாச்சியார்கோவிலில் நேற்று கிராம பூசாரிகள், பேருந்து நிலையத்தில் உள்ள பெரியார், அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

முறைகேடுகள் சரி செய்த பிறகு நகை, பயிர்க்கடன் தள்ளுபடி

# கொடுத்த வாக்குறுதியில் இருந்து பின்வாங்க மாட்டோம்

● பேரவையில் முதல்வர் ஸ்டாலின் திட்டவட்டம்

■ சென்னை

பயிர்க் கடன், நகைக் கடன் வழங்கியதில் நடந்துள்ள தவறுகளை சரிசெய்த பிறகு நிச்சயமாக அந்தக் கடன்கள் தள்ளுபடி வழங்கப்படும். நாங்கள் அளித்த வாக்குறுதியில் இருந்து ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் என்று பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதிபட தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் பொது மற்றும் வேளாண் பட்ஜெட்கள் மீதான விவாதம் நேற்று தொடங்கியது. விவாதத்தை தொடங்கிவைத்து பேசிய திருமங்கலம் தொகுதி அதிமுக உறுப்பினர் ஆர்.பி.உதயகுமார், விவசாயக் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி குறித்து திமுக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்து முதல்வர் ஸ்டாலின் கூறியதாவது:

முன்னாள் அமைச்சர் உதயகுமார் இங்கே பல கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவற்றுக்குரிய விளக்கங்களை அமைச்சர்கள் தந்துள்ளனர். எனவே, நான் அதிகம் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. வெள்ளை அறிக்கை என்பது தேர்தல் நேரத்தில் திமுக வழங்கிய உறுதிமொழிகளை எல்லாம் நிறைவேற்ற முடியாத நிலையிலே பின்வாங்குவதற்கான முயற்சி என்ற பொருள்பட பேசியுள்ளார்.

நகைக்கடன் வழங்கப்பட்டதில் பல முறைகேடுகள் நடந்துள்ளன. விவசாயிகள் பயிர்க் கடனை தள்ளுபடி செய்வதற்காக கணக்கிட்டு பார்க்கும்போது அதிலும் பல கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளன. அதையெல்லாம் முறையாக சரிசெய்து, அதற்கு பிறகு நிச்சயமாக தள்ளுபடி வழங்கப்படும் என்ற உறுதிமொழியை சொல்லியிருக்கிறோம்.

நீங்கள் (அதிமுக) ஆட்சிக்கு வருவதற்கு முன்பு அளித்த வாக்குறுதிகளை, உறுதிமொழிகளை நாங்களும் மறக்கவில்லை. நாட்டு மக்களும் மறக்கவில்லை. அவற்றில் சிலவற்றை நிறைவேற்றியுள்ளீர்கள். பலவற்றை நிறைவேற்றவில்லை. அதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

உதாரணத்துக்கு, இலவச செல்போன் தரப்படும் என்று சொன்னீர்கள், தந்தீர்களா? ஆவின் பால் பாக்கெட் விலை ரூ.25 என்று சொன்னீர்கள். கொடுத்தீர்களா? அம்மா மினரல் வாட்டர் இலவசமாக தரப்படும் என்று சொன்னீர்களே, யாருக்காவது கொடுத்திருக்கிறீர்களா? குறைந்த விலையிலே அவசியமான மளிகைப் பொருட்கள் தரப்படும் என்று வாக்குறுதி கொடுத்தீர்கள், அது கொடுக்கப்பட்டதா?

அனைவருக்கும் அம்மா வங்கி அட்டை கொடுப்போம் என்றீர்கள், அந்த வாக்குறுதி என்ன ஆனது? கோ-ஆப்டெக்ஸ் துணிகள் வாங்க ரூ.500 கூப்பன் தந்தீர்களா? பண்ணை மகளிர் குழுக்கள் அமைப்போம் என்றீர்கள், அதை அமைத்தீர்களா? அனைத்துப் பழங்களுக்குமான சிறப்பு அங்காடிகளை உருவாக்குவோம், கட்டித் தருவோம் என்று சொன்னீர்கள், எங்கேயாவது கட்டிக் கொடுத்திருக்கிறீர்களா? அனைத்துப் பொது இடங்களிலும் வை-பை வசதி ஏற்படுத்தித் தருவோம் என்று கூறினீர்கள், அப்படி வசதி ஏற்படுத்தித் தந்த இடத்தை எங்கேயாவது காட்டுங்கள்?.

டாக்டர் அம்பேத்கார் பவுண்டேஷன் அமைத்தீர்களா? பட்டு ஜவுளிப் பூங்கா உருவாக்கினீர்களா? சென்னையில் மோனோ ரயில் விடப்படும் என்று சொன்னீர்கள். அதற்கு பிறகு கருணாநிதி கொண்டு வந்த மெட்ரோ ரயில் திட்டத்தைத்தான் நிறைவேற்றினீர்கள். இப்படி பெரிய பட்டியலே இருக்கிறது.

விவசாயிகளின் பயிர்க்கடன், நகைக்கடனை பொறுத்தவரை, எங்கெங்கு முறைகேடு நடந்திருக்கிறது, எங்கெங்கு தவறுகள் நடந்துள்ளன என்பது குறித்து கூட்டுறவுத் துறை அமைச்சர் தனது துறை மானியக் கோரிக்கை விவாதத்துக்கு பதில் அளிக்கும்போது நிச்சயமாக ஆதாரப்பூர்வமாக அவற்றை எடுத்துச் சொல்வார். தேர்தல் நேரத்தில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவதுதான் எங்களுடைய லட்சியம், அதுதான் எங்களுடைய பணி. அதனால், யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் வரவேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறு முதல்வர் தெரிவித்தார்.

# பளிச் பத்து 48

தொகுப்பு: பி.எம்.சுதிர்




- சிங்கங்கள் 14 வயதுவரை உயிர்வாழும்.
- பெண் சிங்கங்கள் பசியாற நாளொன்றுக்கு 5 கிலோ இறைச்சியும், ஆண் சிங்கங்களுக்கு நாளொன்றுக்கு 7 கிலோ இறைச்சியும் தேவைப்படும்.
- தெற்கு மற்றும் கிழக்கு ஆப்பிரிக்காவில் அதிக அளவிலான சிங்கங்கள் உள்ளன. உலகில் தற்போது சுமார் 40 ஆயிரம் சிங்கங்களே இருக்கின்றன.
- சிங்கங்கள் அதிகம் சோம்பல் கொண்ட விலங்காக கருதப்படுகின்றன. அவை நாளொன்றுக்கு 20 மணிநேரத்துக்கும் மேல் உறங்கும்.
- பெண் சிங்கங்கள் 120 முதல் 182 கிலோ வரை எடை கொண்டதாகவும், ஆண் சிங்கங்கள் 150 முதல் 250 கிலோ வரை எடை கொண்டதாகவும் இருக்கும்.
- சிங்கங்களின் பார்வை, மனிதர்களின் பார்வையைவிட 5 மடங்கு கூர்மையானதாக இருக்கும்.
- சிங்கங்களால் மணிக்கு 80 கிலோமீட்டர் வேகத்தில் ஓடமுடியும்.
- பெண் சிங்கங்கள் பெரும்பாலும் கூட்டமாகச் சென்றே வேட்டையாடும்.
- சிங்கங்களால் நான்கைந்து நாட்கள்கூட தண்ணீர் குடிக்காமல் வாழ முடியும்.
- ஆண் சிங்கங்களின் கர்ஜனை 5 கி.மீ. தூரம் வரைகூட கேட்கும்.

## நல்லதே நடக்கும்

● ஜோதிஷபூஷண் வேங்கடசுப்பிரமணியன் ●

# 17-08-2021

பிலவ 1 ஆவணி

**செவ்வாய்க்கிழமை**

**திதி** : தசமி பின்னிரவு 2.46 மணி வரை. அதன் பிறகு ஏகாதசி.
**நட்சத்திரம்** : கேட்டை பின்னிரவு 1.43 மணி வரை. அதன் பிறகு மூலம்.
**நாமயோகம்** : வைதிருதி நள்ளிரவு 12.48 மணி வரை. பிறகு விஷ்கம்பம்.
**நாமகரணம்** : தைதுலம் பிற்பகல் 3.58 மணி வரை. அதன் பிறகு கரசை.
**நல்ல நேரம்** : காலை 8.00-9.00, மதியம் 12.00-1.00, இரவு 7.00-8.00 மணி வரை.
**யோகம்** : சித்தயோகம் பின்னிரவு 1.43 மணி வரை. பிறகு அமிர்தயோகம்.
**சூலம்** : வடக்கு, வடமேற்கு காலை 10.48 மணி வரை.
**பரிகாரம்** : பால்.
**சூரிய உதயம்**: சென்னையில் காலை 5.57. **அஸ்தமனம்** : மாலை 6.27.

| | | | |
|---|---|---|---|
| ராகு காலம் | மாலை 3.00-4.30 | நாள் | வளர்பிறை |
| எமகண்டம் | காலை 9.00-10.30 | அதிர்ஷ்ட எண் | 3, 7, 8 |
| குளிகை | மதியம் 12.00-1.30 | சந்திராஷ்டமம் | கார்த்திகை |

நான்கு தலைமுறையாக பாரம்பரியமிக்க தங்க நகை நிறுவனம்
HOUSE OF L.K.S. LKS GH SINCE 1925
T.NAGAR LKS®
GOLD HOUSE (P) LTD
SINCE 1925
T.NAGAR | ANNA NAGAR | TAMBARAM
"LKS - GOLD" IS CASH IN HAND

**மேஷம்:** மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்து செல்லுங்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பயம் இருந்து கொண்டேயிருக்கும்.

**ரிஷபம்:** தன்னம்பிக்கையுடன் எதையும் செய்யத் தொடங்குவீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். மனைவிவழி உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பணவரவு திருப்தி தரும்.

**மிதுனம்:** வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். பழைய சிக்கல்கள் தீரும். குடும்பத்தாரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பங்கு வர்த்தகம் லாபம் தரும்.

**கடகம்:** முக்கிய வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களைக் கண்டறிவீர்கள். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் சென்று நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள். புதிய கோணத்தில் சிந்தித்து பழைய சிக்கல்களைத் தீர்ப்பீர்கள். வீடு, வாகனப் பராமரிப்பு செலவுகள் எதிர்பார்த்ததை விட அதிகரிக்கும்.

**கன்னி:** சவால்கள், விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அரசாங்கத்தாலும், அதிகாரப் பதவியில் இருப்பவர்களாலும் ஆதாயம் உண்டு. அக்கம்பக்கத்தினர் ஆதரவாக இருப்பார்கள்.

**துலாம்:** பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் அனுகூலமும் உண்டு. எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து நீங்கும். வேலைகளை உடனே முடிக்க வேண்டும் என்று நினைப்பீர்கள். ஆன்மிகப் பயணம் செல்ல திட்டமிடுவீர்கள்.

**தனுசு:** வாகனத்தை இயக்கும்போது அலைபேசியில் பேச வேண்டாம். உணவில் காரம், வாயு பதார்த்தங்களைத் தவிர்ப்பது நல்லது. சகோதரர் வகையில் திடீர் சங்கடங்கள் வரும்.

**மகரம்:** எதையும் தாங்கும் மனவலிமை கிட்டும். தாய்வழி உறவினர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பரைச் சந்திப்பீர்கள்.

**கும்பம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார்.

**மீனம்:** பழைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். புது வாகனம் வாங்க முயற்சிப்பீர்கள்.

# அரசு மருத்துவக் கல்லூரிகளில் நேரடி வகுப்புகள் தொடக்கம்

■ சென்னை

தமிழகத்தில் கரோனா தொற்று பாதிப்பு குறைந்ததால், 6 மாதங்களுக்குப்பின் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் நேரடி வகுப்புகள் நேற்று தொடங்கின.

தமிழகத்தில் கரோனா தொற்று 2-வது அலை கடந்த பிப்ரவரியில் பரவத் தொடங்கியது. இதையடுத்து, மருத்துவக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் வகுப்புகள் எடுக்கப்பட்டன. இந்நிலையில், தொற்று பாதிப்பு குறைந்ததைத் தொடர்ந்து 6 மாதங்களுக்குப்பின் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலும் நேரடி வகுப்புகள் நேற்று தொடங்கின.

**'தொற்று இல்லை' சான்று அவசியம்**

இதைத் தொடர்ந்து, 48 மணி நேரத்துக்கு முன்பு எடுக்கப்பட்ட பரிசோதனையில் 'கரோனா தொற்று இல்லை' என்ற சான்றுடன் மாணவ, மாணவிகள் முகக் கவசம் அணிந்துகல்லூரிகளுக்கு வந்தனர்.



▲ தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் நேற்று முதல் நேரடி வகுப்புகள் தொடங்கின. சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் நேரடி வகுப்பில் பங்கேற்ற மாணவ, மாணவிகள். படம்: ம.பிரபு

தனிமனித இடைவெளியைப் பின்பற்றி வகுப்பறைகளில் மாணவர்களுக்கு பேராசிரியர்கள் பாடங்கள் எடுத்தனர்.

இதுகுறித்து ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி டீன் ஜெயந்தி, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி டீன் சாந்திமலர் கூறும்போது, "தமிழக அரசின் வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் 2 தவணை தடுப்பூசிகளை போட்டிருக்க வேண்டும்.

வகுப்பறையில் தனிமனித இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. வகுப்பறைகளில் தொற்று பாதிப்பு ஏற்படாத வகையில் பாடங்கள் எடுக்கப்படுகின்றன" என்றனர்.

### பிடெக் மாணவர்கள் ஒரே நேரத்தில்

# பொறியியலும் படிக்க அனுமதி

● கல்வி நிறுவனங்களுக்கு ஏஐசிடிஇ சுற்றறிக்கை

■ சென்னை

பிடெக் மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கும்போதே, ஒரே நேரத்தில் பொறியியல் படிப்பையும் படிக்க அனுமதி வழங்கலாம் என்று ஏஐசிடிஇ, அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் ஏஐசிடிஇ அனுப்பிய சுற்றறிக்கை:

ஏஐசிடிஇ-யின் நிர்வாகக் குழுவின் 144-வது ஆலோசனைக் குழு ஜூலை 13-ம் தேதி நடைபெற்றது. அதில், பிடெக் மாணவர்கள், தாங்கள் படித்துக் கொண்டிருக்கும்போதே ஒரேநேரத்தில் பொறியியலும் படிக்க அனுமதி வழங்கவேண்டும் என்பது தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

**லேட்டரல் என்ட்ரி முறையில்**

அதன்படி, தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களில் பிடெக் படிப்பை எடுத்துப் படிக்கும் மாணவர்களை, லேட்டரல் என்ட்ரி அடிப்படையில் தகுதியான பொறியியல் பிரிவில் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. அவர்களுக்குத் தேவையான செய்முறையையும் படிக்க உரிய அனுமதி வழங்கப்படுகிறது. இது தொடர்பாக கூடுதல் விவரங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, உயர்கல்வி பயிலும் மாணவர்கள், தேவைப்படும் நேரத்தில் படிப்பை நிறுத்தி, அதற்குப் பொருத்தமான சான்றிதழ் பெறுதல், மீண்டும் படிப்பைத் தொடர விரும்பும்போது எளிதான சேர்க்கை உள்ளிட்ட வழிமுறைகளை புதிய தேசிய கல்விக் கொள்கையின்படி ஏஐசிடிஇ வடிவமைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

### தனிநபர், கார் கடன்களுக்கு

# பரிசீலனைக் கட்டணம் தள்ளுபடி

● சுதந்திர தினத்தையொட்டி எஸ்பிஐ அறிவிப்பு

■ சென்னை

பொதுத்துறை வங்கியான பாரத ஸ்டேட் வங்கி, நாட்டின் 75-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, தனது வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சலுகைகளை அறிவித்துள்ளது.

இதன்படி, கார் கடன் பெறும் வாடிக்கையாளர்களுக்கு அதற்கான பரிசீலனைக் (புராசசிங்) கட்டணம் 100 சதவீதம் தள்ளுபடி செய்யப்படுகிறது. அத்துடன், யோனோ செயலி மூலம் கார் கடன் பெற விண்ணப்பித்தால், வட்டியில் 25 அடிப்படை புள்ளிகள் சலுகைகள் வழங்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு குறைந்தபட்சமாக வருடத்துக்கு 7.5 சதவீதம் வட்டி வசூலிக்கப்படும்.

இதேபோல், நகைக் கடன் பெறும் வாடிக்கையாளர்களுக்கு வட்டியில் 75 அடிப்படை புள்ளிகள் சலுகைகள் வழங்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு 7.5 சதவீதமாக வட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனிநபர் மற்றும் ஓய்வூதிய கடன் பெறும் வாடிக்கையாளர்களுக்கு பரிசீலனைக் கட்டணம் நூறு சதவீதம் ரத்து செய்யப்படும். கரோனா தடுப்பு பணியில் ஈடுபட்ட முன்கள சுகாதாரப் பணியாளர்கள் தனிநபர் கடன் பெற விண்ணப்பித்தால், அவர்களுக்கு வட்டியில் 50 அடிப்படை புள்ளிகள் சலுகை வழங்கப்படும்.

பிளாட்டினம் கால வைப்பு என்ற திட்டத்தின் கீழ், 75 நாட்கள், 75 வாரம் மற்றும் 75 மாதங்களுக்கு ஆக.15 முதல் செப்.14-ம் தேதி வரை செய்யப்படும் டெபாசிட் தொகைக்கு வழங்கப்படும் வட்டியில், கூடுதல் வட்டியாக 15 அடிப்படை புள்ளிகள் வழங்கப்படும் என்று பாரத ஸ்டேட் வங்கி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐஆர்சிடிசி சார்பில் ஆக.29-ல் மதுரையில் இருந்து

# உலகின் உயரமான படேல் சிலைக்கு சுற்றுலா ரயில்

● தமிழகத்தில் இருந்து முதல்முறையாக இயக்கப்படுகிறது

■ சென்னை

தமிழகத்தில் இருந்து முதல்முறையாக, குஜராத்தில் உள்ள உலகின் உயரமான படேல் சிலைக்கு ஐஆர்சிடிசி சார்பில் சுற்றுலா ரயில் இயக்கப்படுகிறது. இதில் ஜெய்ப்பூர் கோட்டைகள், உதய்பூர் ஏரிகளைக் காணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஐஆர்சிடிசி அதிகாரிகள், சென்னையில் நேற்று கூறியதாவது:

நாடு முழுவதும் கரோனா பாதிப்பு குறைந்து வருவதால், மாநில அரசுகள் பல்வேறு தளர்வுகளை அளித்து வருகின்றன. நீண்ட நாட்களாக வீட்டிலேயே முடங்கியிருந்த மக்களும் வெளியூர்கள், சுற்றுலாத் தலங்களுக்குச் செல்ல ஆர்வம் காட்டி வருகின்றனர். அதன்படி, தேவைக்கு ஏற்ப, ஆன்மிக மற்றும் இயற்கை எழில் மிகுந்த சுற்றுலாத் தலங்களுக்கு மீண்டும் ஐஆர்சிடிசி சுற்றுலா ரயில்கள் இயக்கப்படுகின்றன. மக்களும் ஆர்வத்துடன் டிக்கெட் முன்பதிவு செய்து வருகின்றனர்.

**▼ திண்டுக்கல், கரூர், ஈரோடு, சேலம் வழியாக சென்னை வந்து, பிறகு ஹைதராபாத் அருங்காட்சியகம், ஜெய்ப்பூர் கோட்டைகள், உதய்பூர் அழகிய ஏரிகள், குஜராத்தில் மகாதேவர் கடல்கோயில், படேல் சிலை ஆகியவற்றை காண ஏற்பாடு.**

இந்நிலையில், குஜராத்தில் இருக்கும் உலகின் உயரமான சர்தார் வல்லபபாய் படேல் சிலையைக் காண, தமிழகத்தில் இருந்து முதல்முறையாக ஐஆர்சிடிசி சுற்றுலா ரயில் இயக்கப்படுகிறது. ஜெய்ப்பூர் கோட்டைகள், உதய்பூர் ஏரிகளைக் காணவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மதுரையில் இருந்து இந்த சுற்றுலா ரயில் வரும் 29-ம் தேதி புறப்பட்டு, திண்டுக்கல், கரூர், ஈரோடு, சேலம் வழியாக சென்னை வந்து, பிறகு ஹைதராபாத் அருங்காட்சியகம், ஜெய்ப்பூர் கோட்டைகள், உதய்பூர் அழகிய ஏரிகள், குஜராத்தில் இருக்கும் மகாதேவர் கடல்கோயில், உலகின் உயரமான சர்தார் வல்லபபாய் படேல் சிலை ஆகியவற்றைக் காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த சுற்றுலா 12 நாட்கள் கொண்டது. போக்குவரத்து, சைவ உணவுகள் உட்பட ஒருவருக்கு ரூ.11,340 கட்டணம். இதற்கான முன்பதிவு தொடங்கியுள்ளது. மேலும் தகவல்களுக்கு 9003140680, 9840948484 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# ஐபிஎஸ் அதிகாரிகள் 7 பேர் இடமாற்றம்

■ சென்னை

ஐபிஎஸ் அதிகாரிகள் 7 பேரை இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

கல்வி பயில்வதற்காக விடுப்பில் சென்றிருந்த ஐ.ஜி. அபின் தினேஷ் மீண்டும் பணிக்கு திரும்பிய நிலையில், சென்னை பொருளாதார குற்றப்பிரிவு ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த பொறுப்பில் இருந்த கல்பனா நாயக் இடமாற்றம் செய்யப்பட்டு, ரயில்வே ஐ.ஜி.யாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ராணிப்பேட்டை எஸ்.பி. தேஷ்முக் சேகர் சஞ்சய், மாற்றப்பட்டு மதுரை 6-வது பட்டாலியன் கமாண்டன்ட் ஆக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த பொறுப்பில் இருந்த இளங்கோ மாற்றப்பட்டு சென்னை ரயில்வே எஸ்.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். அப்பொறுப்பில் இருந்த தீபா சத்யன் மாற்றப்பட்டு, ராணிப்பேட்டை எஸ்.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ராமநாதபுரம் எஸ்.பி. ஜெயந்தி மாற்றப்பட்டு சேலம் மண்டல அமலாக்கப் பிரிவு எஸ்.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த பொறுப்பில் இருந்த மகேஷ்குமார் மாற்றப்பட்டு நில அபகரிப்பு தடுப்பு சிறப்பு பிரிவு எஸ்.பி.யாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத்தகவல் தமிழக உள்துறை செயலர் எஸ்.கே.பிரபாகர் பிறப்பித்துள்ள உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நீலகிரி, கோவையில் 4 நாட்கள் மழைக்கு வாய்ப்பு

■ சென்னை

நீலகிரி, கோவை மற்றும் கடலோர மாவட்டங்களில் அடுத்த 4 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் நா.புவியரசன் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, வெப்பச்சலனம் காரணமாக 17, 18-ம் தேதிகளில் கடலோர மாவட்டங்கள்,அதை ஒட்டிய உள் மாவட்டங்கள், நீலகிரி, கோவை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசான மழையும், 19, 20-ம் தேதிகளில் கடலோர மாவட்டங்கள், உள் மாவட்டங்கள், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழையும், மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், திருப்பூர், தென்காசி மாவட்டங்களில் ஒருசில இடங்களில் மிதமான மழையும் பெய்யக் கூடும். இவ்வாறு அவர் கூறினார்.

### 'இந்து தமிழ் திசை', அம்ரிதா விஷ்வ வித்யாபீடம் உடன் இணைந்து வழங்கும் 'உயர்வுக்கு உயர்கல்வி'

# 'மெக்கட்ரானிக்ஸ்' படிப்புகளில் மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலம்

## ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியில் துறை வல்லுநர்கள் தகவல்

■ சென்னை

'மெக்கட்ரானிக்ஸ்' படிப்புகளுக்கு சிறந்த எதிர்காலம் உள்ளதால் இந்த துறையை மாணவர்கள் தேர்வு செய்து படிக்கலாம் என்று 'இந்து தமிழ் திசை' நாளிதழ், அம்ரிதா விஷ்வ வித்யாபீடம் இணைந்து நடத்தும் 'உயர்வுக்கு உயர்கல்வி' ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியில் வல்லுநர்கள் தெரிவித்தனர்.

பிளஸ் 2 முடித்துள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் 'இந்து தமிழ் திசை' நாளிதழும், அம்ரிதா விஷ்வ வித்யாபீடமும் இணைந்து 'உயர்வுக்கு உயர்கல்வி' என்ற தொடர் நிகழ்ச்சியை ஆன்லைனில் தொடர்ந்து நடத்தி வருகிறது. கடந்த 14-ம் தேதி நடந்த 17-வது நிகழ்வில் 'மெக்கட்ரானிக்ஸ்' எனும் தலைப்பில் இத்துறை வல்லுநர்கள் உரையாற்றியதாவது:

**திருவள்ளூர் கேட்டர் பில்லர் இந்தியா நிறுவன நியூ புராஜெக்ட் மேனேஜர் டாக்டர் ஜி.சரவணன்:** மாணவர்கள் உயர்கல்வி செல்லும்போது தங்களுக்கு பிடித்த துறையை தேர்வுசெய்து படிக்க வேண்டும். அப்போதுதான் அந்தத் துறையில் சிறந்த வளர்ச்சியை பெறமுடியும். மெக்கானிக்கல், எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அம்சங்கள் ஒருங்கிணைந்ததே 'மெக்கட்ரானிக்ஸ்' படிப்பாகும். நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில் மனிதனின் வேலைகளில் இயந்திரங்கள் பங்களிப்பு அதிகம் வரத் தொடங்கிவிட்டன. வாஷிங்மெஷின், செல்போன், டிவி, கார் உள்ளிட்ட அனைத்து சாதனங்களிலும் 'மெக்கட்ரானிக்ஸ்' படிப்பின் வடிவமைப்பு சாராம்சங்கள் அடங்கியுள்ளன. இதுதவிர ஆட்டோமொபைல், ஏரோஸ்பேஸ், மருத்துவ உபகரணங்கள் தயாரிப்பு, ரோபோட்டிக்ஸ் உள்ளிட்ட பெரும்பாலான துறைகளில் டிஜிட்டல் தொழில்நுட்பத் தேவை உயர்ந்து வருகிறது.

அதனுடன், பன்முகத் துறைகள் சார்ந்த பயிற்சிகள் உள்ளதால் வேலைவாய்ப்புகளிலும் 'மெக்கட்ரானிக்ஸ்' படித்தவர்களுக்கு முன்னுரிமை தரத் தொடங்கியுள்ளன. எனவே, மாணவர்கள் தைரியமாக இந்த படிப்பைத் தேர்வுசெய்து படிக்கலாம். அதேநேரம், கல்வி தவிர்த்து கற்றல் திறன், நேர்மறையான சிந்தனை, ஆய்வு மனப்பான்மை, சிறந்த மொழி ஆளுமை, பேச்சுத் திறன், தகவல் தொடர்பு உட்பட இதர திறன்களை மேம்படுத்திக் கொண்டால் இந்த துறைகளில் மாணவர்கள் பல்வேறு சாதனைகள் புரிய முடியும்



▲ ஜி.சரவணன்



▲ பி.ஸ்ரீராம்



▲ வி.சிவ்குமார்

**சென்னை இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி சேர்மன் பி.ஸ்ரீராம்:** 'மெக்கட்ரானிக்ஸ்' பல்வேறு துறைகளின் ஒருங்கிணைந்த படிப்பாகும். 60 முதல் 70 சதவீத பாடங்கள் மெக்கானிக்கல் துறையுடன் சார்ந்திருக்கும். மனிதப் பயன்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட படிப்பு என்பதால் கால வளர்ச்சிக்கேற்ப மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். மேலும், மருத்துவம், விவசாயம் உட்பட அநேக துறைகளிலும் இதன் பங்களிப்பு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதன் காரணமாக 'மெக்கட்ரானிக்ஸ்' துறை வேகமாக வளர்ச்சி பெறத் தொடங்கியுள்ளது. 'மெக்கட்ரானிக்ஸ்' துறை பல்வேறு உபப் பிரிவுகளை உள்ளடக்கியது. அதனால் இந்த படிப்புகளில் சேரும் மாணவர்கள் 3-ம் ஆண்டிலேயே தங்களுக்கு ஏற்ற பிரிவுகளைத் தேர்வு செய்து, அதில் கூடுதல் கவனம் செலுத்தி திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

செய்முறை வடிவிலான கற்றலுக்கு முக்கியத்துவம் தருவதுடன், நமது அன்றாட வாழ்வியல் சிக்கலுக்கான தீர்வுகளை முன்னிறுத்தி சாதனங்கள் வடிவமைப்பில் ஈடுபட வேண்டும். அதேபோல், இளநிலை டிகிரியுடன் நிறுத்திவிடாமல் முதுநிலை பட்டப்படிப்பையும் படித்தால் கூடுதல் பலன் கிடைக்கும்.




**சென்னை எம்இஎல் சிஸ்டம்ஸ் அண்ட் சர்வீசஸ் நிறுவன சீஃப் ஆபரேட்டிங் அதிகாரி வி.சிவ்குமார்:** நம் அன்றாட வாழ்வில் இயந்திரங்களின் பங்களிப்பு அதிகரித்துவிட்டது. அடுத்த 5 ஆண்டுகளில் ரோபோட்டிக்ஸ், செயற்கை நுண்ணறிவு, ஆட்டோமொபைல் உள்ளிட்ட துறைகள் மிகப்பெரும் வளர்ச்சியை பெறவுள்ளன. எனவே, நமது எதிர்கால வாழ்வியல் பெரும்பாலும் தொழில்நுட்பங்களைச் சார்ந்து இயங்கக் கூடியதாக மாறும்.

அதனால் தற்போது 'மெக்கட்ரானிக்ஸ்' படிப்பவர்கள் டிகிரி முடித்து வெளியேறும்போது பெரும் வரவேற்பு கிடைக்கும். இந்தியா மட்டுமின்றி பல்வேறு வெளிநாடுகளில் வேலைவாய்ப்புகள் குவிந்துள்ளன. துறை சார்ந்த அடிப்படை புரிதலுடன், தகுதிகளைத் தொடர்ந்து நீங்கள் வளர்த்துக் கொள்வது அவசியம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

பின்னர், 'மெக்கட்ரானிக்ஸ்' படிப்பு, வேலைவாய்ப்புகள் பற்றிய மாணவர்களின் கேள்விகளுக்கு துறை வல்லுநர்கள் விளக்கம் அளித்தனர். இந்த ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சியை 'இந்து தமிழ் திசை' நாளிதழின் முதுநிலை துணை ஆசிரியர் ம.சுசித்ரா நெறிப்படுத்தினார்.

இந்த நிகழ்ச்சியை சவீதா இன்ஜினீயரிங் காலேஜ், சென்னை இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி, ஸ்ரீஈஸ்வர் காலேஜ் ஆஃப் இன்ஜினீயரிங், சிவகாசி ஸ்ரீ காளீஸ்வரி காலேஜ், வேல்ஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜி ஆகியவை இணைந்து வழங்கின. இந்த நிகழ்வில் பங்கேற்கத் தவறியவர்கள் https://www.youtube.com/user/tamithehindu/videos என்ற லிங்க் மூலம் முழு நிகழ்வையும் பார்க்கலாம்.

# அரசு கட்டுப்பாட்டில் ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் கோயில்

## இந்து சமய அறநிலையத் துறை நடவடிக்கைக்கு பக்தர்கள் கடும் எதிர்ப்பு

■ சென்னை

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் ஆதிகேசவப் பெருமாள் கோயில் கொண்டு வரப்பட்டுள்ளதற்கு பக்தர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

சென்னை மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் பேயாழ்வார் கோயில், பழமைவாய்ந்த தொண்டைநாட்டுத் தலமாகும். இக்கோயில் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரான பேயாழ்வாரின் அவதாரத் தலமாகவும் அமைந்துள்ளது. டிரஸ்டிகள் மூலம் இக்கோயில் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், ஆதிகேசவப் பெருமாள் மற்றும் பேயாழ்வார் கோயிலின் தக்கார் பொறுப்புகளை, கடந்த 13-ம் தேதி தன்னிச்சையாக ஏற்கப்பட்டதாக அறநிலையத் துறை உதவி ஆணையர் அறிவித்தார். இதன் மூலம், இக்கோயில் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டுக்குள் திடீரென்று கொண்டுவரப்பட்டுள்ளது. இது பக்தர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து மூத்த பத்திரிகை\யாளர், ஆடிட்டர் எஸ்.குருமூர்த்தியிடம் கேட்டபோது, "சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பு 'நாங்கள் இந்து விரோதி இல்லை, வாக்களியுங்கள்' என்று கூறி திமுக மக்களிடம் வாக்கு கேட்டது. தேர்தலுக்குப்பிறகு, போர்வைபோட்டு மறைத்து வந்த அதன் இந்து விரோதம் வெளிவந்துக் கொண்டிருக்கிறது. 'அனைத்து சாதி அர்ச்சகர்' என்பதை தேர்தல் அறிக்கையில் கூறாமல், தேர்தலுக்குப் பிறகு அறிவித்தது ஓர் உதாரணம்.

இந்து கோயில் பாரம்பரியம் என்பது அனைத்து ஜாதிகளாலும், பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அரசியல் கட்சிகள் வரும், போகும். ஆட்சி இருக்கும். வீழும். ஆனால் பாரம்பரியம் அரசை நம்பி இருந்ததில்லை. அரசை மீறி தொடர்ந்து வருகிறது.

இந்த பாரம்பரியத்தை அழிக்க திமுக செய்யும் முயற்சி பெரும்கேடு விளைவிக்கும். அனைத்து சாதி அர்ச்சகர்கள் என்பதில், எந்த ஜாதி என்று சாதிகளுக்குள் பிரச்சினை ஏற்படும். திமுக இல்லாத பிரச்சனையை உருவாக்குகிறது. அந்த இந்து விரோத போக்குதான், கோயில்களை தன் ஆதிக்கத்தில் கொண்டு வரும் முயற்சிகளில் வெளிப்படுகிறது.

இருக்கும் கோயில்களையே ஒழுங்காகப் பராமரிக்க முடியவில்லை. இச்சூழலில், ஆதிகேசவப் பெருமாள் கோயிலை கையில் எடுப்பது திமுகவின் இந்து விரோத வெளிப்பாடுதான். இந்துக்கள் வன்முறையில் ஈடுபட மாட்டார்கள் என்பதால்தான், திமுக இதுபோன்ற செயல்களில் ஈடுபடுகிறது. இந்துக்கள் ஒன்றுபட்டு இதுபோன்ற செயல்களை எதிர்க்கவில்லை என்றால், திமுக இந்து விரோத செயல்களை தொடரவே செய்யும்" என்றார்.



▲ மயிலாப்பூரில் உள்ள ஸ்ரீஆதிகேசவப் பெருமாள் கோயில் முகப்பு.

### தேவையற்ற செயல்...

இந்து முன்னணியின் சென்னை மாநகரத் தலைவர் ஏ.டி.இளங்கோவன் கூறும்போது, "அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பல கோயில்களில் பராமரிப்பின்றி உள்ளன. ஏற்கெனவே உள்ள கோயில்களையே பராமரிக்க முடியாத நிலையில், புதிய கோயில்களை கையகப்படுத்துவது தேவையற்றது.

கோயிலில் தவறு நடந்திருந்தால், விளக்கம் கேட்டு நோட்டீஸ் அளித்து, உரிய காலஅவகாசம் அளிக்க வேண்டும். தவறு இருந்தால் அதை சரி செய்ய வேண்டியதுதான் அறநிலையத் துறையின் கடமை. அதைவிடுத்து, திடீரென்று முடிவெடுத்து, உடனடியாக கோயிலை அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டுவருவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அண்மைக்காலமாக, பாரம்பரிய பழக்கவழக்கங்களை கடைப்பிடித்து வரும் பழமையான கோயில்களை, இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் திட்டமிட்டு நடைபெற்று வருகிறதோ என்ற ஐயம் எழுகிறது" என்றார்.

மயிலாப்பூர் கேசவப் பெருமாள் சந்நிதி தெருவைச் சேர்ந்த பக்தர் கேசவதாசன் கூறும்போது, "பல ஆண்டுகளாக ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கு வந்து செல்கிறேன். கோயிலில் பூஜைகள் உரிய முறையில் நடைபெற்று, பக்தர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்யபட்டுள்ளன.

மேலும், ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு மரபு, பழக்கவழக்கங்கள் உள்ளன. அவ்வாறு இருக்கும் போது, திடீரென்று அறநிலையத் துறை கோயிலை கையில்எடுப்பது சரியானதாக இருக்காது. அறநிலையத் துறையின் நடவடிக்கை அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது" என்றார்.

இது தொடர்பாக அறநிலையத் துறையின் அதிகாரி ஒருவர் கூறும்போது, "ஆதிகேசவப் பெருமாள் கோயிலை நிர்வகித்து வந்தவர்களிடம் முறையாக தகவல் தெரிவித்து, சட்டப்படிதான் உதவி ஆணையரை தக்காராக நியமனம் செய்துள்ளோம். அவசரகதியில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏற்கெனவே, அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பல பெருமாள் கோயில்களில் ஆகம விதிகளைப் பின்பற்றி பூஜைகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, ஆதிகேசவப் பெருமாள் கோயிலிலும் ஆகம விதிகளின்படி பூஜைகள் நடத்தப்படும். மேலும், கோயிலுக்குத் தேவையான வளர்ச்சிப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படும்" என்றார்.

சட்டப்பேரவைத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலாத நிலையில், மக்களின் கவனத்தை திசை திருப்பும் நோக்கிலேயே இதுபோன்ற சர்ச்சைக்குரிய செயல்களில் அரசு ஈடுபடுவதாகக் கூறும் பக்தர்கள், இந்து சமயம் சார்ந்த விஷயங்களில் மட்டுமே இதுபோன்ற புண்படுத்தும் வகையிலான முடிவுகளை அரசு எடுப்பதாகவும் கூறுகின்றனர்.

ஊரக உள்ளாட்சித் தேர்தல்

# காங்கிரஸ் நிர்வாகிகளுடன் கே.எஸ்.அழகிரி ஆலோசனை

■ சென்னை

ஊரக உள்ளாட்சித் தேர்தல் தொடர்பாக காங்கிரஸ் நிர்வாகிகளுடன், அக்கட்சியின் மாநிலத் தலைவர் கே.எஸ்.அழகிரி நேற்று ஆலோசனை நடத்தினார்.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய 9 மாவட்டங்களில் செப். 15-ம் தேதிக்குள் உள்ளாட்சித் தேர்தலை நடத்தி முடிக்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சி சார்பில் சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம், மாநிலத் தலைவர் கே.எஸ். அழகிரி தலைமையில் நடைபெற்றது. இதில், சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் கு.செல்வப்பெருந்தகை மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

திமுகவிடம் எத்தனை இடங்களைக் கேட்பது என்பது தொடர்பாக, காங்கிரஸுக்கு வலுவான வாக்கு வங்கி உள்ள இடங்களை அடையாளம் கண்டு, பட்டியல் தயாரிக்க முடிவு செய்யப்பட்டது. மேலும், வெற்றி வாய்ப்புள்ள பெண்கள் மற்றும் பட்டியலின வேட்பாளர்களை தேர்வு செய்வது, கட்சி நிர்வாகிகளின் குடும்ப உறுப்பினர்களை தேர்வு செய்யாமல், கட்சிக்காக உழைக்கும் இளைஞர்கள், இளம் பெண்களை வேட்பாளர்களாக நிறுத்துவது உள்ளிட்டவை தொடர்பாக கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக, மாவட்டத் தலைவர் ஒருவர் 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

TRADEMARK & COPYRIGHT CAUTION NOTICE
Safelift Safelift
GOLDFINN TECHNOLOGIES

தேசிய பளுதூக்கும் போட்டியில்

# ரயில்வே டிக்கெட் பரிசோதகர் வெண்கலம் வென்று சாதனை

■ சென்னை

சென்னை ரயில்வே கோட்டத்தில் டிக்கெட் பரிசோதகராக பணியாற்றும் இளைஞர் அஜித், தேசிய அளவிலான பளுதூக்கும் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

இந்தியன் வெய்ட்லிஃப்டிங் பெடரேஷன் சார்பில் தேசிய பளுதூக்கும் சாம்பியன்ஷிப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டுக்கான போட்டி, பஞ்சாப் மாநிலம் பட்டியாலாவில் 4 நாட்கள் நடந்தது. இதில் ரயில்வே உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த வீரர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை ரயில்வே கோட்டத்தில் ஊழியராக பணியாற்றும் தமிழக வீரர் என்.அஜித் (22), சீனியர் பளுதூக்கும் பிரிவில் கலந்துகொண்டார். 73 கிலோ எடை பிரிவில் அவர் வெண்கலப் பதக்கம் பெற்றுள்ளார்.

ரயில்வேயில் கடந்த ஆண்டு பணியில் சேர்ந்த இவர், டிக்கெட் பரிசோதகராக பணியாற்றி வருகிறார். ரயில்வேயில் சேர்ந்த பிறகு கலந்துகொண்ட முதல் தேசிய போட்டியிலேயே வெண்கலப் பதக்கம் வென்று முத்திரை பதித்துள்ளார். அவருக்கு ரயில்வே கோட்ட மேலாளர் கணேஷ் மற்றும் அதிகாரிகள், சக ஊழியர்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

அகவிலைப்படி உயர்வை உடனே வழங்கக் கோரி

# தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

■ சென்னை

அகவிலைப்படி உயர்வை உடனடியாக வழங்கக் கோரி தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக அரசு ஊழியர்களுக்கு தற்போது 17 சதவீத அகவிலைப்படி அளிக்கப்பட்டு வருகிறது. கரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த ஆண்டில் இருந்து அகவிலைப்படி உயர்வு வழங்கப்படவில்லை.

இதனிடையே, மத்திய அரசு ஊழியர்களுக்கு கடந்த ஜூலை முதல் அகவிலைப்படி 17 சதவீதத்தில் இருந்து 28 சதவீதமாக உயர்த்தப்பட்டது. பொதுவாக, மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அளிக்கப்பட்ட உடனேயே அதற்கேற்ப, தமிழக அரசும் தனது ஊழியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்குவது வழக்கம்.

அதனபடி, மத்திய அரசைத் தொடர்ந்து தங்களுக்கும் அகவிலைப்படி 28 சதவீதமாக உயர்த்தப்படும் என தமிழக அரசு ஊழியர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், தமிழக அரசு ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் 1-ம் தேதி முதல் அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இதனால், அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.

இந்நிலையில், அகவிலைப்படி உயர்வை உடனடியாக அமல்படுத்தக் கோரி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் மாநிலம் முழுவதும் அரசு அலுவலகங்களில் ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

சென்னையில் அரசு துறைகளின் தலைமை அலுவலகங்கள் அமைந்துள்ள சேப்பாக்கம் எழிலகம் வளாகம், தேனாம்பேட்டை டிஎம்எஸ் வளாகம், கிண்டி அரசு ஐடிஐ, சைதாப்பேட்டை ஓய்வூதிய இயக்ககம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



**பொன்மொழி**

கடலில் மூழ்கினால்
முத்தை எடுக்கலாம்.
கடனில் மூழ்கினால்
சொத்தை இழக்கலாம்.

- ஸ்ரீஸ்தி

**இணையம்:** https://www.teachoo.com இணையதளத்தில் ஆங்கிலம், அறிவியல், கணிதம், ஜிஎஸ்டி உள்ளிட்ட வரிகள், கணக்குப் பதிவியல் பற்றி பல்வேறு விவரங்கள் தரப்பட்டுள்ளன. கணினியில் எக்ஸெல், டேலி போன்ற மென்பொருட்களை பயன்படுத்தும் முறையும் இதில் வீடியோ, ஆடியோ மூலம் கற்றுத் தரப்படுகிறது.

**பொதுஅறிவு:** கரோனா பேரிடர் காலத்தில் திரையரங்குகள் செயல்படாததால் ஓடிடி தளத்தில் பல திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. இந்தியாவில் தற்போது 30-க்கும் மேற்பட்ட ஓடிடி தளங்கள் உள்ளன. ஓடிடி தளங்களை பயன்படுத்துவோர் எண்ணிக்கை 2023-ல் 50 கோடியை எட்டும் என கணிக்கப்பட்டுள்ளது.

பட்ஜெட் மீதான விவாதம் தொடங்கியது

# முதியோர் உதவித் தொகையை உயர்த்தியது யார்?

● சட்டப்பேரவையில் திமுக - அதிமுக உறுப்பினர்கள் காரசார விவாதம்

■ சென்னை

முதியோர் உதவித் தொகையை உயர்த்தியது யார் என்பது தொடர்பாக சட்டப்பேரவையில் காரசார விவாதம் நடைபெற்றது.

பேரவையில் பட்ஜெட் மீதான விவாதம் நேற்று தொடங்கியது.

**விவாதத்தை தொடங்கிவைத்த முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார்:** முதல்வராக ஜெயலலிதா பொறுப்பேற்றபோது ரூ.1 லட்சம் கோடி கடன் இருந்தது. இருப்பினும் 1.83 கோடி குடும்ப அட்டைகளுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டத்தை அறிவித்தார்.

**நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்:** நிதிச் சுமை குறித்து வெள்ளை அறிக்கையில் தெளிவாக குறிப்பிட்டுள்ளோம். 18 சதவீதமாக இருந்த மாநில உற்பத்திக் கடன் 2006-07-ல் திமுக ஆட்சியில் 15 சதவீதமாக குறைந்தது. பிறகு, அதிமுக ஆட்சியில் 12 சதவீதம் ஆனது. கடந்த 4 ஆண்டுகளில் இது 27 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதிமுக ஆட்சியில் பேரவை விதி 110-ன் கீழ் அறிவித்த பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

**ஆர்.பி.உதயகுமார்:** 2011-ல் ஜெயலலிதா கொண்டுவந்த இலவச அரிசி வழங்கும் திட்டம் இதுவரை அமலில் உள்ளது. முதியோர் உதவித் தொகையை ஜெயலலிதா ரூ.1,000 ஆக உயர்த்தினார். மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது. இப்போது 52 லட்சம் மாணவர்கள் அதை பயன்படுத்துகின்றனர். ஆனால், இந்த பட்ஜெட்டில் புதுமையோ, புரட்சியோ இல்லை.

**நிதியமைச்சர்:** அதிமுக ஆட்சியில் 25 சதவீத பயனாளிகளுக்கு முதியோர் உதவித் தொகை நிறுத்தப்பட்டது. என் தொகுதியிலேயே 800 பேருக்கு நிறுத்தப்பட்டது.

**அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன்:** 2006 முதல் 2011 வரை 7 லட்சம் பேர் நீக்கப்பட்டுள்ளனர்.

**எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி:** திமுக ஆட்சியைவிட எங்கள் ஆட்சியில் முதியோர் உதவித் தொகை 60 சதவீதம் கூடுதலாக வழங்கப்பட்டது. ஆட்சியர், வட்டாட்சியர் மூலம் ஆய்வு செய்து, தகுதி இல்லாதவர்தான் நீக்கப்பட்டனர்.

**அமைச்சர் ஐ.பெரியசாமி:** அதிமுக ஆட்சியில் ரூ.200 ஆக வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகையை கருணாநிதி ரூ.500 ஆக உயர்த்தினார். நாட்டுக்கே வழிகாட்டியாக ரேஷன் அரிசி கிலோ ஒரு ரூபாய்க்கு வழங்கப்பட்டது.

**ஆர்.பி.உதயகுமார்:** மக்களுக்கு பயன் அளிக்கும் என்றால், நிதிச் சுமை இருந்தாலும் அத்திட்டத்தை செயல்படுத்துவதில் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் உறுதியாக இருந்தனர்.

**நிதியமைச்சர்:** அந்த நேரத்தில் விற்பனை வரி உயர்த்தப்பட்டது. இப்போது ஜிஎஸ்டி இருப்பதால் அப்படி செய்ய முடியாது. எம்ஜிஆர் காலத்தில் செய்ததை சொல்லி, நீங்கள் செய்யாமல் விட்டதை மறைக்க கூடாது.

**ஆர்.பி.உதயகுமார்:** நிதிச் சுமையை காரணம் காட்டி, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் திமுக அரசு பின்வாங்குகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இவ்வாறு விவாதம் நடந்தது.

வயதானவர்கள் நேரில் வர அவசியம் இல்லை

# ரேஷன் கடையில் உரிய படிவம் சமர்ப்பித்தால் வேறு நபர்கள் மூலம் பொருட்கள் வாங்கலாம்

● அமைச்சர் சக்கரபாணி தகவல்

■ சென்னை

ரேஷன் கடைகளில் 5 வயதுக்கு மேற்பட்ட எவரும் சென்று பொருட்களை வாங்கலாம். வாங்க இயலாத முதியவர்கள், வேறு ஒருவர் மூலம் வாங்குவதற்கான படிவங்களை வழங்க வேண்டும் என்று உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

இதுதொடர்பாக பேரவையில் நடந்த விவாதம்:

**ஜே.ஜி.பிரின்ஸ் (காங்கிரஸ்):** தமிழகத்தில் 5 விதமான குடும்ப அட்டைகள் உள்ளன. அதே போல, விரல் ரேகை பதிவின் மூலமே பொருள் வழங்கப்படுகிறது. இதனால், மக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகின்றனர். இந்த குழப்பங்களை போக்க வேண்டும்.

மேலும், மத்திய அரசு கொண்டு வந்த மீனவர்கள் சட்ட மசோதா நிறைவேற்றப்படவில்லை. அதை முற்றிலுமாக தடுக்க வேண்டும்.

**ஆர்.காமராஜ் (அதிமுக):** தமிழகத்தில் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்துடன் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படிதான் முன்னுரிமை, முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள், அந்தியோதயா அட்டைகள், சர்க்கரை குடும்ப அட்டைகள், ஒரு பொருளும் வாங்காத அட்டைகள் என பிரிக்கப்பட்டுள்ளது. இதில் தவறு ஏதும் நடைபெறவில்லை.

**அமைச்சர் அர.சக்கரபாணி:** மத்திய அரசின் தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தில் கடந்தகால அரசு இணைந்ததால்தான் இந்த 5 வகையான குடும்ப அட்டை திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. விரல் ரேகை பதிவு மூலமாகவே பெரும்பாலான மாவட்டங்களில் 99 சதவீதம் பேர் பொருட்களை வாங்கி வருகின்றனர்.

தமிழகத்தில் குடும்ப அட்டையில் பெயர் உள்ள 5 வயதுக்கு மேற்பட்ட எவரும் ரேஷன் கடைகளில் பொருட்களை வாங்கலாம். வயதானவர்கள் வந்து வாங்க முடியாவிட்டால், ரேஷன் கடை பணியாளர்களிடம் உள்ள படிவத்தை பூர்த்தி செய்து, தனக்கு பதிலாக வேறு ஒருவரை பொருட்களை வாங்கி வருவதற்கு அனுமதிக்கலாம்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# மதுரை ஆதீனம், ஸ்டேன் சாமிக்கு சட்டப்பேரவையில் இரங்கல்

● மறைந்த உறுப்பினர்களுக்கும் மவுன அஞ்சலி

■ சென்னை

மறைந்த முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் மதுரை ஆதீனம், ஸ்டேன் சாமி உள்ளிட்டோருக்கு சட்டப்பேரவையில் நேற்று இரங்கல் தெரிவிக்கப்பட்டது. இரங்கல் குறிப்புகள் வாசிக்கப்பட்டு, மவுன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த 13-ம் தேதி பொது பட்ஜெட், 14-ம் தேதி வேளாண் பட்ஜெட் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டன. இதையடுத்து, பட்ஜெட் மீதான விவாதம் பேரவையில் நேற்று தொடங்கியது.

### முன்னாள் உறுப்பினர்கள்

முன்னதாக நேற்று காலை, சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்கள் ஆ. தங்கராசு (குறிஞ்சிப்பாடி), க.ந.ராமச்சந்திரன் (ஆண்டிமடம்), கே.பண்ணை சேதுராம் (பெரியகுளம்), முன்னாள் அமைச்சர் பூ.ம.செங்குட்டுவன் (மருங்காபுரி), கி.அய்யாறு வாண்டையார் (திருவையாறு), முன்னாள் அமைச்சர் ம.விஜயசாரதி (அரக்கோணம்), அ.கலையரசன் (நன்னிலம்), முன்னாள் அமைச்சர் இ.மதுசூதனன் (ஆர்.கே.நகர்), திண்டிவனம் கே.ராமமூர்த்தி (திண்டிவனம்) ஆகியோர் மறைவுக்கு இரங்கல் குறிப்புகளை பேரவைத் தலைவர் மு.அப்பாவு வாசித்தார். தொடர்ந்து, 2 நிமிடங்கள் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

### ஆனைமுத்து, காமேஸ்வரன்

இதையடுத்து, பெரியாரிய சிந்தனையாளர் வே.ஆனைமுத்து, பிரபல அறுவை சிகிச்சை நிபுணர் எஸ்.காமேஸ்வரன், பழங்குடியின சமூக செயற்பாட்டாளர் ஸ்டேன் சாமி, தமிழ் அறிஞர் இளங்குமரனார், மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் குறிப்புகளை பேரவைத் தலைவர் வாசித்தார்.

இதையடுத்து அவர்களுக்கும் பேரவையில் மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.



▲ சென்னை கலைவாணர் அரங்கில் நடந்துவரும் சட்டப்பேரவை கூட்டத்தொடரில், பட்ஜெட் மீதான விவாதம் நேற்று தொடங்கியது. விவாதத்தின்போது உரையாற்றிய முதல்வர் ஸ்டாலின்.

# தவறு செய்தவர்களை தண்டிக்க வேண்டும்

● ஜெயலலிதா மரணம் தொடர்பாக திமுக எம்எல்ஏ கோரிக்கை

■ சென்னை

சட்டப்பேரவையில் நேற்று நடந்த விவாதத்தில், விளாத்திகுளம் திமுக உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் பேசும்போது, "முன்னாள் முதல்வர் மரணம் தொடர்பான ஆறுமுகசாமி ஆணையத்தில், 3 ஆண்டுகளாக விசாரணை நடக்கவில்லை. இதுகுறித்து விசாரித்து, தவறு செய்தவர்களை தண்டிக்க வேண்டும் என முதல்வரை கேட்டுக்கொள்கிறேன்" என்றார்.

தொடர்ந்து நடந்த விவாதம்:

**எதிர்க்கட்சி துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வம்:** இதுதொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளபோது, அதுகுறித்து விவாதிக்க முடியாது. இதை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்.

**பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி:** அவர் மேலோட்டமாக பேசியதால், நீக்குவதற்கு அவசியம் இல்லை.

**அவை முன்னவர் துரைமுருகன்:** வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தாலும், மேலோட்டமாக பேசலாம்.

**ஓ.பன்னீர்செல்வம்:** மருத்துவமனை நிர்வாகம், உச்ச நீதிமன்றத்தில் தடை பெற்றுள்ளது. எனவேதான் அதை நீக்கக் கோரினேன்.

**கு.பிச்சாண்டி:** அவர் பேசியதும், நீங்கள் பேசியதும் பதிவாகியுள்ளது.

இவ்வாறு விவாதம் நடந்தது.

புதிய கட்டிடம் விரைவில் திறக்கப்படும்

# செம்மொழி தமிழாய்வு நிறுவனம் தமிழகத்திலேயே செயல்படும்

● அமைச்சர் தங்கம் தென்னரசு உறுதி

■ சென்னை

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்துக்கான புதிய கட்டிடத்தை முதல்வர் விரைவில் திறந்து வைப்பார். இந்த நிறுவனம் தொடர்ந்து தமிழகத்திலேயே செயல்படும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் பொது மற்றும் வேளாண் பட்ஜெட் மீது கம்பம் தொகுதி திமுக உறுப்பினர் ராமகிருஷ்ணன் பேசியதாவது:

தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி, செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தை தமிழகத்துக்கு கொண்டுவந்தார். மத்திய அரசு தற்போது இதை மைசூரில் உள்ள பாரதிய பாஷா விஷ்வ வித்யாலயாவுடன் இணைக்க முயற்சித்து வருகிறது. இதை தடுக்க வேண்டும். மேலும், அதில் உள்ள பாவேந்தர் நூலகத்தையும் சீரமைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கு பதில் அளித்து தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கூறியதாவது:

செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தை மத்திய பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்போவதாக அறிவிக்கப்பட்டபோதே, தற்போதைய முதல்வர் அதை எதிர்த்தார்.

தற்போது அந்த நிறுவனத்துக்கு பெரும்பாக்கத்தில் புதிய கட்டிடம் தயாராகி வருகிறது. விரைவில் அந்த கட்டிடத்தை முதல்வர் திறந்துவைப்பார்.

இதையடுத்து அந்த நிறுவனம் அங்கு மாற்றப்படும். அந்த நிறுவனம் தமிழகத்திலயே தன்னாட்சி பெற்ற அமைப்பாக தொடர்ந்து செயல்படும். பாவேந்தர் நூலகமும் சிறப்பாக அமைக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

விடுதலைப் போராட்ட ஆவணத்தில்

# அனைத்து தலைவர்களின் பங்களிப்பையும் தமிழக அரசு கட்டாயம் பதிவு செய்ய வேண்டும்

● பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தல்

■ சென்னை

தமிழக அரசு தயாரிக்கும் விடுதலைப் போராட்ட ஆவணத்தில், அனைத்து தலைவர்களின் பங்களிப்பையும் பதிவு செய்ய வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

சுதந்திர தின விழாவில் பேசிய முதல்வர் ஸ்டாலின், கடந்த ஆண்டு விழாவின்போது, அப்போதைய முதல்வர் பழனிசாமியால் குறிப்பிடப்படாத பாரதியார் உள்ளிட்ட 12 தலைவர்களின் பெயர்களை கூடுதலாக குறிப்பிட்டார். இது வரவேற்கத்தக்கது.

அதேசமயம், கடந்த ஆண்டு விடுதலை நாள் விழாவில் நினைவு கூரப்பட்ட 15 தலைவர்களின் பெயர்கள் இந்த ஆண்டு விழாவில் இடம் பெறாதது மிகவும் வேதனை அளிக்கிறது. இது அரசின் தவறா அல்லது அதிகாரிகளின் அலட்சியமா என்று தெரியவில்லை.

### தொடர்கதையாக கூடாது

நாட்டின் விடுதலைக்காகப் போராடிய தலைவர்களின் பெயர்கள், முதல்வர் உரையில் விடுபட்டது தொடர்கதையாகி விடக்கூடாது. இனிமேல் நடைபெறும் சுதந்திர தின விழாவின்போது இவர்களது பெயர்கள் கட்டாயம் நினைவு கூரப்பட வேண்டும்.

மேலும், இதுவரை குறிப்பிடப்படாத கடலூர் அஞ்சலையம்மாள் போன்றவர்களின் பெயர்களும் பட்டியலில் இடம்பெற வேண்டும்.

தமிழக அரசு சார்பில் தயாரிக்கப்பட உள்ள 'இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் பங்கு' என்ற தலைப்பிலான வரலாற்று ஆவணத்தில், அனைத்து தலைவர்களின் பங்களிப்புகளும் பதிவு செய்யப்பட வேண்டும்.

மேலும், மாயூரம் நாகப்பன் படையாட்சி, சர்தார் ஆதிகேசவலு நாயக்கர் உள்ளிட்ட தலைவர்களுக்கு நினைவிடங்கள், சிலைகள் அமைத்து, அவர்களை பெருமைப்படுத்தவும் அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## புதிதாக 1,851 பேருக்கு கரோனா தொற்று

■ சென்னை

தமிழகத்தில் நேற்று ஆண்கள் 1,070, பெண்கள் 781 என மொத்தம் 1,851 பேர் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர். அதிகபட்சமாக கோவையில் 217, சென்னையில் 205, ஈரோட்டில் 170, தஞ்சாவூரில் 127, சேலத்தில் 123, செங்கல்பட்டில் 112 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் தமிழகத்தில் பாதிப்பு எண்ணிக்கை 25 லட்சத்து 90,632 ஆக அதிகரித்துள்ளது.

இதுவரை 25 லட்சத்து 35,715 பேர் குணமடைந்துள்ளனர். நேற்று மட்டும் 1,911 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். தமிழகம் முழுவதும் 20,370 பேர் சிகிச்சையில் உள்ளனர்.

அரசு, தனியார் மருத்துவமனைகளில் நேற்று நடுத்தர வயதினர், முதியவர்கள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர் என்று சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

தமிழக உள்ளாட்சி தேர்தலில்


பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)

2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" மற்றும் "வேறெந்த தீர்வுகளும் பொருந்தாது" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : M/s TNU Properties, உரிமையாளர்: திருமதி. சந்தியா ஸ்ரீனிவாசன், கதவு எண்.18/24, சிவாஜி தெரு, தி.நகர், சென்னை-600017. M/s TNU Properties, உரிமையாளர்: திருமதி. சந்தியா ஸ்ரீனிவாசன், பழைய எண். 14,14A, புதிய எண்.14A, TNU ஸ்ரீனிவாசா நகர், நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை, கீரைத்துறை கிராமம், மதுரை -625001. திருமதி. சந்தியா ஸ்ரீனிவாசன், (கடன்தாரர்/அடமானதாரர்) க/பெ. N. ஸ்ரீனிவாசன், கதவு எண்.18/24, சிவாஜி தெரு, தி.நகர், சென்னை-600017. திருமதி. சந்தியா ஸ்ரீனிவாசன், (கடன்தாரர்/அடமானதாரர்) க/பெ. N. ஸ்ரீனிவாசன், பழைய எண். 14,14A, புதிய எண்.14A, TNU ஸ்ரீனிவாசா நகர், நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை, கீரைத்துறை கிராமம், மதுரை -625001. திரு. N. ஸ்ரீனிவாசன், (ஜாமீன்தாரர்) த/பெ. TNU நாகராஜன், கதவு எண்.18/24, சிவாஜி தெரு, தி.நகர், சென்னை-600017. திரு. N. ஸ்ரீனிவாசன்,( ஜாமீன்தாரர்) த/பெ. TNU நாகராஜன், பழைய எண். 14,14A, புதிய எண்.14A, TNU ஸ்ரீனிவாசா நகர், நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை, கீரைத்துறை கிராமம், மதுரை -625001.

மொத்த நிலுவைத் தொகை 09.08.2021 அன்றுள்ளபடி ரூ.2,15,00,257.40/- + 10.08.2021 அன்றுமுதல் எதிர்கால வட்டி மற்றும் இதரக் கட்டணங்களுடன். சுவாதீன நிலை : அடையாள சுவாதீனம்.

அசையா சொத்தின் விரிவான விவரங்கள் : சொத்தின் அட்டவணை : வகை-1: தெற்கு மதுரை பதிவு மாவட்டம் மற்றும் தெற்கு மதுரை சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட "நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை,கீரைத்துறை கிராமத்தின், நகர சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.33, மாநகராட்சி வார்டு எண்.58, பழைய T.சர்வே எண்.2106, புதிய T.சர்வே எண்.110 & 111, பழைய T.சர்வே எண்.2117, புதிய T.சர்வே எண்.116, ஆகியவற்றில் அடங்கிய Assessment எண்.110150, பழைய கதவு எண்.14,14A, புதிய கதவு எண். 14-A, இல் உள்ள மொத்த விஸ்தீரணம் 26398 ச.அடி, பல மனைகளாக பிரிக்கப்பட்டதில் 1708ச.அடி கொண்ட காலி மனை, மனை எண்.20, அதனுடன் அதிலுள்ள கட்டிடம், அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதன் எல்லைகள்: வடக்காக: மனை எண்.21, தெற்காக: கதவு எண்.8 இன் சொத்து, கிழக்காக: பொன்னம்மாள் அவர்களின் மனை மற்றும் வீடு, மேற்காக: மனை எண்.19 மற்றும் 16 அடி அகல பொது நடைபாதை.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ. 50,00,000/- ஏல உயர்வு தொகை : ரூ.1,00,000/- டேவணித் தொகை : ரூ.5,00,000/-

அசையா சொத்தின் விரிவான விவரங்கள் : சொத்தின் அட்டவணை : வகை-2: தெற்கு மதுரை பதிவு மாவட்டம் மற்றும் தெற்கு மதுரை சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட "நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை,கீரைத்துறை கிராமத்தின், நகர சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.33, மாநகராட்சி வார்டு எண்.58, பழைய T.சர்வே எண்.2106, புதிய T.சர்வே எண்.110 & 111, பழைய T.சர்வே எண்.2117, புதிய T.சர்வே எண்.116, ஆகியவற்றில் அடங்கிய Assessment எண்.110150, பழைய கதவு எண்.14,14A, புதிய கதவு எண். 14-A, இல் உள்ள மொத்த விஸ்தீரணம் 26398 ச.அடி, பல மனைகளாக பிரிக்கப்பட்டதில் 656ச.அடி கொண்ட காலி மனை, மனை எண்.21 அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதன் எல்லைகள்: வடக்காக: மனை எண்.22, தெற்காக: மனை எண்.22 மற்றும் 16 அடி அகல பொது நடைபாதை, கிழக்காக: T.சர்வே எண்.113 இல் உள்ள சொத்து, மேற்காக: 16 அடி அகல பொது நடைபாதை.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.14,50,000/- ஏல உயர்வு தொகை : ரூ.25,000/- டேவணித் தொகை : ரூ.1,45,000/-

அசையா சொத்தின் விரிவான விவரங்கள் : சொத்தின் அட்டவணை : வகை-3 : தெற்கு மதுரை பதிவு மாவட்டம் மற்றும் தெற்கு மதுரை சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட "நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை,கீரைத்துறை கிராமத்தின், நகர சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.33, மாநகராட்சி வார்டு எண்.58, பழைய T.சர்வே எண்.2106, புதிய T.சர்வே எண்.110 & 111, பழைய T.சர்வே எண்.2117, புதிய T.சர்வே எண்.116, ஆகியவற்றில் அடங்கிய Assessment எண்.110150, பழைய கதவு எண்.14,14A, புதிய கதவு எண். 14-A, இல் உள்ள மொத்த விஸ்தீரணம் 26398 ச.அடி, பல மனைகளாக பிரிக்கப்பட்டதில் 693ச.அடி கொண்ட காலி மனை, மனை எண்.22 அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதன் எல்லைகள்: வடக்காக: மனை எண்.23, தெற்காக: மனை எண்.21, கிழக்காக: T.சர்வே எண்.113 இல் உள்ள சொத்து, மேற்காக: 16 அடி அகல பொது நடைபாதை.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.15,50,000/- ஏல உயர்வு தொகை : ரூ.25,000/- டேவணித் தொகை : ரூ.1,55,000/-

அசையா சொத்தின் விரிவான விவரங்கள் : சொத்தின் அட்டவணை : வகை-4 : தெற்கு மதுரை பதிவு மாவட்டம் மற்றும் தெற்கு மதுரை சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட "நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை,கீரைத்துறை கிராமத்தின், நகர சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.33, மாநகராட்சி வார்டு எண்.58, பழைய T.சர்வே எண்.2106, புதிய T.சர்வே எண்.110 & 111, பழைய T.சர்வே எண்.2117, புதிய T.சர்வே எண்.116, ஆகியவற்றில் அடங்கிய Assessment எண்.110150, பழைய கதவு எண்.14,14A, புதிய கதவு எண். 14-A, இல் உள்ள மொத்த விஸ்தீரணம் 26398 ச.அடி, பல மனைகளாக பிரிக்கப்பட்டதில் 735¼ ச.அடி கொண்ட காலி மனை, மனை எண்.23, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதன் எல்லைகள்: வடக்காக: மனை எண்.24, தெற்காக: மனை எண்.22, கிழக்காக: T.சர்வே எண்.113 இல் உள்ள சொத்து, மேற்காக: 16 அடி அகல பொது நடைபாதை.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.16,50,000/- ஏல உயர்வு தொகை : ரூ.25,000/- டேவணித் தொகை : ரூ.1,65,000/-

அசையா சொத்தின் விரிவான விவரங்கள் : சொத்தின் அட்டவணை : வகை-5 : தெற்கு மதுரை பதிவு மாவட்டம் மற்றும் தெற்கு மதுரை சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட "நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை,கீரைத்துறை கிராமத்தின், நகர சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.33, மாநகராட்சி வார்டு எண்.58, பழைய T.சர்வே எண்.2106, புதிய T.சர்வே எண்.110 & 111, பழைய T.சர்வே எண்.2117, புதிய T.சர்வே எண்.116, ஆகியவற்றில் அடங்கிய Assessment எண்.110150, பழைய கதவு எண்.14,14A, புதிய கதவு எண். 14-A, இல் உள்ள மொத்த விஸ்தீரணம் 26398 ச.அடி, பல மனைகளாக பிரிக்கப்பட்டதில் 752¼ச.அடி கொண்ட காலி மனை, மனை எண்.24 அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதன் எல்லைகள்: வடக்காக: மனை எண்.25, தெற்காக: மனை எண்.23, கிழக்காக: T.சர்வே எண்.113 இல் உள்ள சொத்து, மேற்காக: 16 அடி அகல பொது நடைபாதை.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.16,75,000/- ஏல உயர்வு தொகை : ரூ.25,000/- டேவணித் தொகை : ரூ.1,67,500/-

அசையா சொத்தின் விரிவான விவரங்கள் : சொத்தின் அட்டவணை : வகை-6 : தெற்கு மதுரை பதிவு மாவட்டம் மற்றும் தெற்கு மதுரை சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட "நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை,கீரைத்துறை கிராமத்தின், நகர சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.33, மாநகராட்சி வார்டு எண்.58, பழைய T.சர்வே எண்.2106, புதிய T.சர்வே எண்.110 & 111, பழைய T.சர்வே எண்.2117, புதிய T.சர்வே எண்.116, ஆகியவற்றில் அடங்கிய Assessment எண்.110150, பழைய கதவு எண்.14,14A, புதிய கதவு எண். 14-A, இல் உள்ள மொத்த விஸ்தீரணம் 26398 ச.அடி, பல மனைகளாக பிரிக்கப்பட்டதில் 758½ச.அடி கொண்ட காலி மனை, மனை எண்.25, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதன் எல்லைகள்: வடக்காக: மனை எண்.26, தெற்காக: மனை எண்.24, கிழக்காக: T.சர்வே எண்.113, மேற்காக: 16 அடி அகல பொது நடைபாதை.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.17,00,000/- ஏல உயர்வு தொகை : ரூ.25,000/- டேவணித் தொகை : ரூ.1,70,000/-

அசையா சொத்தின் விரிவான விவரங்கள் : சொத்தின் அட்டவணை : வகை-7 : தெற்கு மதுரை பதிவு மாவட்டம் மற்றும் தெற்கு மதுரை சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்ட "நல்லமுத்துப்பிள்ளை புதிய சாலை,கீரைத்துறை கிராமத்தின், நகர சர்வே வார்டு எண்.2, பிளாக் எண்.33, மாநகராட்சி வார்டு எண்.58, பழைய T.சர்வே எண்.2106, புதிய T.சர்வே எண்.110 & 111, பழைய T.சர்வே எண்.2117, புதிய T.சர்வே எண்.116, ஆகியவற்றில் அடங்கிய Assessment எண்.110150, பழைய கதவு எண்.14,14A, புதிய கதவு எண். 14-A, இல் உள்ள மொத்த விஸ்தீரணம் 26398 ச.அடி, பல மனைகளாக பிரிக்கப்பட்டதில் 659.75ச.அடி கொண்ட காலி மனை, மனை எண்.26, அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதன் எல்லைகள்: வடக்காக: T.சர்வே எண்.113 இல் உள்ள சொத்து,, தெற்காக: மனை எண்.25, கிழக்காக: T.சர்வே எண்.113 இல் உள்ள சொத்து, மேற்காக: 16 அடி அகல பொது நடைபாதை.

குறைந்தபட்ச கேட்பு விலை : ரூ.15,00,000/- ஏல உயர்வு தொகை : ரூ.25,000/- டேவணித் தொகை : ரூ.1,50,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் : 08.09.2021 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை (வரம்பற்ற 5 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்)

சொத்தினை பார்வையிடும் தேதி : 03.09.2021 (நேரம் : மதியம் 02.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை)

மேலும், விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வங்கியின் இணையதளத்தில் https://www.bankofbaroda.in/e-auction.htm, மின் ஏல முகவரின் இணைய தளமான https://ibapi.in. பார்க்கவும் மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரபூர்வ அதிகாரி திரு. V.ராஜ்ஷேகர் தொலைபேசி : 95973 11199 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 13.08.2021
இடம் : சென்னை

அதிகாரபூர்வ அதிகாரி
பேங்க் ஆப் பரோடா

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, திருப்பூர், சேலம் தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி

Published by N. Ravi at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 603209. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

காஞ்சி, செங்கை மாவட்டங்களில்

# பொதுப்பணித் துறை தரச் சான்று பெறாமல் எம்-சாண்ட் விற்பனை

● உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள்

■ மாமல்லபுரம்

காஞ்சிபுரம் மற்றும் செங்கை மாவட்டங்களில் பொதுப்பணித் துறையின் தர நிர்ணயச் சான்று பெறாமல், கல் அரவை ஆலைகள் எம் மற்றும் சிஎஸ் சாண்ட் விற்பனை செய்வதால் மாவட்ட நிர்வாகங்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 187 மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 269 என 456 கல் குவாரிகள் மற்றும் கல் அரவை ஆலைகள் இயங்கி வருகின்றன. இதில், சுற்றுச்சூழலுக்காக மாசு கட்டுப்பாட்டு வாரியம், கனிமவளத்தை முறையாக வெட்டி எடுப்பதற்காக கனிமவளத் துறையின் அனுமதிகளைப் பெற்று இந்த குவாரிகள் இயங்கி வருவதாகத் தெரிகிறது.

இந்நிலையில், கட்டுமானங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த ஆற்று மணலுக்கு இணையான எம்-சாண்ட் மற்றும் சிஎஸ்-சாண்ட் தயாரிக்கும் பணிகளில் இந்த குவாரிகள் ஈடுபட்டுள்ளன. இந்த குவாரிகளில் தயாரிக்கப்படும் எம்-சாண்ட் மற்றும் சிஎஸ்-சாண்ட், கட்டுமானங்களுக்கு பயன்படுத்தும் வகையில் உறுதித்தன்மை கொண்டதா என ஆய்வு செய்து, பொதுப் பணித் துறை (கட்டுமான பிரிவு) தர நிர்ணயச் சான்று வழங்கினால் மட்டுமே விற்பனை செய்ய முடியும்.

ஆனால், இந்த இரு மாவட்டங்களில் 50 குவாரிகளுக்கு மட்டுமே பொதுப்பணித் துறை தர நிர்ணயச் சான்று வழங்கியுள்ளது. ஆனால், கட்டுமானத்துக்கு ஏற்ற உறுதித்தன்மை இல்லாத எம்-சாண்ட் மணல், இந்த குவாரிகளில் சட்டவிரோதமாக தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

தமிழ்நாடு கனிமவள நிறுவனம், மாசு கட்டுப்பாட்டு வாரியம், பொதுப் பணித் துறை, தரமற்ற எம்-சாண்ட் தயாரித்து விற்றால் 2 ஆண்டுகள் சிறை, ரூ.5 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் உள்ளிட்ட அம்சங்கள் கொண்ட புதிய சட்டத்திருத்த கொள்கையை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.ஆனால், இந்தச் சட்டம் இன்னும் அனுமதி பெறாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளது. அதனால், மாவட்ட நிர்வாகங்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, பொறியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கூறியதாவது: பொதுப்பணித் துறையின் அனுமதி கிடைக்காமல் இயங்கி வரும் குவாரியில் எம்-சாண்ட் செயற்கை மணலில், கிரஷர் டஸ்ட் அதிக அளவு கலந்து இருப்பதாகக் கூறப்படுகிறது. கிரஷர் டஸ்ட் என்பது ஜல்லிகளை உடைக்கும் போது உருவாகும் கழிவுப் பொருள். இவற்றை கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தக் கூடாது.

இவற்றை பயன்படுத்தி பூச்சு வேலை உள்ளிட்ட இதர வேலைகளை மேற்கொண்டால், வலுவற்ற கட்டமைப்பு உருவாகிவிடும் என்ற அச்சம் உள்ளது. அதனால், தமிழக அரசு அறிவுறுத்தலின்படி பொதுப் பணித் துறையின் கீழ் வழங்கப்படும் எம்-சாண்ட் தரச் சான்றிதழ் பெறாத ஆலைகளிலிருந்து விற்கப்படும் செயற்கை மணலின் தரத்தை ஆய்வுசெய்து, தரமான எம்-சாண்ட் மூலம் வலுவான கட்டிடங்களை கட்டுவதற்கு வழிவகுக்க வேண்டும். பேரிடர் காலங்களில் பேராபத்து வருவதற்கு முன்பே அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

இதுகுறித்து, கனிமவளத் துறை மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் கூறியதாவது: பொதுப் பணித் துறையினர் கட்டுமானப் பிரிவின்கீழ் தரநிர்ணய சான்றிதழையும், நிறுவனங்கள் பெற வேண்டும் என அரசு வலியுறுத்தியுள்ளது. ஆனால், பொதுப்பணித் துறையால் வழங்கப்படும் தர நிர்ணயச் சான்று பெற்றிருந்தால் மட்டுமே குவாரி, கல் அரவை ஆலைகள் இயங்க வேண்டும் என சட்டத்திருத்தம் இன்னும் கொண்டு வரப்படவில்லை. மேலும், அனுமதி பெறாத பல எம்-சாண்ட் நிறுவனங்கள், அனுமதி கோரி பொதுப்பணித் துறைக்கு விண்ணப்பித்துள்ளன. சென்னையில் இருந்து தர நிர்ணய அதிகாரிகள் வந்து ஆய்வு செய்ய வேண்டும் என்றனர்.



▲ திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தனியார் தொண்டு நிறுவனங்கள் சார்பில் ரூ.1.20 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள, ஒரு நிமிடத்துக்கு 333 லிட்டர் ஆக்சிஜன் உற்பத்தி செய்யக் கூடிய, ஆக்சிஜன் உற்பத்தி மையத்தை நேற்று பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர் திறந்து வைத்து, ஆக்சிஜன் உற்பத்தியை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் அரசி ஸ்ரீவத்சன், திருவள்ளூர் எம்எல்ஏ வி.ஜி.ராஜேந்திரன், தனியார் தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



▶▶ 75-வது சுதந்திர தின விழாவை ஒட்டி, சுற்றுச்சூழல் மாசு கட்டுப்பாடு குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பூந்தமல்லி, மதுரவாயல் சுற்றுவட்டார பகுதிகளில் மரக்கன்றுகளை நடும் நிகழ்வை, தனது தனி பாதுகாப்பு அதிகாரி ஆர்.சுரேஷ் ஏற்பாட்டின்பேரில், செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கிரீன்வேஸ் சாலையில் உள்ள தமது இல்லத்தில் மரக்கன்றை நட்டு தொடங்கிவைத்தார்.

அரசு கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில்

# கூட்டுறவு மேலாண்மை படிப்புக்கு விண்ணப்பிக்கலாம்

■ சென்னை

சென்னை, காஞ்சிபுரம், திருச்சி, மதுரை, சேலம், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி உட்பட 25 இடங்களில் கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் உள்ளன. இந்நிலையங்களில் நடப்பு கல்வி ஆண்டில் (2021-22) கூட்டுறவு மேலாண்மை பட்டய படிப்பில் (டிப்ளமா) சேர விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்த முழுநேர படிப்பில், பிளஸ் 2 முடித்தவர்கள் சேரலாம். குறைந்தபட்சம் 17 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு ஏதும் இல்லை.

பயிற்சிக்கான ஒட்டுமொத்த கட்டணம் ரூ.14,850 மட்டும்.

▼ **கூட்டுறவு மேலாண்மை பட்டயப் படிப்பு முடிப்பவர்கள் கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு சங்கங்களில் இளநிலை உதவியாளர், உதவியாளர் போன்ற பணிகளில் சேரலாம்.**

இப்பயிற்சியின் நிறைவில், கணினி மேலாண்மை மற்றும் நகை மதிப்பீடு பயிற்சிகளுக்கான சான்றிதழ்களும் சேர்த்து வழங்கப்படும். விண்ணப்ப படிவத்தை www.tncu.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை தேவையான சான்றிதழ்களின் நகல்களுடன் தங்கள் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு மேலாண்மை நிலையத்துக்கு கூரியர் அல்லது பதிவு தபால் மூலம் செப். 15-ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

கூட்டுறவு மேலாண்மை பட்டயப் படிப்பு முடிப்பவர்கள் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இளநிலை உதவியாளர், உதவியாளர் போன்ற பணிகளில் சேரலாம். இதற்கு அந்த வங்கிகள் மற்றும் சங்கங்கள் சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டு, போட்டித் தேர்வு மூலம் பணி நியமனம் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.



▶▶ பல்லாவரம், வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் நிறுவனர்- வேந்தர் ஐசரி கே.கணேஷ் தேசியக் கொடியை ஏற்றினார். வேல்ஸ் இணைவேந்தர் (திட்டம் மற்றும் வளர்ச்சி) ஆ.ஜோதிமுருகன், துணைவேந்தர், பதிவாளர், தேர்வுக்கட்டுப்பாட்டாளர், அனைத்துத் துறை பேராசிரியர்கள், நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.



▶▶ சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா சார்பில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், பாதுகாப்புப் படை வீரர்கள், கரோனா முன்களப் பணியாளர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது. விழாவில் விமானப் படை உயர் அதிகாரி கேப்டன் இ.ஆர்.சுரேந்திரன் தலைமை விருந்தினராக கலந்துகொண்டார். வங்கியின் கள பொது மேலாளர் விவேக் குமார், பிராந்திய மேலாளர் சுரேஷ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

சோழவரம் அருகே

# வண்டலூர்- மீஞ்சூர் சாலையில் மோட்டார் சைக்கிள்களில் சாகசம்

● 8 பேர் மீது வழக்குப் பதிவு

■ திருவள்ளூர்

சோழவரம் அருகே வண்டலூர் - மீஞ்சூர் வெளிவட்ட சாலையில் மோட்டார் சைக்கிள்களில் சாகசம் செய்த சென்னை இளைஞர்கள் 8 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்து, 8 மோட்டார் சைக்கிள்களை பறிமுதல் செய்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் அருகே உள்ள அருமந்தை பகுதியில், வண்டலூர் - மீஞ்சூர் வெளிவட்ட சாலையில் நேற்று முன்தினம் மாலை, இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் சாகசத்தில் ஈடுபடுவதாக சோழவரம் போலீஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, சோழவரம் இன்ஸ்பெக்டர் ரஜினிகாந்த் தலைமையில், எஸ்.ஐ. ஆறுமுகம் மற்றும் போலீஸார் சம்பவ இடம் விரைந்து, சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அங்கு, சென்னையைச் சேர்ந்த 8 இளைஞர்கள், வெளிவட்டச் சாலையில், மீஞ்சூர் மார்க்கமாகச் செல்லும் சாலை பகுதியில், வாகன ஓட்டிகளை அச்சுறுத்தும் வகையில் மோட்டார் சைக்கிள்களை அதிவேகமாக செலுத்தும் பந்தயம் மற்றும் சாகசத்தில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதையடுத்து, அந்த இளைஞர்கள் மீது வழக்குப் பதிவு செய்த சோழவரம் போலீஸார், சாகசத்தில் ஈடுபடுத்தப்பட்ட 8 மோட்டார் சைக்கிள்களையும் பறிமுதல் செய்தனர்.

மேலும், திருவள்ளூர் மாவட்டத்தில், பொதுமக்கள், வாகன ஓட்டிகளுக்கு இடையூறு, அச்சுறுத்தல் மற்றும் விபத்து ஏற்படுத்தக் கூடிய மோட்டார் சைக்கிள் பந்தயங்கள், சாகசங்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திருவள்ளூர் மாவட்ட காவல் துறை எச்சரித்துள்ளது.

அதுமட்டுமல்லாமல், பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தும் இது போன்ற இளைஞர்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள், திருவள்ளூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் பிரத்யேக மொபைல் எண் 63799 04848-க்கு எவ்வித தயக்கமும் இன்றி தொலைபேசி, வாட்ஸ் ஆப் வாயிலாக தெரிவிக்கலாம் எனவும் மாவட்ட காவல் துறை தெரிவித்துள்ளது.

# கலப்பட டீசல் ஏற்றிவந்த 10 டேங்கர் லாரி பறிமுதல் 5 பேர் கைது

■ சென்னை

கலப்பட டீசல் ஏற்றி வந்த 10 டேங்கர் லாரிகள் பறிமுதல் செய்யப்பட்டு, 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டிருப்பதாவது:

கோவை சுற்றுவட்டாரப் பகுதிகளான சேலம், சங்ககிரி, நாமக்கல், திருசெங்கோடு, பொள்ளாச்சி ஆகிய பகுதிகளில் கலப்பட டீசல் விற்பனை செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலின் பேரில் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை காவல்துறை கூடுதல் இயக்குநர் ஆபாஸ்குமார் உத்தரவுப்படி, காவல் கண்காணிப்பாளர்கள் ஸ்டாலின், பாஸ்கர் ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் காவல் துணைக் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் தலைமையில் பல குழுக்களாகப் பிரிந்து மேற்படி பகுதிகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

கடந்த 2 மாதங்களில் மட்டும் கலப்பட டீசல் சம்பந்தமாக மொத்தம் 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 26,400 லிட்டர் கலப்பட டீசல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கலப்பட டீசல் ஏற்றி வந்த 5 டேங்கர் லாரிகள், மற்ற வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கடத்தலில் ஈடுபட்ட 10 பேர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து குற்றச்செயலில் ஈடுபடும் நபர்கள் கள்ளச் சந்தை தடுப்பு காவல் சட்டத்தின்கீழ் தடுப்பு காவலில் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அரசின் செய்தியில் கூறப்பட்டுள்ளது.





▶▶ ஜெம் மருத்துவமனையில் பணியாற்றும் அனைத்து டாக்டர்களும், ஊழியர்களும் தங்களின் உடல் உறுப்புகளை தானம் செய்வதாக உறுதி அளித்தனர். நிகழ்ச்சியின் போது மோகன் அறக்கட்டளை நிறுவனர் டாக்டர் சுனி ஷ்ராஃபிடமிருந்து உடல் உறுப்பு தான அட்டையை பெறுகிறார் ஜெம் மருத்துவமனை தலைமை செயல் அதிகாரி டாக்டர் அசோகன்.

## காஞ்சிபுரத்தில் சிலை கடத்தல் தடுப்பு பிரிவு ஆய்வு

■ காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ள இரட்டை திருமாளிகையில் இருந்து கற்தூண்கள், திருவாச்சி ஆகியவை காணாமல் போய்விட்டதாக கோயில் பக்தர்கள் டில்லிபாபு, தினேஷ் ஆகியோர் புகார் தெரிவித்தனர். இது தொடர்பாக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு ஆய்வாளர் மலர்விழி, உதவி ஆய்வாளர் குமார் ஆகியோர் நேற்று காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயில் வந்தனர். அவர்கள் இரட்டை திருமாளிகை கற்தூண்கள் தொடர்பாக ஆய்வு செய்தனர். திருவாச்சி தொடர்பான ஆவணங்கள் குறித்தும் கேட்டதாகத் தெரிகிறது. விசாரணை நடைபெற்று வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புத்தகம் எழுதிய

# மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டு

■ காஞ்சிபுரம்

'எழுதுக' என்ற அமைப்பு சென்னையை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. இந்த அமைப்பு சார்பில் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் 100 பேர் ஊக்குவிக்கப்பட்டு அவர்கள் புத்தகங்களை எழுதி வெளியிட்டனர். இப்புத்தக வெளியீட்டு விழா கடந்த ஜூலை 31-ம் தேதி நடைபெற்றது. இந்த புத்தகங்களை சென்னை தலைமைச் செயலகத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்டார்.

புத்தகங்களை வெளியிட்ட 100 மாணவர்களில் 18 பேர் காஞ்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் 18 பேரும் நேற்று ஆட்சியர் ஆர்த்தியை சந்தித்து, தங்கள் புத்தகங்களை ஆட்சியரிடம் காட்டி வாழ்த்து பெற்றனர். அவர்களைப் பாராட்டிய ஆட்சியர் தொடர்ந்து எழுதும் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று வாழ்த்தினார்.

சிறைக் கைதிகளுக்கு விளையாட்டுப் பயிற்சி அளிக்க

# ஐஓசி நிறுவனம் 'பரிவர்த்தன்' முன்முயற்சி

● புழல் சிறைச்சாலையில் அறிமுகம்

■ சென்னை

சிறையில் உள்ளவர்கள், தங்கள் வாழ்வை நல்ல முறையில் சீரமைத்துக் கொள்ள உறுதுணை புரியும் வகையில், அவர்களுக்கு சில விளையாட்டுகளில் பயிற்சி அளிக்க, இந்தியன் ஆயில் நிறுவனம் நாடெங்கிலும் உள்ள சில தேர்ந்தெடுக்கப்பட்ட சிறைச்சாலைகளில் 'பரிவர்த்தன்' என்கிற முன்முயற்சியை அறிமுகம் செய்துள்ளது.

இந்தியாவின் 75-வது சுதந்திரத் திருநாளில், இந்த தனிச் சிறப்பு மிக்க முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த முன்முயற்சியை சென்னை, புழல் மத்திய சிறையில், இந்தியன் ஆயில் தலைவர் ஸ்ரீகாந்த் மாதவ் வைத்யா காணொலி வாயிலாக தொடங்கி வைத்தார். சிறைக் கைதிகளுக்கு பேட்மின்ட்டன், கைப்பந்து, செஸ், டென்னிஸ், கேரம் உள்ளிட்ட விளையாட்டுகளில் பயிற்சி அளிக்கப்படும்.

இப்பயிற்சி 4 வாரங்களுக்கு நடைபெற உள்ளது. 129 கைதிகளுக்கு இந்த விளையாட்டுகளின் அடிப்படை அம்சங்களும் நுணுக்கங்களும் கற்றுத்தரப் படும். விளையாட்டு சாதனங்கள் இந்தியன் ஆயில் நிறுவனத்தால் வழங்கப்படும். இந்தியன் ஆயில் நிறுவனத்தைச் சேர்ந்த தேசிய, சர்வதேச அளவில் பல போட்டிகளில் பங்கேற்று சாதித்த விளையாட்டு வீரர்கள் பயிற்சிகளை அளிக்க உள்ளனர்.

இதுகுறித்து ஐஓசி தலைவர் ஸ்ரீகாந்த் மாதவ் வைத்யா கூறும்போது, "பரிவர்த்தன் முன்முயற்சியின் மூலம் விளையாட்டுப் பயிற்சி பெறும் சிறைவாசிகளின் உடல் நலமும், தன்னம்பிக்கையும் மேம்படும். சிறைக் காலம் முடிந்த பின்னர் கைதிகள், தங்கள் தாழ்வு மனப்பான்மையை மனக்குறைகளைப் போக்கிக் கொண்டு சமுதாயத்தை எதிர்கொள்ளவும் வாழவும் போதிய மனவலிமையைப் பெற்ற இது உறுதுணை புரியும்" என்றார்.



▲ மயிலாப்பூர் பகுதியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மயிலாப்பூர் காவல் நிலைய உதவி ஆணையாளர் டி.கவுதமன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இந்நிகழ்ச்சியில் 'இந்து தமிழ் திசை' பொது மேலாளர் டி.ராஜ்குமார், 'இந்து' குழும மேலாளர் பாபு விஜய், பத்திரிகை விற்பனையாளர்கள் சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

தேர்தல் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு

# புகார் மீது நடவடிக்கை கோரி தோற்றவரின் கணவர் தீக்குளிக்க முயற்சி

■ திருவள்ளூர்

பள்ளிப்பட்டு அருகே ஊராட்சித் தலைவர் தேர்தலில் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு எனஅளித்த புகார் மீது நடவடிக்கையில்லை எனக் கூறி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தேர்தலில் தோல்வியை தழுவியவரின் கணவர் தீக்குளிக்க முயன்றதால், பரபரப்பு ஏற்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த 2019-ல் நடைபெற்ற ஊரகஉள்ளாட்சித் தேர்தலில், பள்ளிப்பட்டு அருகே உள்ள சாமந்தவாடா ஊராட்சித் தலைவர் பதவிக்கு போட்டியிட்டவர் தனலட்சுமி.

இவர், தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், 256 வாக்குகள் பெற்றுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட லதா ரமேஷ் 260 வாக்குகள் பெற்று, வெற்றி பெற்றுள்ளார்.

இந்நிலையில், "தபால் வாக்குகளை எண்ணாததால்தான் லதா ரமேஷ் வெற்றிப்பெற்றுள்ளார். ஆகவே, வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு நடந்துள்ளது" என தனலட்சுமியின் கணவர் மோகன் மாநில தேர்தல் ஆணையம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றில் புகார் மனுக்களை அளித்துள்ளார்.

இச்சூழலில், தனலட்சுமியும், அவரது கணவர் மோகனும் நேற்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்துக்கு வந்தனர். அப்போது மோகன், தான் அளித்த புகார் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறி, கையில்மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணெயை தன் தலையில் ஊற்றி தீக்குளிக்க முயன்றார்.



▲ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தீக்குளிக்க முயன்றவர் மீது தண்ணீர் ஊற்றி, அவரது முயற்சியை போலீஸார் தடுத்தனர்.

அப்போது, அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த திருவள்ளூர் டவுன் போலீஸார், மோகன் மீது தண்ணீர் ஊற்றி, அவரது முயற்சியைத் தடுத்தனர்.

இதுகுறித்து, வழக்குப் பதிவு செய்த திருவள்ளூர் டவுன் போலீஸார், மோகனை கைது செய்தனர். தொடர்ந்து, அவரை ஜாமீனில் விடுவித்தனர்.

இந்து தமிழ் திசை
உண்மை நின்றிட வேண்டும்
செவ்வாய், ஆகஸ்ட் 17, 2021

# இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் திருத்த மசோதா: பாஜகவின் சமூக நீதி அரசியல்

இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை முடிவுசெய்யும் அதிகாரத்தை மாநில அரசுகளுக்கே திரும்ப அளிக்க வகைசெய்யும் அரசமைப்புத் திருத்த மசோதா, அடுத்தடுத்த நாட்களில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டிருப்பது, மழைக்காலக் கூட்டத்தொடரில் நடந்த அமளிகளுக்கு நடுவிலும் பாஜகவுக்குப் பாராட்டுகளைப் பெற்றுத்தந்திருக்கிறது. குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பிறகு, இத்திருத்தம் நடைமுறைக்கு வரும். பெகாஸஸ் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தைச் செயல்பட விடாமல் கடும் அமளியில் ஈடுபட்டிருந்த எதிர்க்கட்சிகள், இத்திருத்த மசோதாவை நிறைவேற்ற ஒத்துழைத்து, விவாதங்களில் பங்கேற்கவும் ஆதரிக்கவும் செய்தன. தமிழ்நாட்டில் பாஜகவின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அதிமுக, பாஜகவைக் கடுமையாக விமர்சித்துவரும் திமுக இரண்டு கட்சிகளுமே இந்தத் திருத்தத்தைப் பாராட்டியுள்ளன. இது கூட்டாட்சித் தத்துவத்துக்குக் கிடைத்த வெற்றி என்று கூறியிருக்கிறார் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அரசமைப்பின் 102-வது திருத்தத்தின்படி சேர்க்கப்பட்ட புதிய கூறான 342(அ), சமுதாய அளவிலும் கல்வியிலும் பின்தங்கிய வகுப்பினர் யார் என்பது குறித்து ஆளுநரின் கருத்தைப் பெற்று, குடியரசுத் தலைவரே முடிவுகளை எடுக்கவும், அந்தப் பட்டியலில் சேர்க்கவும் நீக்கவும் நாடாளுமன்றத்துக்கு அதிகாரம் அளித்தது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் யார் என்று முடிவுசெய்வதில் மாநில அரசுகளுக்கு இருந்த அதிகாரம், இத்திருத்தத்தால் மத்திய அரசின் கைகளுக்கு மாற்றப்பட்டது. இத்திருத்தத்தின் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் மராத்தா வழக்கில் அளித்த தீர்ப்பு, மாநில அரசுகளைக் கலக்கத்துக்கு ஆளாக்கியது. தற்போது இந்தப் பிரச்சினைக்கு முடிவுகட்டப்பட்டிருக்கிறது. எனினும், பாஜக ஆட்சிக் காலத்தில்தான் 102-வது திருத்தம் கொண்டுவரப்பட்டது என்பதும் நினைவில் கொள்ளப்பட வேண்டியது. தற்போது நிறைவேறியிருக்கும் மசோதா பாஜகவின் முந்தைய திருத்தத்துக்கான திருத்தம்தான்.

மாநிலக் கட்சிகளின் அரசியல் என்பது பெரிதும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் உரிமைப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்நிலையில், இந்துத்துவக் கட்சி என்ற அடையாளத்துடன் இயங்கிவரும் பாஜக, மாநில அரசியலுக்குள்ளும் தன்னுடைய அரசியல்வெளியை விரித்தெடுக்கும் முயற்சியாகவும் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொள்ளலாம். சமூகநீதிக்கு பாஜக எப்போதுமே எதிராக இருந்ததில்லை என்று தீவிரமாக ஒலிக்கத் தொடங்கியுள்ள குரல்கள், அதை இன்னும் உறுதிப்படுத்துகின்றன. மருத்துவப் படிப்புகளில் அகில இந்திய ஒதுக்கீட்டில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இடஒதுக்கீடு பாஜக ஆட்சிக் காலத்தில்தான் நடைமுறைக்கு வந்திருக்கிறது என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. தாங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பின் விளைவு இது என்கிறது திமுக. அந்தத் தீர்ப்பை மத்திய அரசு மேல்முறையீடு செய்யாமல் ஏற்றுக்கொண்டது என்கிறது பாஜக தரப்பு. மாநிலக் கட்சிகளின் பிரதான அரசியல் ஆயுதமான இடஒதுக்கீட்டை பாஜகவும் கையில் எடுத்திருப்பதன் மூலமாக, பிற்படுத்தப்பட்டோர் நலன்களுக்கு எதிரான கட்சி என்ற அடையாளத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முயற்சிப்பது மட்டும் தெளிவாகவே தெரிகிறது.

# வேளாண் நிதிநிலை அறிக்கை: நல்லதொரு தொடக்கம்



**கூடுதலான இயந்திரங்களைக் குறைந்த வாடகையில் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்தால், உற்பத்திச் செலவு குறைந்து கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்!**

வ.சேதுராமன்

இந்தியாவில் வேளாண் துறை தொடங்கப்பட்டு 140 ஆண்டுகளும், தமிழ்நாட்டில் 120 ஆண்டுகளும் ஆன சூழலில், தமிழ்நாடு அரசின் முதலாவது வேளாண் துறைக்கான தனி நிதிநிலை அறிக்கை என்பது விவசாயிகள் மட்டுமின்றி விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வேளாண் ஆர்வலர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் வரவேற்பைப் பெற்றுள்ளது. அடுத்த ஆறு மாதங்களுக்கான நிதிநிலை அறிக்கையாகத் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், நீண்ட காலச் செயல்பாடுகள் பலவற்றைக் குறித்த அறிவிப்புகள், அடுத்த ஆண்டு தாக்கல் செய்யப்படவுள்ள முழுமையான நிதிநிலை அறிக்கைக்கான முன்னோட்டமாகவும் பார்க்கப்படுகிறது.

16 உள்ளடக்கத் தலைப்புகளில் 49 முக்கிய அம்சங்களைக் கொண்ட நிதிநிலை அறிக்கையில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், இருபோக சாகுபடிப் பரப்பை அதிகமாக்குதல், இயற்கை விவசாயம், பாரம்பரிய நெல் வகைகளை ஊக்குவிக்கும் திட்டம், சிறு குறு தானியங்கள், பனைப் பாதுகாப்பு, முருங்கை ஏற்றுமதி மண்டலம் உள்ளிட்ட பல திட்டங்கள் வரவேற்கத்தக்கவை.

### வரவேற்பு பெற்ற திட்டங்கள்

காவிரிப் படுகைப் பகுதியில் தென்னை மதிப்புக் கூட்டும் மையம் தஞ்சை மாவட்டத்திலும், தென்னை வளர்ச்சி வாரியத்தின் துணை மண்டல மையம் பட்டுக்கோட்டையிலும், திருவாரூரில் பருத்தி விதை நீக்கும் மையம், நாகையில் மீன் பதப்படுத்த பயிற்சி மையம், நெல் ஜெயராமன் பெயரில் மரபுசார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கம், இலவச மின்சாரம் மற்றும் பயிர்க் காப்பீட்டை (நடப்பு குறுவைப் பட்டத்துக்குக் காப்பீடு திட்டம் அறிவிக்காத சூழலில்) உத்தரவாதப்படுத்தியது உள்ளிட்ட பல திட்டங்கள் காவிரிப் படுகை விவசாயிகளின் வரவேற்பைப் பெற்றுள்ளன.

திருச்சி, நாகை மாவட்டங்களுக்கு இடையேயான பகுதியை வேளாண் தொழிற்சாலைகளுக்கான பெருந்தடமாக ஆக்குவதற்கான அறிவிப்பும், வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள், தொழிற்பேட்டைகள் அதற்கான சாலை உள்ளிட்ட உள்கட்டமைப்பு போன்றவற்றை மேம்படுத்தும் அறிவிப்பும் உள்ளன. மேற்கண்ட உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி வரக்கூடிய தொழில் நிறுவனங்கள், காவிரிப் படுகைப் பகுதியின் மண் வளத்துக்கும் நீர் வளத்துக்கும் ஆபத்தை ஏற்படுத்தாத வகையில் அமைய வேண்டும் என்று இந்த அறிவிப்பில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

### பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்

கடந்த ஆட்சியில் காவிரிப் படுகைப் பகுதியைப் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, பிப்ரவரி 2020–ல் அதற்கான சட்டம் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அந்த மசோதாவில் தஞ்சை, திருவாரூர், நாகை ஆகிய 3 மாவட்டங்கள், கடலூர் மாவட்டத்தின் காட்டுமன்னார்கோவில், மேல்புவனகிரி, கீரப்பாளையம், பரங்கிப்பேட்டை, குமராட்சி, புதுக்கோட்டை மாவட்டத்தின் அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணல்மேல்குடி, திருவரங்குளம், கரம்பக்குடி வட்டாரங்கள் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டன.

அப்போது சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய முதல்வர் திருச்சி, கரூர், அரியலூர் ஆகிய 3 மாவட்டங்களை மசோதாவில் சேர்க்காதது ஏன் எனவும், காவிரிப் படுகையில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுள்ள விவசாயம் அல்லாத திட்டங்களுக்குத் தடை விதிக்காதது ஏன் எனவும் கேள்வியெழுப்பினார். மேலும், மசோதாவைத் தேர்வுக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என வலியுறுத்தினார்.

தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள வேளாண் தனி நிதிநிலை அறிக்கையில், விடுபட்ட இடங்களைச் சேர்ப்பது, வேளாண் சாராத திட்டங்களைத் தடுப்பது, பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மாநிலக் குழுவைத் திருத்தி அறிவிப்பது, மாவட்டக் குழுக்களை அறிவிப்பது போன்ற அம்சங்கள் இருக்கும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, பாதுகாக்கப்பட்ட பகுதியான புதுக்கோட்டை மாவட்டம் வடதெரு பகுதியில் புதிய கச்சா எண்ணெய் எடுப்புக்கான அறிவிப்பு வந்தபோதும், அரியலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஆய்வு எண்ணெய்க் கிணறுகள் அமைக்க ஓஎன்ஜிசி நிறுவனம் மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திடம் விண்ணப்பித்தபோதும், முதல்வர் உடனடியாக அதற்கு எதிர்வினையாற்றி, தமிழ்நாட்டில் மேற்கண்ட திட்டங்களுக்கு அனுமதி இல்லை என்று கூறினார். அதனை உத்தரவாதப்படுத்தும் வகையில், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டம், நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரில் மேலும் செழுமைப்படுத்தப்படும் என்ற நம்பிக்கை காவிரிப் படுகைப் பகுதியில் உள்ளது.

### கொள்முதல் எதிர்பார்ப்புகள்

காவிரிப் படுகைப் பகுதியில் நெல் கொள்முதலில் உள்ள பிரச்சினைகள் சரிசெய்யப்படும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. நெல்லுக்குக் கொள்முதல் விலையாக குவிண்டாலுக்கு ரூ.2,500 கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்த சூழலில், சன்ன ரகத்துக்கு ரூ.2,060 என அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல் கரும்பு டன்னுக்கு ரூ.4,000 கிடைக்கும் என்று எதிர்பார்ப்பு இருந்த சூழலில் ரூ.2,900 என்று அறிவித்திருப்பது சற்று ஏமாற்றமாக இருந்தாலும், அடுத்த நிதிநிலை அறிக்கையில் கூடுதலான தொகை அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

விவசாயத்தில் இயந்திரமயமாக்கல் அதிகமாகியுள்ள சூழலில், வட்டத்துக்கு ஒரு வேளாண் பொறியியல் அலுவலகம், அதன் மூலம் டிராக்டர், அறுவடை இயந்திரம் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்கள் வாடகைக்குக் கிடைக்கும் என்ற அறிவிப்பு சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான செய்தி. கடந்த சம்பா மற்றும் தாளடிப் பருவங்களில் அறுவடை இயந்திரம் தட்டுப்பாடு காரணமாகத் தனியார் நிர்ணயித்த கூடுதல் வாடகை காரணமாக உற்பத்திச் செலவு அதிகமானது. அரசு, அடுத்த நிதிநிலை அறிக்கைகளில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து, கூடுதலான இயந்திரங்களைக் குறைந்த வாடகையில் அனைத்து விவசாயிகளுக்கும் கிடைக்கச் செய்தால், உற்பத்திச் செலவு குறைந்து கூடுதல் வருமானம் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். ஒரு நீண்ட பயணத்துக்கான முதலடி என்ற வகையில் வேளாண் துறைக்கான முதலாவது தனி நிதிநிலை அறிக்கை நல்லதொரு தொடக்கமே.

- வ.சேதுராமன், மாநிலக் கருத்தாளர்,
தமிழ்நாடு அறிவியல் இயக்கம்,
தொடர்புக்கு: mannaisethu1@gmail.com

# பருவநிலை மாற்ற அறிக்கை: சில அடிப்படைகள்







**பற்றியெரியும் புவி!**

### ஐபிசிசி என்பது என்ன?

பருவநிலை மாற்றத்துக்கான பன்னாட்டு அரசுக் குழு (ஐபிசிசி) என்பது ஐநாவின் பருவநிலை மாற்றம் குறித்த அமைப்பு.

1988–ல் ஐநாவின் 195 உறுப்பு நாடுகளால் தொடங்கப்பட்டது!

### ஐபிசிசி மதிப்பீட்டு அறிக்கைகள் என்றால்...

ஏறக்குறைய ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை பருவநிலையின் சமீபத்திய நிலை குறித்த அறிக்கைகளை உருவாக்கி, ஆய்வுக்கு உட்படுத்தி, பருவநிலை மாற்றம் என்ன பாதிப்புகளை ஏற்படுத்தும், மனித குலம் எப்படித் தகவமைத்துக்கொள்வது, பாதிப்புகளை எப்படித் தடுப்பது என்று ஐபிசிசி மதிப்பீட்டு அறிக்கைகள் வழிகாட்டுகின்றன.

பருவநிலை மாற்றம் குறித்த சமீப காலப் புரிதலைத் தருவது, எதிர்கால ஆபத்துகளைச் சுட்டிக்காட்டுவது, புவிவெப்பமாதலைக் கட்டுப்படுத்துவதற்கான சாத்தியம் ஆகியவற்றைக் குறித்த புரிதலை வழங்குவதே ஐபிசிசி மதிப்பீட்டு அறிக்கைகளின் நோக்கம்.

ஐபிசிசி மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு அமைப்பில் உள்ள நாடுகள் அறிவியல் ஆராய்ச்சியாளர்களை நியமிக்கலாம். இந்த அறிக்கைகள் தயாரிக்கும் நடைமுறை ஆழ்ந்த பரிசீலனையையும் வெளிப்படையான மதிப்பீட்டையும் கொண்டது.

பருவநிலை மாற்றம் குறித்த அறிவியலர்களின் புரிதல் மேம்பட்டுக்கொண்டே வருகிறது. மேலும், குறிப்பிட்ட பகுதிகளும், வெவ்வேறு பகுதிகளில் உள்ள மக்களும் எப்படிப் பாதிக்கப்படுவார்கள் என்பதை இந்த அறிக்கைகள் மூலம் திட்டவட்டமாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

### இதுவரை எத்தனை மதிப்பீட்டு அறிக்கைகள் வெளியாகியுள்ளன?

ஐபிசிசி எந்த ஆராய்ச்சியையும் தானாகவே நடத்துவதில்லை. அதேநேரம், உலக அளவில் நடத்தப்படும் ஆராய்ச்சிகளைத் தொகுத்து நம் பார்வைக்குத் தருகிறது. ஐபிசிசி ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையின் ஒரு பகுதியாக – 'பருவநிலை மாற்றம் 2021: இயற்பியல் அறிவியல் ஆதாரங்கள்' ஆகஸ்ட் 9 அன்று வெளியானது. முதல் மதிப்பீட்டு அறிக்கை (1990), இரண்டாவது மதிப்பீட்டு அறிக்கை (1995), மூன்றாவது மதிப்பீட்டு அறிக்கை (2001), நான்காவது மதிப்பீட்டு அறிக்கை (2007), ஐந்தாவது மதிப்பீட்டு அறிக்கை (2014) ஆகியவை முன்னதாக வெளியாகியுள்ளன.

### ஆறாவது மதிப்பீட்டு அறிக்கை எப்படி உருவாக்கப்பட்டது?

ஆறாவது மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பில் 234 புவி, பருவநிலை அறிவியல் நிபுணர்களை ஐபிசிசி உறுப்பினர் நாடுகள் நியமித்திருந்தன. இந்த நிபுணர்கள் 2021 ஜனவரி 31–ம் தேதி வரை வெளியாகியுள்ள 14,000–த்துக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்து, அவற்றில் பெரும்பாலானோர் உடன்படக்கூடிய அம்சங்களை ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையில் தொகுத்துத் தந்திருக்கிறார்கள்.

இந்த அறிக்கையின் வரைவு தயாரான பின், ஜூலை 26–லிருந்து ஆகஸ்ட் 6 வரை இணையவழிக் கூட்டத்தில் அது பகிர்ந்துகொள்ளப்பட்டது. கடைசி நேரக் கருத்துகள், திருத்தங்கள் கேட்கப்பட்ட பின் 'பருவநிலை மாற்றம் 2021: இயற்பியல் அறிவியல் ஆதாரங்கள்' என்கிற ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையின் முதல் பகுதி ஆகஸ்ட் 9 அன்று வெளியிடப்பட்டது. அடுத்ததாக 'தாக்கங்கள், தகவமைப்பு, பாதிக்கப்படுவதற்கு உள்ள சாத்தியம்' குறித்த அறிக்கை 2022 பிப்ரவரியிலும், 'பருவநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துதல்' குறித்த அறிக்கை 2022 மார்ச்சிலும் வெளியாகும். கடைசியாக 'தொகுப்பு அறிக்கை' 2022 அக்டோபரில் வெளியாகும்.

### மதிப்பீட்டு அறிக்கைகள் தாக்கம் ஏற்படுத்துகின்றனவா?

அறிவியலர்கள், செயல்பாட்டாளர்கள், ஏன் பொதுமக்களிடம்கூட இந்த அறிக்கைகள் குறிப்பிடத்தக்க அளவு தாக்கம் செலுத்துகின்றன. ஆனால், பல்வேறு நாட்டு அரசுகள் எடுக்கும் நடவடிக்கைகள் ஆக்கபூர்வமாக இல்லை.

எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்ட பிறகே ஐபிசிசியின் அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. எதிர்கொள்ள உள்ள ஆபத்துகளை அறிவியல் உறுதிபடத் தெரிவித்தாலும், அவற்றைக் கொள்கைபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் உலக நாடுகள், பருவநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடைமுறை நடவடிக்கைகளை எடுப்பதில் சுணக்கம் காட்டுகின்றன. என்ன நடந்துவிடும் பார்த்துக்கொள்ளலாம் என்கிற அலட்சிய மனோபாவமே இதற்குக் காரணம். ஆனால், இயற்கையோ பருவநிலை மாற்றமோ யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அதைத் தூண்டிய மனித குலம் தங்களை மாற்றிக்கொண்டால் மட்டுமே, பருவநிலை மாற்றம் ஏற்படுத்தும் தாக்கங்களிலிருந்து உலகம் தப்பிக்க முடியும்.












## கவனத்தில் கொள்ள வேண்டிய எச்சரிக்கைகள்

**ஐபிசிசி ஆறாவது மதிப்பீட்டு அறிக்கையின் முதல் பகுதி சுட்டிக்காட்டியுள்ள சில எச்சரிக்கைகள்:**

- புவி வெப்பமாதல்-அதன் தொடர்ச்சியாக நிகழும் பருவநிலை மாற்றத்துக்கு மனிதர்களே முழு முதற் காரணம்.
- புவி வெப்பமாதல்தான் பருவநிலை மாற்றத்தைத் தூண்டுகிறது. தொழிற்புரட்சிக்கு முன்பு இருந்ததைவிட, தற்போதைய உலக சராசரி வெப்பநிலை 1.1 டிகிரி செல்சியஸ் ஏற்கெனவே அதிகரித்துவிட்டது. கடந்த ஒரு லட்சம் ஆண்டுகளில் இல்லாத வெப்பநிலை அதிகரிப்பு இது. சராசரி வெப்பநிலையை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்த வேண்டுமென அறிவியலர்கள் வலியுறுத்திவருகிறார்கள். ஆனால், அந்த 1.5 டிகிரி செல்சிஸை இன்னும் 20 ஆண்டுகளில் கடந்துவிட உள்ளோம்.
- ஒவ்வொரு 1 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை உயர்வுக்கும் தீவிர மழைப்பொழிவு நிகழ்வுகள் 7% அதிகரிக்கும். ஏற்கெனவே 1 டிகிரி செல்சியஸ் உயர்ந்ததன் பின்விளைவை உலகம் முழுவதும் நிகழும் புயல், வெள்ளம், பெருமழை போன்ற இயற்கைச் சீற்றங்களின் வழியாக உணர்ந்துவருகிறோம்.
- புவியை ஒரு போர்வைபோல கரியமில வாயு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு போன்ற பசுங்குடில் வாயுக்கள் சூழ்ந்துள்ளன. இந்தப் போர்வையில் 76% இருப்பது கரியமில வாயு. கடந்த 20 லட்சம் ஆண்டுகளில் இல்லாத அளவுக்குப் புவியில் கரியமில வாயு அதிகரித்திருக்கிறது. தற்போது வளிமண்டலக் காற்றில் 420 பி.பி.எம். (கனஅளவில் 10 லட்சத்தில் ஒரு பங்கு) அளவுக்குக் கரியமில வாயு உள்ளது. கரியமில வாயுவின் அளவு 400 பி.பி.எம்மை எட்டுவதே ஆபத்தாகக் கருதப்பட்ட நிலையில், 420-ஐக் கடந்துவிட்டது.
- கடந்த 1,000 ஆண்டுகளில் இல்லாத வகையில் ஆர்க்டிக் பனிப்பாறை அளவு கடந்த 20 ஆண்டுகளில் வேகமாகக் குறைந்திருக்கிறது.
- பசுங்குடில் வாயு வெளியீட்டை இன்றைக்கே கட்டுப்படுத்தினாலும்கூட அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்குச் சில பாதிப்புகளைத் தடுத்துநிறுத்தவோ மீட்டெடுக்கவோ முடியாது. அந்த வகையில் ஆர்க்டிக், அண்டார்க்டிக், இமயமலைப் பனிச்சிகரங்கள் உள்ளிட்டவை தங்கள் பழைய நிலையை அடுத்த ஆயிரம் ஆண்டுகளில்கூட அடைவது சாத்தியமில்லை. இதனால் உலக இயற்கைச் சுழற்சிகளில் ஏற்பட்ட சீர்குலைவு தொடரும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.
- கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடல் வெப்பமாதல் 2-8 மடங்கு வரை ஒவ்வொரு பகுதிக்கு ஏற்ப அதிகரித்துக் காணப்படும்.
- கடந்த 3,000 ஆண்டுகளில் இல்லாத வகையில் கடல்மட்டம் உயர்ந்துவருகிறது. அடுத்த நூறு ஆண்டுகளுக்குக் கடல்மட்ட உயர்வு தொடர்ந்து அதிகரித்தபடியேதான் இருக்கும். அப்படியென்றால், கடலோரப் பகுதிகள், துறைமுக நகரங்கள் மூழ்கிக்கொண்டே வரும், சிறு தீவுகள் முற்றிலும் கடலில் மூழ்கிப்போகும்.

தொகுப்பு: ஆதி வள்ளியப்பன்

இணையத்திலும் இந்து தமிழுடன் இணைந்திருக்க...
www.hindutamil.in

சமூக வலைதளங்களில் எங்களைத் தொடர...
facebook.com/TamilTheHindu/
twitter.com/tamilthehindu
Youtube.com/tamilthehindu

கட்டுரைகளை editpage@hindutamil.co.in; வாசகர்கள் விமர்சனங்களை feedback@hindutamil.co.in ஆகிய மின்னஞ்சல்களுக்கு அனுப்பிடுங்கள். பத்திரிகையில் வெளியாகும் கட்டுரையாளர்கள் / பேட்டியாளர்களின் கருத்துகள் அவர்களுடைய சொந்தக் கருத்துகளே. அவை எந்த வகையிலும் இப்பத்திரிகையின் கருத்துகள் ஆகா. அஞ்சல் முகவரி:
ஆசிரியர் இலாகா, இந்து தமிழ், கஸ்தூரி மையம், 124, வாலாஜா சாலை, சென்னை - 2.

மீட்டர் பேசுது

| சென்னை | வேலூர் | திருச்சி | மதுரை | கோவை |
|---|---|---|---|---|
| 34.9°c | 34.1°c | 35.8°c | 36.2°c | 31.9°c |

| சேலம் | நெல்லை | உதகை | கொடைக்கானல் |
|---|---|---|---|
| 33.5°c | 34.8°c | 17.3°c | 18.6°c |

தமிழ்நாடு, புதுச்சேரியின் ஒருசில இடங்களில் மழை பெய்யக்கூடும். சென்னையில் மேகமூட்டம் காணப்படும். ஒருசில பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும். வெப்பநிலை 26 முதல் 34 டிகிரி செல்சியஸ் வரை இருக்கக்கூடும்.

புதிய ஆதீனம் சுந்தரமூர்த்தி தம்பிரானுக்கு

# மதுரையில் ஆக.23-ல் பட்டம் சூட்டும் விழா

● தமிழகம் முழுவதும் இருந்து மடாதிபதிகள் பங்கேற்பு

ஒய்.ஆண்டனி செல்வராஜ்

■ மதுரை

மதுரை ஆதீனத்தின் 292-வது மடாதிபதியாக இருந்த ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமி உடல்நலக் குறைவால் கடந்த 13-ம் தேதி முக்தி அடைந்தார். இவரது மறைவுக்குப் பிறகு ஆதீன மடத்தில் அன்றாடப் பூஜைகளை இளைய சன்னிதானம் சுந்தரமூர்த்தி தம்பிரான் மேற்கொண்டுள்ளார்.

ஆனால், அவர் ஆதீன சிம்மாசன பீடத்தில் அமரவில்லை. இதனால் ஆதீன சம்பிரதாயங்களின்படி இளைய சன்னிதானம் சுந்தரமூர்த்தி தம்பிரான் மதுரை ஆதீனத்தின் 293-வது ஆதீனமாக பட்டம் சூட்டப்பட உள்ளார். தற்போது அதற்கான ஏற்பாடுகளை ஆதீன மடத்தின் நிர்வாகிகள் செய்து வருகின்றனர். இதுகுறித்து மதுரை ஆதீன நிர்வாகத்தினர் கூறியதாவது:

இளைய சன்னிதானமாக சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகளை மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் முறைப்படி 2019-ம் ஆண்டே நியமித்துவிட்டார். தற்போது அவர் ஆதீனமாக சிம்மாசனத்தில் அமர உள்ளதால் அவரது பெயர் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞான சம்பந்ததேசிக பரமாச்சார்ய சுவாமிகள் என்று மாற்றப்பட்டுள்ளது.



▲ இளைய ஆதீனம் சுந்தரமூர்த்தி

இவர் ஆதீனமாவதில் எந்த சிக்கலும் இல்லை. மதுரை ஆதீனம் முக்தியடைந்த பிறகு இயல்பாகவே இளைய சன்னிதானம் மதுரை ஆதீனமாக செயல்படத் தொடங்கிவிட்டார். ஆனால் அவர் ஆதீனமாக சிம்மாசனம் சூட்டப்பட்டு அவரது பீடத்தில் ஏறவில்லை. அதற்கு மடத்தின் வழக்கமான சில பூஜைகள், சடங்குகள் உள்ளன. ஆதீனம் அருணகிரிநாதர் மறைந்த 10-வது நாளில் நடக்கும் குருபூஜைக்குப் பிறகு இளைய சன்னிதானம், மதுரை ஆதீனத்தின் பீடத்தில் முறைப்படி ஏறி ஆதீன மடத்தின் பணிகளை மேற்கொள்வார்.

இதற்காக வரும் 23-ம் தேதி மடத்தில் ஒரு விழா நடைபெற உள்ளது. இதில் தமிழகத்தின் அனைத்து ஆதீனத்தின் மடாதிபதிகள் கலந்து கொள்கின்றனர். அவர்கள் முன்னிலையில் இளைய சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞான சம்பந்ததேசிக பரமாச்சார்ய சுவாமிகள் மதுரை ஆதீனத்தின் 293-வது ஆதீனமாக சிம்மாசனம் சூட்டப்பட்டு பீடத்தில் ஏறுகிறார்.

**வாழ்க்கைக் குறிப்பு**

தற்போதைய இளைய சன்னிதானத்துக்குப் பெற்றோர் சூட்டிய பெயர் பகவதி லட்சுமணன். அவரது தந்தை பெயர் காந்திமதிநாதன் பிள்ளை. தாயார் பெயர் ஜானகி அம்மாள். பகவதி லட்சுமணன் 1954-ம் ஆண்டு மார்ச் 25-ம் தேதி திருநெல்வேலி டவுனில் பிறந்தார். குன்றக்குடி ஆதீனத்தில் 1975-ம் ஆண்டு தம்பிரானாகப் பதவியேற்று, 2 ஆண்டுகள் சமயத் தொண்டும், தருமபுரம் ஆதீனத்தில் தம்பிரானாக 5 ஆண்டுகள் சமயத் தொண்டாற்றினார்.

திருவாவடுதுறை ஆதீனத்தில் 35 ஆண்டுகள் மூத்த தம்பிரானாக சமய, சைவத் தொண்டாற்றினார். மதுரை ஆதீனத்தில் மறைந்த ஆதீனம் அருணகிரிநாதரால் 2019-ம் ஆண்டு ஜூன் 6-ம் தேதி சமய தீட்சை, விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை செய்யப்பட்டு இளைய சன்னிதானமாக நியமிக்கப்பட்டார்.

### அருணகிரிநாதரின் தத்ரூப பளிங்கு சிலை

மதுரை ஆதீனம் அருணகிரிநாதர் கடந்த 13-ம் தேதி முக்தியடைந்தார். கரோனா கட்டுப்பாடுகளால் அஞ்சலி செலுத்த வரமுடியாத பக்தர்கள் ஏராளமானோர், தற்போது மதுரை ஆதீன மடத்துக்கு அஞ்சலி செலுத்த வருகின்றனர். அவர்கள் அஞ்சலி செலுத்த வசதியாக ஆதீன மடத்தில் அருணகிரிநாதரின் பளிங்குச் சிலை வைக்கப்பட்டுள்ளது.



▲ முக்தியடைந்த ஆதீனம் அருணகிரிநாதரின் சிலை.

படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

பளிங்குக் கற்களைக் கொண்டு 500 கிலோ எடையில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சிலை ராஜஸ்தான் மாநிலத்தில் வடிவமைக்கப்பட்டு, அங்கிருந்து கொண்டுவரப்பட்டு மடத்தில் வைக்கப்பட்டிருந்தது. இந்தச் சிலை தம்பிரான் ஒருவரால் கடந்த ஆண்டு ஆதீனம் அருணகிரிநாதர் உயிரோடு இருந்தபோது வழங்கப்பட்டிருந்தது. மடத்தின் உள்ளே மீனாட்சி – சொக்கநாதர் சிலைகளுக்கு அருகே இந்தச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

அருணகிரிநாதர் அமர்ந்திருந்த நிலையில் தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்தச் சிலையின் அருகில் சென்று பார்த்தால்தான் அது சிலை என்பது தெரியும். மேலும், மதுரை ஆதீனம் மிகவும் விரும்பிப் பயன்படுத்திய புல்லட் மற்றும் யமஹா பைக் மடத்துக்குள் அவரது நினைவாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

3 ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணிபுரியும்

# அரசு ஊழியர்கள் இடமாற்றம்

● தமிழக தேர்தல் அதிகாரி உத்தரவு

■ செங்கல்பட்டு

தமிழகத்தில் 2019-ம் ஆண்டு விடுபட்ட 9 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடத்தப்பட உள்ளது. வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி, தென்காசி ஆகிய மாவட்டங்கள் புதிதாக பிரிக்கப்பட்டு அவற்றில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகள் முழுமையாக வகுக்கப்படாமல் இருந்தன.

இந்நிலையில் விடுபட்ட 9 மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு செப்டம்பர் 15-ம் தேதிக்குள் தேர்தல் நடத்தி முடிக்க தமிழக மாநில தேர்தல் ஆணையத்துக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவுள்ள மாவட்டங்களில் 3 ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணிபுரியும் ஊழியர்களை வரும் 31-ம் தேதிக்குள் இடமாற்றம் செய்ய தமிழக மாநில தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் தேர்தல் ஆணைய உத்தரவை நடைமுறைப்படுத்துவதில் காஞ்சிபுரம் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் காலதாமதம் செய்வதாக ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தினர் குற்றச்சாட்டு தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தினர் கூறியதாவது: உள்ளாட்சித் தேர்தல் நடைபெறுவதையொட்டி ஊரக வளர்ச்சித் துறையில் 3 ஆண்டுகள் பணிபுரிந்து இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர்களை பணியிட மாற்றம் செய்ய வேண்டும் என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

ஆனால், அந்தப் பணிகளை விரைந்து செய்யாமல் காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய இரண்டு மாவட்ட நிர்வாகத்தினர் மெத்தனமாக உள்ளனர். விரைந்து பணி மாற்றம் செய்யும்போது அந்த பகுதியில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பணியில் சேர்ந்தவுடன் அங்கு நடக்கும் நடப்புகளை தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும். தேர்தலை நீர்த்துப் போகச் செய்யவே மாவட்ட நிர்வாகங்கள் முயல்கின்றன. எனவே, தேர்தல் ஆணையத்தின் உத்தரவை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

இதுகுறித்து ஊரக வளர்ச்சி துறை அலுவலர் ஒருவர் கூறியதாவது: 3 ஆண்டுகள் பணிபுரிந்த ஊழியர்களின் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் அவர்கள் பணியிட மாற்றம் செய்யப்படுவர் என்றார்.



▲ மத்திய இணை அமைச்சரான பின்னர் முதல்முறையாக கோவை வந்த எல்.முருகனுக்கு மலர் தூவி வரவேற்பு அளித்த பாஜகவினர். அருகில், பாஜக மாநில தலைவர் அண்ணாமலை உள்ளிட்டோர். படம்: ஜெ.மனோகரன்

# வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் பின்வாங்கும் திமுக அரசு

● மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் குற்றச்சாட்டு

■ கோவை

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் திமுக அரசு பின்வாங்குவதாக மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் எல்.முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய அரசின் திட்டங்களை மக்கள் அறியச் செய்யும் நோக்கில் 'மக்கள் ஆசி யாத்திரை' எனும் சுற்றுப் பயணத்தை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கோவை காமராஜபுரத்தில் நேற்று தொடங்கினார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

எந்த அவையிலும் உறுப்பினராக இல்லாத, சாதாரண ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு மத்திய அமைச்சர் வாய்ப்பை பிரதமர் மோடி வழங்கி இருக்கிறார். எஸ்.சி., மலைவாழ் மக்கள், ஓபிசி பிரிவினர் ஆகியோருக்கு அமைச்சரவையில் இடம் அளித்துள்ளனர். எந்த ஒரு கட்சியும் செய்யாததை பாஜக செய்துள்ளது.

சாதாரண குடும்பத்தில் இருந்து வந்த எங்களை நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்து வைக்க இருந்தனர். எங்களை அறிமுகம் செய்து வைக்கக் கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் அவையில் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் பிரச்சினையைக் கிளப்பி அறிமுகம் செய்து வைக்க முடியாத நிலையை ஏற்படுத்தினர்.

திமுகவின் 100 நாள் ஆட்சியில் அவர்கள் வாக்குறுதி அளித்ததை நிறைவேற்றவில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும் என்று அறிவித்தனர். ஆனால், பட்ஜெட்டில்கூட அது குறித்து எதுவும் இடம்பெறவில்லை. கல்விக் கடனைத் தள்ளுபடி செய்வோம் என்றனர். அதுபற்றியும் தகவல் இல்லை.

எவையெல்லாம் சாத்தியம் இல்லாமல் இருக்கிறதோ, அவற்றை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டு, மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெற்ற பிறகு, அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் திமுக அரசு பின்வாங்குகிறது. கொங்கு நாடு வேண்டும், வேண்டாம் என எந்த கருத்தையும் பாஜக தெரிவிக்கவில்லை. இந்த விவகாரம் மக்களின் நிலைப்பாட்டை பொருத்து இருக்கும். அனைத்து சாதியைச் சேர்ந்தவர்களும் அர்ச்சகராவது புதிதல்ல. ஏற்கெனவே பல கோயில்களில் அனைத்து சமுதாயத்தினரும் அர்ச்சகராக உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

### திருச்சியில் மருத்துவ மாணவிகள் 2 பேருக்கு கரோனா

■ திருச்சி

திருச்சி கிஆபெ விசுவநாதம் மருத்துவக் கல்லூரி மாணவிகள் 2 பேருக்கு கரோனா இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது.

கரோனா ஊரடங்கு தளர்வை ஒட்டி கல்லூரிகள் திறக்கப்பட்டு வரும் நிலையில், தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகள் நேற்று திறக்கப்பட்டன. அதன்படி, திருச்சி கிஆபெ விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில் மாணவ, மாணவிகள் 600 பேருக்கு கரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில், மாணவிகள் 2 பேருக்கு கரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. இதில், ஒரு மாணவி, தனிமைப்படுத்திக் கொள்வதாக கூறிவிட்டு வீட்டுக்குச் சென்றுவிட்ட நிலையில், மற்றொரு மாணவி, திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக கல்லூரி துணை முதல்வர் ஹர்சியா பேகம் கூறியதாவது: கல்லூரி திறக்கப்படுவதையொட்டி கடந்த 3 நாட்களுக்கு முன்பிருந்தே மாணவ, மாணவிகள் கல்லூரிக்கு வரத் தொடங்கினர். இதையடுத்து, கல்லூரியில் பயிலும் மாணவ - மாணவிகள் 600 பேருக்கும் கரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் 2 மாணவிகளுக்கு கரோனா தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டது. இருவரும் நல்ல நிலையில் உள்ளனர்.

மேலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் கரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

விவசாயியை தாக்கிய விவகாரத்தில்

# விஏஓ, உதவியாளர் பணியிடை நீக்கம்

■ கோவை

கோவை மாவட்டம், அன்னூர் ஒட்டர்பாளையத்தில் கிராம நிர்வாக அலுவலராக கலைச்செல்வி, கிராம உதவியாளராக முத்துசாமி பணியாற்றி வந்தனர். கடந்த 6-ம் தேதி விஏஓ அலுவலகத்துக்கு ஆவணங்களை சரிபார்க்க வந்த கோபிராசிபுரத்தைச் சேர்ந்த விவசாயி கோபால்சாமிக்கும், வி.ஏ.ஓ கலைச்செல்விக்கும் இடையே தகராறு ஏற்பட்டது.

சாதிப் பெயரை கூறி திட்டி காலில் விழுந்து மன்னிப்பு கேட்குமாறு கூறியதாக, கிராம உதவியாளர் முத்துசாமி அளித்த புகாரின்பேரில், விவசாயி கோபால்சாமி மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் ஒரு வழக்கும், வி.ஏ.ஓ கலைச்செல்வி அளித்த புகாரின் பேரில் அரசு ஊழியரை பணி செய்யவிடாமல் தடுத்ததாக மேலும் ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலான நிலையில், கோபால்சாமியை, முத்துசாமி தாக்கும் வீடியோ பின்னர் வெளியானது. இதையடுத்து, விஏஓ மற்றும் கிராம உதவியாளர் மீது அன்னூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். மேலும், இருவரும் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.



▲ கலைச்செல்வி



▲ முத்துசாமி

ஆட்சியர் ஜி.எஸ்.சமீரன் உத்தரவின்பேரில், மாவட்ட வருவாய் அலுவலர் லீலா அலெக்ஸ் விசாரித்து அறிக்கை சமர்ப்பித்தார். இதைத் தொடர்ந்து, விஏஓ கலைச்செல்வி, கிராம உதவியாளர் முத்துசாமி ஆகியோர் நேற்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

ஸ்டெர்லைட் ஆலையை திறக்கக் கோரி

# போராடியவர்கள் மீதான வழக்கை விசாரிக்க தடை

● உயர் நீதிமன்றம் உத்தரவு

■ மதுரை

ஆக்சிஜன் தயாரிப்புக்காக ஸ்டெர்லைட் ஆலையை திறக்கக் கோரி போராட்டம் நடத்தியவர்கள் மீதான வழக்கை விசாரிக்க உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை துணைத் தலைவர் சுமதி உட்பட பலர், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனு: தூத்துக்குடியில் இயங்கி வந்த ஸ்டெர்லைட் ஆலை மக்கள் போராட்டம் காரணமாக மூடப்பட்டது.

கரோனா 2-ம் அலையின்போது ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்பட்டதால் ஆக்சிஜன் உற்பத்தி செய்வதற்காக உச்ச நீதிமன்ற அனுமதியின்பேரில் ஸ்டெர்லைட் ஆலை திறக்கப்பட்டு ஆக்சிஜன் உற்பத்தி செய்யப்பட்டது.

உச்ச நீதிமன்றம் வழங்கிய அனுமதி ஜூலை 31-ம் தேதியுடன் முடிவடைய இருந்த நிலையில் கரோனா 3-வது அலை ஏற்பட்டால் ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்படக்கூடாது, இதனால் தொடர்ந்து ஆக்சிஜன் தயாரிக்க அனுமதி வழங்கவும், ஸ்டெர்லைட் ஆலை தொடர்ந்து செயல்பட அனுமதி வழங்கக் கோரி ஜூலை 27-ம் தேதி ஆலை முன்பு சிலர் போராட்டம் நடத்தினர்.

இதையடுத்து அவர்கள் மீது சிப்காட் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்ற நோக்கத்திலேயே அவர்கள் கூடினர். இதனால் இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும். வழக்கு விசாரணைக்கு தடை விதிக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

இந்த மனுவை நீதிபதி இளங்கோவன் விசாரித்தார். பின்னர் வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தும், மனு தொடர்பாக சிப்காட் போலீஸார் பதில் அளிக்க உத்தரவிட்டு விசாரணையை செப்.22-ம் தேதிக்கு நீதிபதி தள்ளி வைத்தார்.

'பஞ்ச்'சோந்தி பராக்!

உண்மையான தொண்டர்கள் இருக்கும் வரை அதிமுகவை யாராலும் அசைக்க முடியாது!
- முன்னாள் அமைச்சர் தங்கமணி




- ரிஷிவந்தியா, தஞ்சாவூர்.

● செய்தி : தடைக் கற்களைத் தாண்டிச் செல்லும் மிகப் பெரிய திட்டம் ஒன்று வரப்போகிறது! - பிரதமர் மோடி

பஞ்ச் : சொல்லுங்க ஜீ... அடுத்து நாங்க எங்கே வரிசையில நிற்கணும்? - ஜெ.நெடுமாறன், சென்னை.

● செய்தி : தன்னை துணை பிரதமராகவும், மகனை முதல்வராக்கவும் காய் நகர்த்துகிறார் மு.க.ஸ்டாலின்! - தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை

பஞ்ச்: அவங்களுக்கே தோணாத யோசனையை எல்லாம் எடுத்துக் கொடுக்குறீங்களே... சார்! - அம்பை தேவா, சென்னை.

மகாராஷ்டிராவில் எஸ்பியாக பணிபுரியும்

# தமிழக ஐபிஎஸ் அதிகாரிக்கு மீண்டும் மத்திய அரசு விருது

● நூற்றுக்கும் மேற்பட்ட நக்சல்களை வீழ்த்தியவர்

இ.மணிகண்டன்

■ விருதுநகர்

மகாராஷ்டிராவில் எஸ்பியாக பணிபுரியும் ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரிக்கு மத்திய அரசு வீரதீரச் செயலுக்கான விருதை அறிவித்துள்ளது.

காவல்துறையில் சிறப்பாக வீரதீரச் செயல் புரிந்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும், குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று மத்திய உள்துறை அமைச்சகம் 'வீரதீரச் செயலுக்கான போலீஸ் பதக்கம்' எனும் விருதை வழங்கி கவுரவிப்பது வழக்கம்.

இவ்விருதைப் பெறுவது காவல்துறையில் மிகவும் அரிதான மற்றும் பெருமைக்குரிய சாதனையாகக் கருதப்படும். மகாராஷ்டிராவில் பணியாற்றிவரும் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்த ஐபிஎஸ் அதிகாரி ஹரி பாலாஜி இருமுறை இவ்விருதை பெற்று சாதனை படைத்துள்ளார்.

ஸ்ரீவில்லிபுத்தூரைச் சேர்ந்தவர் டாக்டர் என்.ஹரி பாலாஜி. மதுரை மருத்துவக் கல்லூரியில் எம்பிபிஎஸ் படித்து முடித்த பின்பு, சென்னையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் மருத்துவ அதிகாரியாகப் பணியில் சேர்ந்தார்.

அதைத் தொடர்ந்து, யுபிஎஸ்சி தேர்வுக்கு தயாராகி வந்த அவர் 2013-ம் ஆண்டில் சிவில் சர்வீசஸ் தேர்வில் வெற்றிபெற்று மகாராஷ்டிரா மாநிலத்தில் ஐபிஎஸ் அதிகாரியாக பணியில் சேர்ந்தார்.

பின்னர், பால்கர் மாவட்டத்தில் 6 மாதங்கள் பயிற்சிப் பணி முடித்து பீட் மாவட்டத்தில் உதவி எஸ்பியாக 2 ஆண்டுகளும், நக்சல் ஊடுருவல் அதிகமுள்ள மாவட்டங்களில் ஒன்றான கட்சிரோலி மாவட்டத்தில் கூடுதல் எஸ்பியாக இரண்டரை ஆண்டுகளும் பணியாற்றினார்.



▲ என்.ஹரிபாலாஜி

அப்போது, நக்சல் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்தார். கடந்த 2 ஆண்டுகளாக அமராவதி மாவட்டத்தில் எஸ்பியாகப் பணியாற்றி வருகிறார்.

எஸ்பி ஹரி பாலாஜி, மே 2017 முதல் ஜூலை 2019 வரை கட்சிரோலி மாவட்டத்தில் சி-60 (கமாண்டோ 60) என்ற சிறப்பு நக்சல் எதிர்ப்பு படையை வழிநடத்தியபோது 60 என்கவுன்ட்டர்கள் நடத்தப்பட்டன. அதில், 74 நக்சல்கள் வீழ்த்தப்பட்டனர்.

2018-ம் ஆண்டில் மட்டும் சுமார் 50 நக்சல்கள் வீழ்த்தப்பட்டனர். இதை அப்போதைய உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், மகாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் ஆகியோர் வரலாற்றில் மிகப்பெரிய வெற்றி என்று ஹரி பாலாஜியை பாராட்டினர்.

2018-ல் நடந்த தாக்குதலில் இரு நக்சல்களை வீழ்த்தியதற்காக 2021 ஜனவரியில் நடந்த குடியரசு தினவிழாவில் எஸ்பி ஹரி பாலாஜி மத்திய உள்துறை அமைச்சகத்தால் முதல் தடவையாக 'வீரதீரச் செயலுக்கான போலீஸ் பதக்கம்' பெற்றார். தற்போது 2-வது தடவையாக இப்பதக்கம் நேற்று முன்தினம் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் அவருக்கு வழங்கப்பட்டது.

2019-ம் ஆண்டில் நக்சல்களின் தலைமை இடமாகக் கருதப்படும் அபுஜ்மாட் எனும் அடர்ந்த காட்டில் 200 போலீஸார் கொண்ட படையை ஹரி பாலாஜி வழிநடத்திச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்தி, ஒரு மூத்த மாவோயிஸ்ட் குழுவை வீழ்த்தினார். அந்த சம்பவத்தில் பல முதுநிலை நக்சல்கள் படுகாயம் அடைந்தனர். இதைப் பாராட்டும் வகையில் மத்திய உள்துறை அமைச்சகம் 2-வது முறையாக எஸ்பி ஹரி பாலாஜிக்கு இந்த விருதை வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# உயிர் துறந்து வளர்த்த சுதந்திரத் தீ!

■ தொகுப்பு: மிது கார்த்தி ■

**இந்தியா சுதந்திரமடைந்து 75ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துவிட்டது. இந்தச் சுதந்திரம் சும்மா கிடைத்துவிடவில்லை. நாட்டின் விடுதலைக்காகப் போராடியவர்கள் கணக்கில் அடங்காதவர்கள். அவர்களில் இளம் வயதிலேயே விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்தவர்களும் உண்டு. அவர்களில் சிலரைப் பற்றிய தொகுப்பு இது:**




## குதிராம் போஸ்



ஒரு மனிதன் நீண்ட ஆயுளோடு வாழ்வது பெருமையல்ல; எப்படி வாழ்ந்தான் என்பதே பெருமை. அந்த வகையில் பிரிட்டிஷாருக்கு எதிராகப் போராடி 18 வயதிலேயே தூக்கு மேடை ஏறியவர் வங்கத்துச் சிங்கம் குதிராம் போஸ். மிட்னாபூரில் 1889ஆம் ஆண்டில் பிறந்த குதிராம் போஸ், சிறுவயதிலிருந்தே நாட்டுப் பற்றோடு வளர்ந்தார். 13 வயதிலேயே சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார். 'யுகாந்தர்' என்கிற புரட்சிக்குழுவில் இணைந்து பிரிட்டிஷ் காவல் நிலையங்களைத் தெறிக்கவிட்டார்.

பிரிட்டிஷாருக்குப் பாடம் புகட்ட, மாஜிஸ்திரேட் கிங்ஸ்போர்ட் மீது குண்டு வீசினர். ஆனால், அந்த வாகனத்தில் கிங்ஸ்போர்டுக்குப் பதில் வந்த வழக்கறிஞர் குடும்பத்தோடு உயிரிழந்தார். இந்த வழக்கில் குதிராம் போஸுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 1908 ஆகஸ்ட் 11 அன்று குதிராம் போஸ் முசாபர்பூர் சிறையில் 'வந்தே மாதரம்' என்று முழங்கியபடி தூக்கு மேடை ஏறினார். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் மிக இளம் வயதில் இன்னுயிரை ஈந்தவர் குதிராம்போஸ்.

## வாஞ்சிநாதன்



வட இந்தியாவில் குதிராம் போஸ் செய்ததைப் போலவே தென்னிந்தியாவில் ஒரு சம்பவம் நடைபெற்றது. அந்தச் சம்பவத்தை நடத்திக்காட்டியவர் வாஞ்சிநாதன். 1911ஆம் ஆண்டு ஜூன் 17 அன்று திருநெல்வேலி ஆட்சித் தலைவராக இருந்த ஆஷ், கொடைக்கானலில் படித்துக்கொண்டிருந்த தன்னுடைய குழந்தைகளைச் சந்திக்க மனைவியுடன் ரயிலில் புறப்பட்டார். மணியாச்சி ரயில் நிலையம் வந்தபோது, ஆஷ் இருந்த ரயில் பெட்டிக்குள் ஏறி துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார் வாஞ்சிநாதன். அதே ரயில் நிலையத்தில் அவரும் சுட்டு தற்கொலை செய்துகொண்டார். வ.உ.சிதம்பரனார், பாரதியாரின் பேச்சுகளைக் கேட்டு சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்தவர் வாஞ்சிநாதன். வ.உ.சி.யையும் சுதேசிக் கப்பலையும் அழிக்க பல தொல்லைகளை அளித்த ஆஷைச் சுட்டுக்கொன்றார் வாஞ்சிநாதன். வேறு காரணத்துக்காக ஆஷை கொன்றார் என்று கூறுவோரும் உண்டு. இந்தியர்கள் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக மட்டுமே போராடுவார்கள்; அதிகாரிகளின் உயிருக்கு ஊறுவிளைவிக்க மாட்டார்கள் என்று பிரிட்டிஷார் எண்ணியதை இச்சம்பவம் மாற்றியது. வாஞ்சிநாதன் உயிரிழந்தபோது 25 வயதுதான்.

## வேலு நாச்சியார்



பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இளம் வயதிலேயே போராடிய முதல் தமிழ்ப் பெண், வேலு நாச்சியார். 1730ஆம் ஆண்டில் பிறந்த வேலு நாச்சியார் வீரப்பெண்ணாகவே வளர்ந்தார். அவருக்கு 16 வயதில் முத்துவடுகநாதருடன் திருமணம் நடந்தது. முத்துவடுகநாதர் 1750இல் சிவகங்கை அரசரானார். 1772இல் அவர் ஆர்க்காடு நவாப்புக்குக் கப்பம் கட்ட மறுத்ததால், பிரிட்டிஷாரும் நாவாப்பும் போர் தொடுத்தனர். போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார். கணவனை இழந்த துயரத்திலும் தன் நாட்டை மீட்டெடுக்க சபதம் செய்துவிட்டு அங்கிருந்து வேலு நாச்சியார் வெளியேறினார். சில காலம் கழித்து ஹைதர் அலி, மருது சகோதரர்கள் உதவியுடன் பிரிட்டிஷ் மற்றும் நவாப் படைகளை எதிர்த்துப் போரில் குதித்தார். தீரத்தோடு போராடிய வேலு நாச்சியார், எட்டு ஆண்டுகள் கழித்து சிவகங்கையை மீட்டார். 18ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் நிலையாக ஆட்சியில் இருந்த ஒரே அரசி வேலு நாச்சியார்தான்.

## மங்கள் பாண்டே



இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டம் எனப்படும் சிப்பாய்க் கலகத்துக்குக் காரணமானவர் மங்கள் பாண்டே. 1827இல் உத்தர பிரதேசத்தில் நாக்வார் கிராமத்தில் பாரம்பரிய குடும்பத்தில் பிறந்தவர் இவர். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி படைப்பிரிவில் பணியாற்றிய அவரை மாற்றிய நிகழ்வு நடந்தது.

கொல்கத்தா பாரக்பூரில் 34ஆவது படைப்பிரிவில் புதிய துப்பாக்கிகள் வீரர்களுக்கு வழங்கப்பட்டன. அதன் தோட்டாக்களில் விலங்குகளின் கொழுப்பு தடவப்பட்டது. இது மத நம்பிக்கையைச் சீண்டும் விதமாக இருந்ததால், பெரும் கலகம் வெடித்தது. இதை முன்னின்று நடத்தியவர் மங்கள் பாண்டே. இக்கலகத்தில் அவர் ஆங்கிலேய அதிகாரியைக் கொன்றார். பெரும் போராட்டத்துக்குப் பிறகு சுட்டுப்பிடிக்கப்பட்ட மங்கள் பாண்டே, பிறகு தூக்கிலிடப்பட்டார். மங்கள் பாண்டே உயிரிழந்தபோது அவருக்கு 29 வயதுதான். ஆனால், இந்தக் கலகம் முதல் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்குத் தொடக்கப்புள்ளியாக அமைந்தது.

## ராணி லட்சுமி பாய்



ஜான்சி ராணி லட்சுமி பாய், முதல் இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்ற தளகர்த்தர். சிறு வயதிலேயே தாயை இழந்தாலும் வாள்வீச்சு, குதிரையேற்றம் என வீரப்பெண்ணாக வார்க்கப்பட்டார். 1842இல் ஜான்சி என்கிற பகுதியை ஆண்ட மன்னர் கங்காதர ராவுடன் அவருக்குத் திருமணம் நடந்தது. 1851இல் ஆண் குழந்தை பிறந்தது. ஆனால், அக்குழந்தை நான்கு மாதங்களிலேயே இறந்ததால், தன் உறவினரின் குழந்தையைத் தத்தெடுத்தார். அப்போது அவருடைய கணவரும் இறந்தார். மன்னரின் வாரிசாகத் தத்துக் குழந்தையை பிரிட்டிஷார் ஏற்க மறுத்ததால், லட்சுமி பாயே ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். சிப்பாய்க் கலகத்துக்குப் பிறகு 1857ஆம் ஆண்டில் லட்சுமி பாயின் படைக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையே போர் வெடித்தது. இப்போரில் தத்துக் குழந்தையை முதுகில் சுமந்தபடி அவர் போர் புரிந்தது வரலாற்றின் பக்கங்களில் அவருடைய துணிச்சலையும் வீரத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டியது. இப்போரில் அவர் இறுதி மூச்சை சுவாசித்தார். 1857 ஜூனில் உயிரிழந்தபோது அவருக்கு 30 வயதுதான்!

## திருப்பூர் குமரன்



தேசியக் கொடிக்கு இழுக்கு ஏற்படாமல் உயிர்த் தியாகம் செய்தவர் திருப்பூர் குமரன். 1904இல் பிறந்த குமரனின் சொந்த ஊர் ஈரோட்டில் உள்ள சென்னிமலை. வேலை தேடி திருப்பூருக்கு இடம்பெயர்ந்தது அவருடைய குடும்பம். குமரனுக்கு காந்தியின் கொள்கைகள் பிடித்துப்போக, காங்கிரஸில் சேர்ந்தார். அந்நியத் துணி எரிப்பு, கள்ளுக்கடை மறியல் எனப் பல போராட்டங்களில் பங்கேற்றார். இதற்காக திருப்பூரில் 'தேசபந்து வாலிபர் சங்க'த்தை நிறுவினார். சட்ட மறுப்பு இயக்கம் மீண்டும் தொடங்கப்பட்டபோது தமிழ்நாட்டில் பல இடங்களில் அறவழிப் போராட்டங்கள் நடைபெற்றன. திருப்பூரில் போராட்டத்தில் பங்கேற்கத் தேசியக் கொடியைக் கையில் ஏந்திச் சென்றதுபோது குமரனைக் காவலர்கள் தடிகொண்டு தாக்கினர். தேசியக் கொடியைப் பறிக்க முயன்றபோது அதை விட்டுக்கொடுக்காமல் வந்தே மாதரம் என முழங்கினார். காவலர்கள் மீண்டும் தலையில் தாக்க, தரையில் சரிந்தார். திருப்பூர் குமரன் இறந்தபோது அவருக்கு 28 வயது. இந்த உயிர்த் தியாகம் ஏராளமான இளைஞர்களைச் சுதந்திரப் போராட்டத்துக்குள் கொண்டுவந்தது.

## சேதி தெரியுமா?

■ தொகுப்பு: மிது ■

**ஆக. 7:** டோக்கியோ ஒலிம்பிக்கில் தடகளம் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா தங்கப் பதக்கம் வென்றார். விடுதலை பெற்ற பிறகு தடகளத்தில் இந்தியா வென்ற முதல் பதக்கம் இது.

**ஆக.7:** ஒலிம்பிக் மல்யுத்தம் 65 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் பஜ்ரங் பூனியா வெண்கலப் பதக்கம் வென்றார்.

**ஆக.8:** டோக்கியோ ஒலிம்பிக்கில் 1 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என 7 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் 48-வது இடத்தை இந்தியா பிடித்தது. 39 தங்கம், 41 வெள்ளி, 33 வெண்கலப் பதக்கங்களுடன் அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்தது.

**ஆக. 9:** டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் வீழ்த்தியவர்களின் பட்டியலில் 3-வது இடத்துக்கு முன்னேறினார் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர்சன். 619 விக்கெட்டுகளுடன் 3ஆம் இடத்திலிருந்த அனில் கும்ப்ளேவை ஆண்டர்சன் பின்னுக்குத் தள்ளினார்.

**ஆக.9:** தமிழ்நாட்டின் நிதி நிலைமையையும் கடந்த பத்து ஆண்டுகளில் நடைபெற்ற நிதி முறைகேடுகள் தொடர்பாகவும் நிதி அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் வெள்ளை அறிக்கையை வெளியிட்டார். இதில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.2.63 லட்சம் கடன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

**ஆக.11:** இதர பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் பட்டியலை மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களே தயாரிப்பதற்கு அதிகாரம் அளிக்கும் அரசமைப்பு சட்டத் திருத்த மசோதா மக்களவையில் நிறைவேறியது.

**ஆக.12:** குஜராத்தில் அங்கலேஷ்வர் எனும் இடத்தில் கோவேக்சின் தடுப்பூசி உற்பத்தி மையம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

**ஆக.13:** திமுக ஆட்சி அமைந்த பிறகு தமிழ்நாடு அரசின் முதல் நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் பி.டி. ஆர்.பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார். முதன் முறையாக காகிதமில்லாத இ-பட்ஜெட் தாக்கலானது.

**ஆக.14:** தமிழ்நாடு வரலாற்றில் சட்டப்பேரவையில் வேளாண் துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கையை அத்துறையின் அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.



# தீச்சுடரின் வண்ணங்கள்

■ இ. ஹேமபிரபா ■

**ஓர் அகல் விளக்கின் படம் வரைந்தால், விளக்கின் சுடருக்கு வண்ணம் தீட்டும்போது மஞ்சள் அல்லது மஞ்சளும் சிவப்பும் கலந்த நிறமும் தருவோம். நிஜத்தில் ஒரு விளக்கின் சுடரில் மஞ்சளும் சிவப்பும் மட்டும்தான் இருக்கின்றனவா? கூர்ந்து கவனித்தால் நீலம், சாம்பல் என்று இன்னும் பல வண்ணங்கள் இருப்பதைக் காண முடியும். விளக்கின் சுடரில் மட்டுமல்ல, மெழுகுவர்த்தி, நம் வீட்டு எரிவாயு அடுப்பு என எல்லாவற்றிலும் இதைக் காண முடியும். ஒன்றிரண்டு சென்டிமீட்டர் நீளமுள்ள ஒரு சுடரில் இவ்வளவு வண்ணங்கள் எப்படி உருவாகின்றன?**




இந்து தமிழ் திசை ஆராம் அறிவு உயர் தனிச் சிந்தனை

விளக்குக்கு ஊற்றும் எண்ணெய், மெழுகு, போன்றவை ஹைட்ரோ கார்பன் வகை வேதிப்பொருள்கள். பெயர் சொல்வது போலவே, இவற்றில் ஹைட்ரஜன், கார்பன் அணுக்கள் மட்டுமே இருக்கின்றன. எரிபொருளாக இருக்கும்போது பிரச்சினையில்லை. ஆனால், நெருப்பைப் பற்ற வைத்த பின்பு உண்டாகும் வெப்பத்தால் காற்றில் இருக்கும் ஆக்ஸிஜனுடன் எரிபொருள் வினைபுரியத் தொடங்கும். அப்போது வெளியிடப்படும் பொருட்களைப் பொறுத்துச் சுடரின் வண்ணங்கள் முடிவாகின்றன.



**வெண்சுடர்**

சுடரின் அடிப்பக்கத்தில் எப்போதும் தெளிவாக நீல நிறத்தைக் காண முடியும். சுடரின் சூழ் வட்டத்திலும் கொஞ்சம் நீலம் தெரியும். காற்றிலிருக்கும் ஆக்ஸிஜனுடன் எரிபொருள் வினைபுரிந்து கார்பன் டைஆக்ஸைடாகவோ நீராகவோ மாறிவிடும். இவ்வாறு ஓர் எரிபொருள் ஆக்ஸிஜனுடன் வினைபுரிந்து வெப்பத்தையும் ஒளியையும் வெளியிடுவதை 'எரிதல் (combustion)' என்கிறோம். முழுமையான வினைபுரிதல் நிகழ்ந்தால் மட்டுமே நீல நிறம் கிடைக்கும். முற்றுப்பெறாத எரிதலால் மஞ்சளும் சாம்பலும் கலந்த நிறம் கிடைக்கிறது.

இதில் திரியின் நுனி மட்டும் மிகவும் பிரகாசமான மஞ்சள் நிறத்தில் இருக்கும். இதன் நீட்சியாகவே சுடரின் மேற்புறத்தில் இருக்கும் மஞ்சள் நிறம் வருகிறது. இதற்குக் காரணம் ஹைட்ரோ கார்பனிலிருந்து பிரிந்து வந்த கார்பன் துகள்கள். இங்கே 'எரிதல்' நடப்பதில்லை. மாறாக வெப்பத்தை ஒளியாக மாற்றும் 'வெள்ளொளிர்வு (incandescence)' என்னும் அற்புதம் நிகழ்கிறது.

ஒரு கம்பியைப் பழுக்கக் காய்ச்சினால் அது சிவந்து தகிப்பதை பார்த்திருக்கலாம். ஒரு பொருளைக் குறிப்பிட்ட வெப்பநிலைக்கு மேல் சூடாக்கும்போது, அந்தப் பொருள் தன்னிடம் இருக்கும் வெப்ப ஆற்றலை, ஒளியாக வெளிவிடும். இதுவே 'வெள்ளொளிர்வு (incandescence)'. தீப்பொறி களாக நாம் பார்ப்பவை வெப்பத்தில் ஒளியை உமிழ்ந்து கொண்டு வெளியேறும் கார்பன் துகள்களே. முன்பு நாம் பயன்படுத்தி வந்த குண்டு பல்புகளில் அதிக சூடான டங்ஸ்டன் கம்பிகள், வெப்ப ஆற்றலை ஒளியாக உமிழ்ந்தன. அங்கே நடந்தது 'எரிதல்' அல்ல.

**பல வகை ஒளிர்வுகள்**

'சுட்டெரிக்கும்' சூரியன் என்று நாம் சொன்னாலும், அங்கேயும் 'எரிதல்' நடக்கவில்லை. 'எரிதல்' நடைபெற ஆக்ஸிஜனும் எரிபொருளும் தேவை. அங்கேதான் ஆக்ஸிஜனே இல்லையே. சூரியனில் இருக்கும் ஹைட்ரஜனும் ஹீலியமும் அணுக்கரு பிணைப்பை நிகழ்த்தி அதிக வெப்பநிலைக்குப் போகும்போது, அது சூரிய ஒளியாக வெளிப்படுகிறது.

உண்மையில் வெப்பத்தை ஒளியாக்கும் அன்றாடப் பயன்பாடுகள் தற்போது வெகுவாகக் குறைந்துவிட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்ட நாள்களில் தான் விளக்கு வெளிச்சத்தில் வேலை செய்கிறோம். வெப்பம் இல்லாமல் ஒளியை உண்டாக்குவது பொதுவாக ஒளிர்வு (luminescence) எனப்படுகிறது. வேதி வினை மூலம் ஒளி கிடைத்தால் வேதியொளிர்வு (chemoluminescence). மின்மினிகள், சொறிமீன்கள் (ஜெல்லி) போன்ற உயிரினங்கள் தங்களிடம் இருக்கும்

உயிரிமூலக்கூறுகளின் உதவியால் ஒளியை வெளியிடுகின்றன. இதற்கு உயிரொளிர்வு (bioluminescence) என்று பெயர். ஒரு பொருளிடமிருந்து ஒளியை உள்வாங்கி, மீண்டும் ஒளியை வெளியிட்டால் அது ஒளித்தூண்டல் ஒளிர்வு (photoluminescence). ஒளியின் பண்புகளை மனிதர்கள் பெருமளவில் புரிந்துகொண்டதால், 'ஒளியை உருவாக்குதல்' இன்றைக்கு நமக்குக் கைவந்த கலையாகிவிட்டது.

கட்டுரையாளர், இஸ்ரேல் டெக்னியன் தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆராய்ச்சியாளர்
தொடர்புக்கு: hemazephyrs@gmail.com



## தொல்லியல் படிப்பை 25 ஆண்டுகளாக வழங்கும் கல்லூரி!

தமிழ்நாட்டில் தற்பொழுது கீழடி உள்ளிட்ட பல இடங்களிலும் அகழ்வாராய்ச்சிப் பணிகள் நடைபெற்றுவருகின்றன. முக்கியமாகக் கீழடியில் நடக்கும் அகழாய்வுகள் தமிழ்நாட்டின் தொன்மையை உலகுக்குப் பறைசாற்றுகின்றன. இந்த ஆய்வுகளின் மூலம் கிடைக்கப்பெற்றுள்ள தொல்பொருட்கள், மக்களிடையே அகழாய்வுகளின் மீது பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளன. முக்கியமாக, மாணவர்களிடையே இவ்வகழாய்வுகளில் ஈடுபட எந்தப் படிப்பைப் படிக்க வேண்டும் என்பதை அறியும் ஆவல் எழுந்துள்ளது. அகழாய்வுகளில் ஈடுபட தொல்லியல் துறையில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். இப்படிப்பு முதுகலைப் படிப்பாகப் பல்வேறு பல்கலைக்கழகங்களில் இருப்பினும், இளங்கலை அளவில் வெகுசில கல்லூரிகளில்தான் உள்ளது.

சென்னை கிறித்தவக் கல்லூரியின் வரலாற்றுத் துறையில் தொல்லியலுக்கான இத்தகு இளங்கலை வரலாறு (வகேஷனல்) (B.A., History - Vocational) தொல்லியல் மற்றும் அருங்காட்சியியல் என்னும் பட்டப்படிப்பு வழங்கப்படுகிறது.

1837 ஆம் ஆண்டு ஸ்காட்லாந்து மிஷனரியான ஜான் ஆண்டர்சனின் தலைமையில் ஜெனரல் அசெம்ப்ளி பள்ளி தொடங்கப்பட்டது. இந்தப் பள்ளியே 1865ஆம் ஆண்டு வில்லியம் மில்லரின் தலைமையில் கிறித்தவக் கல்லூரியாக உயர்ந்தது. இக்கல்லூரியில் மிகப் பழமையான துறைகளில் ஒன்றான வரலாற்றுத் துறை 1887 ஆம் ஆண்டிலிருந்து 133 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறப்பாக இயங்கி வருகிறது. இத்தகைய தொன்மையான துறையின் இளங்கலையில் தொல்லியல் சம்பந்தமான பிரத்தியேகப் படிப்பு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக வழங்கப்படுகிறது. 2019ஆம் ஆண்டு இப்படிப்பின் வெள்ளி விழா கொண்டாடப்பட்டது.

இத்துறையில் படித்த முன்னாள் மாணவர்கள் பலர் தற்பொழுது இந்தியத் தொல்லியல் துறை மற்றும் தமிழ்நாட்டின் தொல்லியல் துறையில் பணியாற்றிவருகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் இங்கு பயிலும் மாணவர்கள் நாடு முழுவதும் உள்ள பல்வேறு தொல்லியல் உயர்கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பயில்கின்றனர். தொல்லியல் மற்றும் அருங்காட்சியியலில் கள மற்றும் செய்முறைப் பயிற்சியும் மாணவர்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. இத்துறையில் பயிற்றுவிக்கப்படும் அடிப்படைப் பாடங்கள் மற்றும் களப்பணிகள் தங்களின் மேற்படிப்புக்கு பெரிதும் உதவுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இங்கே மாணவர்களுக்குப் பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த கற்காலக் கருவிகள், மண்பாண்டங்களை வேறுபடுத்திக் காண கற்றுத் தரப்படுகிறது. இதற்காக பிரத்தியேகச் செய்முறைக் கூடம் உள்ளது. களப்பணிகளுக்காக அத்திரம்பாக்கம், சென்னை அருங்காட்சியகம், பூண்டி அருங்காட்சியகம், வடமங்களம், கல்வாய், மேல்சித்தாமூர், கீழடி போன்ற இடங்களுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டுகளில் பல கண்காட்சிகளை சென்னை கிறித்தவக் கல்லூரி வரலாற்றுத் துறை நடத்தியுள்ளது.

மேலும், தொல்லியல் துறையைச் சேர்ந்த பல்வேறு அறிஞர்களையும் வல்லுநர்களையும் கொண்டு அவ்வப்போது மாணவர்களுக்குச் சிறப்புப் பயிலரங்குகள் நடத்தப்படுகின்றன.

கடந்த 2021 ஜூலையில் தொல்லெழுத்தியல் பயிற்சிப் பட்டறை இணையவழியில் நடத்தப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

- ச. பிரின்சு என்னாரெசு பெரியார்



ஆப்கானிஸ்தானில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்க மத்திய அரசின் அனைத்து துறைகளும் ஒன்றிணைந்து செயல்பட்டு வருகின்றன. அவர்களை பாதுகாப்பாக அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

● **ஹர்தீப் சிங் புரி,** மத்திய அமைச்சர் ●





இளம் தலைவர்கள் காங்கிரஸ் இருந்து விலகுகின்றனர். ஆனால் கட்சித் தலைமை கண்களை இறுக மூடிக் கொண்டிருக்கிறது. கட்சியை வலுப்படுத்த முயற்சிக்கும் மூத்த தலைவர்கள் மீது பழிசுமத்தப்படுகிறது.

● **கபில் சிபல்,** காங்கிரஸ் மூத்த தலைவர் ●



| ஒரே நாளில் | இதுவரை |
|---|---|
| 36 ஆயிரம் பேர் குணமடைந்தனர் | 3.14 கோடி பேர் குணமடைந்தனர் |
| 17.43 லட்சம் பேருக்கு தடுப்பூசி | 55 கோடி பேருக்கு தடுப்பூசி |
| 11.81 லட்சம் பரிசோதனை | 49.48 கோடி பரிசோதனை |

# நாட்டில் புதிதாக 32,937 பேருக்கு கரோனா வைரஸ் தொற்று

**புதுடெல்லி**

நாட்டில் புதிதாக 32,937 பேருக்கு கரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. 417 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று வெளியிட்ட புள்ளிவிவரம் வருமாறு:

நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் 32,937 பேருக்கு கரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டில் இதுவரை நோய்த்தொற்றுக்கு ஆளானவர்கள் எண்ணிக்கை 3 கோடியே 22 லட்சத்து 25,513 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 417 பேர் உயிரிழந்தனர். இதன் மூலம் உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 31,642 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் தற்போது 3 லட்சத்து 81,947 பேர் சிகிச்சையில் உள்ளனர். இது மொத்த நோயாளிகளில் 1.18 சதவீதம் ஆகும்.

கடந்த 24 மணி நேரத்தில் 35,909 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர். மொத்த நோயாளிகளில் இதுவரை 97.45 சதவீதம் பேர் குணம் அடைந்துள்ளனர். 2020 மார்ச்சில் இருந்து இதுவே அதிகபட்ச குணமடைந்தோர் விகிதம் ஆகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டும் 11 லட்சத்து 81,212 பேருக்கு கரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. மொத்த பரிசோதனை எண்ணிக்கை 49 கோடியே 48 லட்சத்து 5,652 ஆக உயர்ந்துள்ளது. தினசரி பாசிட்டிவ் வகிதம் 2.79 சதவீதம் ஆக உள்ளது. இது கடந்த 21 நாட்களாக 3 சதவீதத்துக்கு குறைவாக உள்ளது.

நாடு தழுவிய தடுப்பூசி செலுத்தும் பணியில் இதுவரை 54.58 கோடி டோஸ்கள் செலுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## கருத்துச் சித்திரம்

கருத்து: - **பாலாஜி சண்முகம்,** சென்னை.



▲ வாசகர்களே... இந்த இடம் உங்களுக்கு. கருத்துச் சித்திரத்துக்கான உங்கள் எண்ணத்தை முடிந்தவரையில் வரைந்தோ, எழுத்தில் விவரித்தோ அனுப்பிவையுங்கள். சிறந்த கருத்துகளைச் சித்திரமாக்க எங்கள் ஓவியர் காத்திருக்கிறார். cartoon@hindutamil.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ, 044-28552215 என்ற தொலைநகல் எண்ணுக்கோ உங்கள் எண்ணங்களை அனுப்பலாம். பிரசுரிக்கப்படும் கருத்துச் சித்திரங்களுக்குத் தக்க சன்மானம் காத்திருக்கிறது.

**உங்கள் அலைபேசி / தொலைபேசி எண் மற்றும் பின்கோடு ஆகியவற்றைத் தவறாமல் குறிப்பிட்டு அனுப்பவும்.**

## சின்னச் சின்னதாய்...



▲ தேசிய அளவிலான பொது சட்ட நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுடன் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது சொந்த தொகுதியான வயநாட்டில் உள்ள மனத்தவடி என்ற இடத்தில் கலந்துரையாடி உணவருந்தினார். படம்: பிடிஐ

### மாணவி உடலுக்கு அஞ்சலி செலுத்த சென்ற சந்திரபாபு நாயுடு மகன் லோகேஷ் கைது

**குண்டூர்:** ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டத்தை சேர்ந்த பொறியியல் மாணவி ரம்யா (20). இவரை சசிகிருஷ்ணா (24) என்ற வாலிபர் ஒருதலைப்பட்சமாக காதலித்துள்ளார். இதனை ரம்யா ஏற்கவில்லை. நேற்று முன்தினம் காலை குண்டூர்-விஜயவாடா நெடுஞ்சாலையில் உள்ள பரமைய குண்டா கூட்டு ரோடு அருகே சென்று கொண்டிருந்த ரம்யாவை சசிகிருஷ்ணா கத்தியால் குத்தியதில் அவர் பலத்த காயம் அடைந்தார். பட்டப்பகலில் பொதுமக்கள் முன்னிலையில் நடந்த இந்த சம்பவத்தை தொடர்ந்து, சசிகிருஷ்ணா தனது கையை கத்தியால் அறுத்துக்கொண்டு, அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். இதையடுத்து ரம்யா, மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் உயிரிழந்தார்.

இதுதொடர்பாக சசிகிருஷ்ணா மற்றும் அவரது 2 நண்பர்கள் கைது செய்யப்பட்டனர். ரம்யாவின் குடும்பத்துக்கு முதல்வர் ஜெகன்மோகன் ரூ.10 லட்சம் நிதியுதவி அறிவித்துள்ளார். இந்நிலையில் ரம்யாவின் உடல் பிரேதப் பரிசோதனைக்கு பிறகு நேற்று பொதுமக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் மகனும் சட்டமேலவை உறுப்பினருமான லோகேஷ் நேற்று ரம்யாவின் உடலுக்கு மாலை அணிவித்து இறுதி அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, ஆந்திராவில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து விட்டதாக குற்றம் சாட்டினார். அப்போது அங்கிருந்த ஆளும் ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சியினர் லோகேஷுக்கு எதிராக கோஷமிட்டனர். இதனால் இரு தரப்பினருக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்து போலீஸார் தலையிட்டு லோகேஷ் மற்றும் அவருடன் வந்த கட்சி நிர்வாகிகளை போலீஸ் வாகனத்தில் ஏற்றி, காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.



▲ திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயிலில் நேற்று சுவாமி தரிசனம் செய்தார் நாடாளுமன்ற சபாநாயகர் ஓம் பிரகாஷ் பிர்லா. உடன், திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் ஒய்.வி. சுப்பாரெட்டி.

# ஜார்க்கண்ட் நீதிபதி கொலை பற்றி தகவல் அளித்தால் ரூ.5 லட்சம் பரிசு

● சிபிஐ அதிகாரிகள் அறிவிப்பு

**தன்பாத்**

ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாவட்ட நீதிபதி கொலை தொடர்பாக தகவல் தெரிவிப்பவர்களுக்கு ரூ.5 லட்சம் பரிசு வழங்கப்படும் என்று சிபிஐ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஜார்க்கண்ட் மாநிலம் தன்பாத் மாவட்ட நீதிபதி உத்தம் ஆனந்த். இவர் கடந்த மாதம் 28-ம் தேதி காலை நடை பயிற்சி சென்ற போது, மர்ம நபர்கள் சிலர் அவர் மீது ஆட்டோவை மோதினர். அதில் அவர் கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். முதலில் விபத்து வழக்கு என்று போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். ஆனால், நீதிபதி உத்தம் ஆனந்த் மீது திட்டமிட்டு ஆட்டோவை மோதும் காட்சிகள் அடங்கிய வீடியோ வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த சம்பவத்துக்கு ஜார்க்கண்ட் உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என். வி.ரமணா உட்பட நாடு முழுவதும் ஏராளமானோர் கடும் கண்டனம் தெரிவித்தனர். இந்த வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது. நீதிபதி கொலை தொடர்பாக ஆட்டோ ஓட்டுநர் மற்றும் அவரது கூட்டாளி உட்பட சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**▼ நீதிபதி உத்தம் ஆனந்த் கொலை தொடர்பாக பயனுள்ள தகவல் தெரிவிப்பவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என்று தன்பாத் மாவட்டம் முழுவதும் நோட்டீஸ் வெளியிடப்பட்டுள்ளது.**

இந்நிலையில், நீதிபதி கொலை தொடர்பாக தகவல் தெரிவிப்பவர்களுக்கு ரூ.5 லட்சம் பரிசு வழங்கப்படும். தகவல் தெரிவிப்பவர்களைப் பற்றிய விவரம் ரகசியமாக வைக்கப்படும். தகவல் தெரிந்தால், சிபிஐ விசாரணை அதிகாரி எஸ்.பி. விஜய் சுக்லாவின் 78277 28856 என்ற மொபைல் எண்ணுக்கோ அல்லது 011-2436 8640 அல்லது 011-2436 8641 என்ற எண்ணை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்று சிபிஐ வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து சிபிஐ அதிகாரி விஜய் சுக்லா கூறும்போது, "நீதிபதி உத்தம் ஆனந்த் கொலை தொடர்பாக பயனுள்ள தகவல் தெரிவிப்பவர்களுக்கு பரிசு வழங்கப்படும் என்று தன்பாத் மாவட்டம் முழுவதும் நோட்டீஸ் வெளியிட்டுள்ளோம்" என்று தெரிவித்தார். -பிடிஐ

# தீர்ப்பாயங்களில் காலியிடங்கள் 10 நாட்களில் நிரப்ப உத்தரவு

**புதுடெல்லி**

ஜிஎஸ்டி வரி நடைமுறை அமலுக்கு வந்து 4 ஆண்டுகளாகியும் ஜிஎஸ்டி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் அமைக்கப் படவில்லை. இந்த தீர்ப்பாயத்தை அமைக்க கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த வழக்கு தலைமை நீதிபதி என். வி.ரமணா அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

மத்திய அரசு சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆஜராகி கூறும்போது, "தீர்ப்பாயத்தில் சில நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து பணி நியமனங்கள் நடைபெறுகின்றன" என்றார்.

அப்போது தலைமை நீதிபதி ரமணா குறுக்கிட்டார். அவர் கூறும்போது, ஏதாவது ஒரு நியமனத்துக்கான ஆதாரத்தை அளிக்க முடியுமா, தீர்ப்பாயங்கள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அதற்கு எதிராக தீர்ப்பாய சீர்திருத்தங்கள் மசோதா நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நாடாளுமன்ற நடவடிக்கைகளில் நாங்கள் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. எனினும் புதிய மசோதா என்ன நோக்கத்துக்காக கொண்டு வரப்பட்டிருக்கிறது. தீர்ப் பாயங்களை மூட முடிவு செய்யப் பட்டிருக்கிறதா " என்று கேள்வி எழுப்பினார்.

சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா கூறும்போது, அட்டர்னி ஜெனரலிடம் கேட்டு அறிக்கை தாக்கல் செய்வதாக பதில் அளித்தார்.

இறுதியில் தலைமை நீதிபதி ரமணா தலைமையிலான அமர்வு பிறப்பித்த உத்தரவில் "தீர்ப் பாயங்களில் காலி இடங் களை உடனடியாக நிரப்ப வேண்டும் என்று பலமுறை உத்தர விட்டுள்ளோம். ஆனால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்னும் 10 நாட்களுக்குள் தீர்ப்பாயங்களின் காலியிடங்களை நிரப்ப வேண்டும்" என்று கெடு விதிக்கப்பட்டது. -பிடிஐ

# கரோனா நிபந்தனைகளுடன் ஆந்திராவில் பள்ளிகள் திறப்பு

என்.மகேஷ்குமார்

**அமராவதி**

ஆந்திர மாநிலத்தில் நேற்று முதல் அனைத்து அரசு, தனியார் பள்ளிகள் திறக்கப்பட்டன. 1-ம் வகுப்பு முதல் 10-ம் வகுப்பு வரை உள்ள நகராட்சி, மாநகராட்சி, ஜில்லா பரிஷத் பள்ளிகள் என அனைத்து அரசு பள்ளிகளும் திறக்கப்பட்டன.

மொத்தம் உள்ள 61,137 அரசு மற்றும் தனியார் பள்ளிகளும் கரோனா நிபந்தனைகளை பின்பற்றியவாறு நேற்று முதல் தொடங்கப்பட்டன. கரோனா 2-ம் அலை காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் 20-ம் தேதி மூடப்பட்ட பள்ளிகள் நேற்று திறக்கப்பட்டன. இதே போல் முதல் மற்றும் 2-ம் ஆண்டுக்கான அனைத்து அரசு மற்றும் தனியார் இன்டர்மீடியட் ஜூனியர் கல்லூரிகளும் திறக்கப் பட்டன.

மாணவ, மாணவிகள் முகக் கவசம் அணிய வேண்டும். மாணவர்களுக்கு காய்ச்சல் உள்ளதா என கருவி மூலம் கண்டறிப்பட்ட பின்னரே கைகளில் கிருமி நாசினி தெளித்து உள்ளே அனுமதிக்க வேண்டும். ஒவ்வொரு அறையிலும் 20 மாணவர்கள் மட்டுமே இருக்க வேண்டும். ஆசிரியர்கள் கண்டிப்பாக தடுப்பூசி போட்டிருக்க வேண்டும் என ஆந்திர அரசு உத்தரவிட்டுள்ளது.

பள்ளிகள் திறக்கப்பட்டதால், கிழக்கு கோதாவரி மாவட்டம், பி. கன்னவரம் அரசு பள்ளியில் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி திடீர் ஆய்வு மேற்கொண்டார்.



▲ உத்தரபிரதேச சட்டப்பேரவையின் மழைக்காலக் கூட்டத் தொடர் விரைவில் தொடங்கவுள்ளது. இதையொட்டி லக்னோவில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பேரவை சபாநாயகர் எச்.என்.தீட்சித், முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். படம்: பிடிஐ

# சசிகலா மீதான சிறை முறைகேடு வழக்கில் 25-க்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உத்தரவு

இரா.வினோத்

**பெங்களூரு**

சசிகலா மீதான சிறை முறைகேடு வழக்கில் வரும் 25-ம் தேதிக்குள் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய கர்நாடக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் தண்டிக்கப்பட்ட சசிகலா, பெங்களூரு பரப்பன அக்ரஹாரா சிறையில் 4 ஆண்டுகள் அடைக்கப்பட்டு இருந்தார். அவரது தண்டனை காலம் நிறைவு பெற்றதை தொடர்ந்து கடந்த ஜனவரியில் சசிகலா விடுதலை ஆனார். சசிகலா சிறையில் இருந்தபோது சிறப்பு சலுகை பெற்றதாக அப்போதைய சிறைத் துறை டிஐஜி ரூபா புகார் தெரிவித்தார். இதற்காக டிஜிபி. யாக இருந்த சத்திய நாராயணராவ், சிறை சூப்பிரண்டு கிருஷ்ணகுமார் ஆகியோர் ரூ.2 கோடி லஞ்சம் பெற்றதாகவும் குற்றம் சாட்டினார். இதை விசாரித்த ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி வினய்குமார்



தலைமையிலான குழு கடந்த 2019-ம் ஆண்டு, 'சசிகலா சிறப்பு சலுகைகளை பெற்றது உண்மையே' என 245 பக்க அளவில் அறிக்கை அளித்தது. இதையடுத்து பெங்களூரு ஊழல் தடுப்பு படை போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சென்னையை சேர்ந்த கீதா என்பவர் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில் 'சசிகலா மீதான சிறை முறைகேடு வழக்கை ஊழல் தடுப்பு படை போலீஸார் தாமதம் செய்யாமல் விரைந்து விசாரிக்க உத்தரவிட வேண்டும்' என கோரினார். இதை கடந்த வெள்ளிக்கிழமை விசாரித்த நீதிபதிகள் அபய் சீனிவாஸ், சூராஜ் கோவிந்தராஜ் ஆகியோர் அடங்கிய அமர்வு வரும் 25-ம் தேதிக்குள் போலீஸார் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிட்டனர்.

இதையடுத்து ஊழல் தடுப்புத் துறை அதிகாரிகள் சசிகலா வழக்கின் விசாரணையை தீவிரப் படுத்தியுள்ளனர். இவ்வழக்கில் தொடர்புடைய சிறை அதிகாரி கிருஷ்ணகுமாருக்கு சொந்தமான வீடு, உறவினர்களின் அலுவலகங்களில் 2 நாட்கள் சோதனை நடத்தினர். மேலும் வரும் 25-ம் தேதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கான பணிகளை முடுக்கிவிட்டுள்ளனர். சிறை முறைகேடு வழக்கில் தொடர்புடைய அதிகாரிகள், அரசியல்வாதிகள் ஆகியோரிடம் நடத்திய விசாரணை தொடர்பான ஆவணங்களையும் தயாரித்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் முன்பாக

# டெல்லியில் தமிழக விவசாயிகள் போராட்டம்

ஆர்.ஷபிமுன்னா

**புதுடெல்லி**

டெல்லியில் நடைபெறும் போராட்டத்தில் தமிழகத்தின் காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கத்தினரும் கலந்துகொண்டனர். இப்பிரச்சினையில் சர்வதேச நாடுகள் தலையிட வேண்டி நேற்று அவர்கள் டெல்லி ஐக்கிய நாடுகள் சபை அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்தினர்.

மத்திய அரசின் முக்கிய மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் டெல்லியில் போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு ஆதரவாக பல்வேறு மாநிலங்களிலிருந்து விவசாய சங்கத்தினர் வந்து கலந்து கொண்டு ஆதரவளித்து வருகின்றனர். இந்தவகையில், கடந்த வாரம், தமிழகத்திலிருந்து காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கத்தினர் டெல்லி வந்திருந்தனர்.

கே.வீ.இளங்கீரன் தலைமையில் வந்தவர்களை டெல்லி ரயில் நிலையத்திலேயே காவல்துறையினர் தடுத்து நிறுத்தினர். அனைவரையும் வாகனத்தில் ஏற்றி டெல்லியின் எல்லையில் விவசாயிகளின் போராட்டக் களமாகி விட்ட சிங்கூரில் இறக்கி விட்டனர். இங்கிருந்தபடி போராடிய தமிழக விவசாயிகள் நேற்று திடீர் என டெல்லியின் லோதி எஸ்டேட் பகுதிக்கு வந்தனர். அங்குள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தகவல் மையத்திற்கு முன்பாக கூடி நின்று கோஷமிட்டபடி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.



▲ டெல்லியில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பு போராட்டம் நடத்திய தமிழக விவசாயிகள்.

இது குறித்து 'இந்து தமிழ்' நாளேட்டிடம் காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்கத்தின் தலைவரான கே.வீ.இளங்கீரன் கூறும்போது, 'டெல்லியில் போராடும் விவசாயிகளுக்கும் தங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போல், மத்தியில் ஆளும் பாஜக அரசு நடந்து கொள்வது இந்திய விவசாயிகளை வேதனை அடையச் செய்துள்ளது. எனவே, விவசாயிகள் போராட்டத்தை உலக நாடுகள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம். உலக நாடுகளின் அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை இப்பிரச்சினையில் தலையிட்டு இந்திய அரசுக்கு அழுத்தம் தர வேண்டும். இதற்காக இன்று ஐக்கிய நாடுகள் சபையின் தகவல் மையம் (*United Nations Information Center*) முன்பாக போராட்டம் நடத்தினோம்' எனத் தெரிவித்தார்.

சுமார் 2 மணி நேர ஆர்ப்பாட்டத்திற்கு பின் தமிழக விவசாயிகளை டெல்லி காவல் துறையினர் தடுத்து நிறுத்தினர். அனுமதி இன்றி போராட்டம் நடத்த முடியாது என எச்சரித்த அவர்கள் அனைவரையும் வாகனத்தில் ஏற்றிச் சென்றனர். பிறகு டெல்லி ரயில் நிலையத்தில் இறக்கி விட்டு தமிழகம் திரும்பிச் செல்லுமாறு கூறினர். எனினும், அங்கிருந்து மீண்டும் சிங்கூரின் எல்லையில் நடைபெறும் போராட்டத்தில் தமிழக விவசாயிகள் சென்று கலந்து கொண்டனர்.



▲ டோக்கியோ ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட இந்திய விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் உள்ள தனது இல்லத்தில் நேற்று காலையில் விருந்தளித்தார். இந்நிகழ்ச்சியில், பி.வி.சிந்து பாட்மிண்டனில் வென்ற பதக்கங்களை பிரதமர் மோடியிடம் காட்டினார். படம்: பிடிஐ

எரிபொருள் விலையை குறைக்க காங். ஆட்சியில் வெளியிடப்பட்ட

# எண்ணெய் கடன் பத்திரங்களால் வட்டி சுமை

● உற்பத்தி வரியை குறைக்க முடியாது என நிர்மலா சீதாராமன் திட்டவட்டம்

■ புதுடெல்லி

பெட்ரோல், டீசல் மீதான உற்பத்தி வரியை இப்போதைக்குக் குறைப்பதற்கான வாய்ப்பு இல்லை என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி (யுபிஏ) ஆட்சியின்போது வெளியிடப்பட்ட எண்ணெய் கடன் பத்திரங்களுக்கு வட்டி வழங்க வேண்டியுள்ளது. இது அரசுக்கு பெரும் நிதிச் சுமையாகும். இந்நிலையில், எரிபொருள் மீதான உற்பத்தி வரியைக் குறைப்பது சாத்தியமில்லாதது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த விஷயத்தில் மத்திய, மாநில அரசுகள் ஒன்றிணைந்து இதற்கு தீர்வு கண்டால் மட்டுமே விலை குறைய வாய்ப்பு உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இல்லையெனில் இதற்கு தீர்வே கிடையாது என்றார்.

காங்கிரஸ் தலைமையிலான அரசு எண்ணெய் விலையைக் குறைப்பதற்காக ரூ.1.44 லட்சம் கோடிக்கு கடன் பத்திரங்களை வெளியிட்டது. இதுபோன்ற சாமர்த்தியமான நடவடிக்கைகளை தான் எடுக்க விரும்பவில்லை என்றும், அப்போது வெளியிடப்பட்ட கடன் பத்திரங்களுக்கு வட்டி வழங்க வேண்டிய சுமை பாஜக அரசின் தலையில் விழுந்துள்ளதால்தான் பெட்ரோல், டீசல் மீதான உற்பத்தி வரியைக் குறைக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது என்றும் அவர் கூறினார்.

கடந்த 5 ஆண்டுகளில் இந்த கடன் பத்திரங்களுக்கு வட்டியாக ரூ.62 ஆயிரம் கோடியை அரசு அளித்துள்ளது. 2026-ம் ஆண்டு வட்டியாக ரூ.37 ஆயிரம் கோடியை வழங்க வேண்டியுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். வட்டி செலுத்தினாலும் பத்திர மதிப்பான ரூ.1.30 லட்சம் கோடி அப்படியே நிலுவையில் உள்ளது என்றும் கூறினார். இந்த கடன் சுமை மட்டும் இல்லாதிருந்தால் உற்பத்தி வரியை நிச்சயம் குறைத்திருப்பேன் என்றும் அமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

எண்ணெய் விலை அதிகரித்தது குறித்து மக்கள் தங்கள் கவலையை வெளிப்படுத்துவது நியாயமானதே. இதுகுறித்து மத்திய, மாநில அரசுகள்தான் கூட்டாக தீர்வு காண வேண்டும். இருப்பினும் ரிசர்வ் வங்கி கணித்தபடி சில்லரை பணவீக்கம் 2% முதல் 6 சதவீதத்துக்குள் இருக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வருமானவரி இணையதளத்தில் ஏற்பட்டுள்ள சிறு குறைகள் அனைத்தும் ஓரிரு நாளில் தீர்க்கப்படும் என்றும் அவர் கூறினார். - பிடிஐ

(C) KSL Media Ltd.

டோக்கியோ ஒலிம்பிக்கில் கலந்துகொண்ட

## வீரர், வீராங்கனைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி விருந்து

■ புதுடெல்லி

டோக்கியோ ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட இந்திய விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று காலை தனது இல்லத்தில் விருந்தளித்தார்.

டோக்கியோவில் சமீபத்தில் முடிவடைந்த ஒலிம்பிக் திருவிழாவில் இந்தியா ஒரு தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என 7 பதக்கங்கள் வென்று சாதனை படைத்தது. ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா தங்கம் வென்று வரலாற்று சாதனை நிகழ்த்தியிருந்தார். பளு தூக்குதலில் மீராபாய் சானு, மல்யுத்தத்தில் ரவி குமார் தஹியா ஆகியோர் வெள்ளிப் பதக்கமும், பாட்மிண்டனில் பி.வி.சிந்து, குத்துச்சண்டையில் லோவ்லினா போர்கோஹெய்ன், ஹாக்கியில் ஆடவர் அணி வெண்லகலப் பதக்கமும் கைப்பற்றியிருந் தனர்.

இந்நிலையில், டோக்கியோ ஒலிம்பிக்கில் கலந்து கொண்ட இந்திய வீரர், வீராங்கனைகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி நேற்று காலை தனது இல்லத்தில் விருந்தளித்தார். அப்போது நீரஜ் சோப்ராவுக்கு விருப்பமான 'சுர்மா' பரிமாறப்பட்டது.

ஒலிம்பிக் போட்டிக்கு முன்னதாக பி.வி.சிந்துவிடம், தாங்கள் ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றால் என்னுடன் ஐஸ்கிரீம் சாப்பிடலாம் என்று பிரதமர் மோடி வாக்குறுதி ஒன்றை அளித்திருந்தார். விருந்தின்போது இதை பிரதமர் நிறைவேற்றினார்.

விருந்தின்போது இந்திய ஆடவர் ஹாக்கி அணியினர் தங்களது கையொப்பமிட்ட ஹாக்கி மட்டையை பிரதமர் நரேந்திர மோடிக்கு நினைவுப் பரிசாக வழங்கினர். டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய ஆடவர் ஹாக்கி அணி 41 வருடங்களுக்கு பிறகு பதக்கம் வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது. மல்யுத்தத்தில் பதக்கம் வென்ற குழுவினரையும் பிரதமர் நரேந்திர மோடி சந்தித்து உரையாடினார்.

தலிபான்கள் ஆட்சியை பிடித்ததால்

## 4 கார்கள், ஹெலிகாப்டர் நிறைய பணத்துடன் ஆப்கன் அதிபர் வெளிநாடு தப்பினார்

■ காபூல்

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றிய நிலையில், அந்நாட்டின் அதிபர் அஷ்ரப் கனி 4 கார்கள் மற்றும் ஹெலிகாப்டர் நிறைய பணத்துடன் வெளிநாட்டுக்கு தப்பியதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே பல ஆண்டுகளாக போர் நடக்கிறது. தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்க ராணுவம் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டிருந்தது. இந்நிலையில், தனது ராணுவத்தை வாபஸ் பெறுவதாக அமெரிக்கா அறிவித்தது.

இதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் கை ஓங்கி, பல்வேறு நகரங்களை சிறிது சிறிதாக கைப்பற்றிய தீவிரவாதிகள் நேற்று முன்தினம் தலைநகர் காபூலுக்குள் நுழைந்தனர். சண்டை மூலம் காபூலை கைப்பற்ற மாட்டோம்



▲ அதிபர் அஷ்ரப் கனி

என்றும் அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் நடக்கும் என்றும் அறிவித்த தீவிரவாதிகள், அதிபரின் மாளிகைக்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதனிடையே, தீவிரவாதிகள் நாட்டைக் கைப்பற்றுவது உறுதியான நிலையில், அதிபர் அஷ்ரப் கனி நேற்று முன்தினம் நாட்டை விட்டு வெளியேறினார். 4 கார்கள் மற்றும் ஹெலிகாப்டர் நிறைய பணத்துடன் அவர் ஆப்கனை விட்டு தப்பியதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதனிடையே, நாட்டை விட்டு வெளியேறியதை அஷ்ரப் கனி ஒப்புக் கொண்டுள்ளார். இதுபற்றி முகநூலில் அவர் வெளியிட்ட பதிவில், மக்கள் ரத்தம் சிந்துவதை தவிர்க்கவே ஆப்கனை விட்டு வெளியேறியதாகக் கூறியுள்ளார்.

### அமெரிக்காவில் தஞ்சம்?

இதனிடையே, தஜிகிஸ்தானுக்கு அஷ்ரப் கனி விமானத்தில் சென்றதாகவும் ஆனால், அங்கு தரையிறங்க அனுமதிக்கப்படாததால் அங்கிருந்து ஓமனுக்கு சென்று விட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அவர் அமெரிக்கா சென்றுவிட்டதாகவும் மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிய அஷ்ரப் கனி இப்போது எங்கிருக்கிறார் என்று உறுதியாகத் தெரியவில்லை.

## ஆப்கன் குருத்வாராவில் உள்ள 200 சீக்கியரை காப்பாற்றுங்கள்

● பஞ்சாப் முதல்வர் அமரிந்தர் கோரிக்கை

■ புதுடெல்லி

ஆப்கானிஸ்தான் குருத்வாராவில் உள்ள 200 சீக்கியர்களை காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு பஞ்சாப் முதல்வர் கேப்டன் அமரிந்தர் சிங் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு தலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி உள்ளனர். அதிபர் அஷ்ரப் கனி வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. இதனால் நாட்டின் முழு கட்டுப்பாடும் இப்போது தலிபான்கள் கையில் வந்துள்ளது.

இதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் குருத்வாராவில் சிக்கியுள்ள 200 சீக்கியர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு பஞ்சாப் முதல்வர் கேப்டன் அமரிந்தர் சிங் ட்விட்டரில் நேற்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அதில் அவர் கூறியதாவது: ஆப்கானிஸ்தானில் நிலைமை மோசமடைந்துள்ளதால் அங்குள்ள குருத்வாராவில் 200-க்கும் மேற்பட்ட சீக்கியர்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

### இந்தியாவுக்கு நல்லதல்ல

அவர்களை மீட்க தகுந்த நடவடிக்கைகளை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் எடுக்க வேண்டும். ஆப்கானிஸ்தான் தற்போது தலிபான்கள் கையில் வந்துள்ளதால் அது நமது நாட்டுக்கு நல்லதல்ல. இதனால் சீனா-பாகிஸ்தான் இடையேயான உறவு மேம்படும். அந்த அறிகுறிகள் நமது நாட்டுக்கு நன்மையை ஏற்படுத்தாது. நாம் கூடுதல் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

வெளிநாடுகளில் இருக்கும் நமது மக்களின் நிலையை கருத்தில் கொண்டு மத்திய அரசு அவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். - பிடிஐ

விஜய் மல்லையாவுக்கு சொந்தமான

## மும்பையில் உள்ள கிங்பிஷர் பங்களா ரூ.52 கோடிக்கு ஏலத்தில் விற்பனை

■ மும்பை

விஜய் மல்லையாவின் கிங்பிஷர் நிறுவனத்துக்குச் சொந்தமான பங்களா ரூ.52.25 கோடிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து 8 முறை ஏல விற்பனை தோல்வி அடைந்த நிலையில் 9-வது ஏலத்தில் மூன்றில் ஒரு பங்கு விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்திய வங்கிகளில் ரூ.9,000 கோடி அளவுக்கு கடன் வாங்கி மோசடி செய்துவிட்டு, இங்கிலாந்து தப்பிய தொழிலதிபர் விஜய் மல்லையாவிடமிருந்து கடனை மீட்க அவரது சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட மும்பை விமான நிலையம் அருகில் விலே பார்லேவில் உள்ள கிங்பிஷர் பங்களாவை 2016-லிருந்து ஏலத்தில் விற்பனை செய்ய முயற்சி எடுத்து வருகிறது கடன் மீட்பு தீர்ப்பாயம்.



▲ மும்பையில் உள்ள கிங்பிஷர் பங்களா.

ரூ.150 கோடி மதிப்புள்ள கிங்பிஷர் ஹவுஸ் பங்களாவுக்கு 2016-ல் முதல் ஏலத்தில் ஆரம்ப விற்பனை மதிப்பு ரூ.135 கோடி என கடன் மீட்பு தீர்ப்பாயம் நிர்ணயித்தது. ஆனால் ஏலம் வெற்றியடையவில்லை. அதன் பிறகு நடந்த ஏல விற்பனைகளில் தொடர்ந்து விலையைக் குறைத்து வந்தபோதும் விற்பனை ஆகவில்லை.

மும்பை விமான நிலையத்தின் அருகில் இருப்பதால் இந்த இடத்தில் கட்டுமானத்துக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. இதனால் இந்த இடத்தின் மதிப்பு உயர்வதற்கான வாய்ப்புகள் குறைவு என்பதால் ஏலத்தில் நிர்ணயிக்கப்படும் மதிப்புக்கு வாங்குவதற்கு யாரும் தயாராக இல்லை எனக் கூறப்பட்டது.

தொடர்ந்து 8 ஏல விற்பனைகள் தோல்வி அடைந்த நிலையில் ஒருவழியாக சமீபத்தில் நடந்த 9-வது ஏலத்தில் ரூ.52.25 கோடிக்கு விற்பனை ஆனது. ஹைதராபாத்தைச் சேர்ந்த சாட்டர்ன் ரியல்டர்ஸ் நிறுவனம் இந்த பங்களாவை ஏலத்தில் வாங்கியுள்ளது. இது இந்த பங்களாவின் மதிப்பில் மூன்றில் ஒரு பங்கு விலை ஆகும்.

### 3-வது நினைவுநாள்: வாஜ்பாய் நினைவிடத்தில் பிரதமர் மோடி மரியாதை

■ புதுடெல்லி

முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் நினைவு நாளை முன்னிட்டு டெல்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

முன்னாள் பிரதமரும் பாரதிய ஜனதா கட்சியின் நிறுவனர்களில் ஒருவருமான அடல் பிஹாரி வாஜ்பாய் (93), வயது மூப்பு காரணமாக கடந்த 2018-ம் ஆண்டு ஆகஸ்ட் 16-ம் தேதி காலமானார்.

வாஜ்பாயின் 3-வது நினைவு தினத்தை முன்னிட்டு டெல்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று மரியாதை செலுத்தினார். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், பாஜக தேசிய தலைவர் ஜே.பி.நட்டா மற்றும் கட்சியின் மூத்த தலைவர்கள் பலர் அடல் பிஹாரி வாஜ்பாய் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர்.

பிரதமர் மோடி தனது ட்விட்டர் பக்கத்தில், "வாஜ்பாயின் ஆளுமை, இயற்கையை நேசிக்கும் தன்மை, நகைச்சுவையுடன் பேசும் திறமை மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணி ஆகியவற்றை நினைவுகூருகிறோம்.

நாட்டு மக்களின் மனங்களிலும் இதயங்களிலும் அடல்ஜி வாழ்ந்து கொண்டிருக்கிறார். இன்று (நேற்று) அவரது நினைவு தினத்தை முன்னிட்டு, 'சதைவ் அடல்' நினைவிடத்தில் மரியாதை செலுத்தினோம்" என பதிவிட்டு புகைப்படங்களையும் வெளியிட்டுள்ளார். - பிடிஐ

## இந்தியாவில் பயிற்சி பெற்று வரும் ஆப்கன் ராணுவ வீரர்கள் கலக்கம்

■ புதுடெல்லி

ஆப்கானிஸ்தான் ராணுவ வீரர்கள், அதிகாரிகளுக்கு இந்திய ராணுவம் பயிற்சி அளிக்க வகை செய்யும் ஒப்பந்தம் 2011-ல் இரு நாடுகளுக்கிடையே கையெழுத்தானது. இதைத் தொடர்ந்து ஆப்கன் ராணுவ வீரர்கள் உத்தராகண்ட் மாநிலம் டேராடூனில் உள்ள இந்திய ராணுவ அகாடமியில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், இந்திய ராணுவ அகாடமியின் (ஐஎம்ஏ) மக்கள் தொடர்பு அதிகாரி லெப்டினன்ட் கர்னல் ஹிமானி பந்த் கூறும்போது, "தற்போது டேராடூன் அகாடமியில், 80 ஆப்கன் வீரர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். ஆப்கனில் நிலைமை மோசமாகி வருவதால் அவர்கள் தங்கள் நாட்டுக்கு திரும்புவோமோ இல்லையோ என்ற அச்சத்தில் உள்ளனர். தங்களது குடும்பத்தினரின் நிலை குறித்தும் அவர்கள் பெரும் கலக்கத்தில் உள்ளனர். அவர்களுக்கு இங்குள்ள அதிகாரிகளும் பயிற்சியாளர்களும் ஆதரவு வார்த்தைகளை கூறி வருகின்றனர்.

இந்த 80 பேரும் ஓராண்டு பயிற்சி திட்டத்தில் இணைந்தவர்கள். தற்போது அவர்கள் முதல் மற்றும் 2-வது பருவ பயிற்சியில் உள்ளனர்" என்றார். - பிடிஐ




## கின்னார் நிலச்சரிவு போன்ற சம்பவம் நிகழாமல் தடுக்க முயற்சி

● இமாச்சல பிரதேச முதல்வர் ஜெய்ராம் தாக்கூர் உறுதி

■ சிம்லா

கின்னார் நிலச்சரிவு போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க முயற்சி மேற்கொண்டுள்ளோம் என இமாச்சல பிரதேச முதல்வர் ஜெய்ராம் தாக்கூர் கூறியுள்ளார்.

இமாச்சல பிரதேச மாநிலம் கின்னார் மாவட்டத்தில் கடந்த 11-ம் தேதி ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் அரசுப் பேருந்து உள்ளிட்ட சில வாகனங்கள் சிக்கிக் கொண்டன. அங்கு மீட்புப் பணிகள் மீண்டும் தொடங்கியுள்ள நிலையில் நேற்று 2 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. இதனால் கின்னார் நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது. இறந்தவர்களின் குடும்பத்துக்கு மாநில அரசு தலா ரூ.5 லட்சம் நிதியுதவி அறிவித்துள்ளது.

இந்நிலையில் இமாச்சல பிரதேச முதல்வர் ஜெய்ராம் தாக்கூர் நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "கின்னார் நிலச்சரிவில் காயம் அடைந்தவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரை சந்தித்தேன். சம்பவ இடத்தில் இன்னும் சிலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம்



▲ இமாச்சல பிரதேச மாநிலம் கின்னார் மாவட்டதில் கடந்த வாரம் நிலச்சரிவு ஏற்பட்ட இடத்தில் நேற்று மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தோ-திபெத் எல்லை காவல் படையினர். படம்: பிடிஐ

என கருதுகிறோம். சம்பவ பகுதியில் நிலைமையை மதிப்பிடவும் அங்கு மலைகள் ஏன் உடைகின்றன என்பதை ஆய்வு செய்யவும் ஒரு குழுவை அனுப்பியுள்ளோம். கின்னார் நிலச்சரிவு போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க முயற்சி மேற்கொண்டுள்ளோம். அறிவியல் ஆய்வு மூலம் ஒரு வழியை கண்டுபிடிக்க முயன்று வருகிறோம்" என்றார்.

மாநில பேரிடர் மேலாண்மை துறை இயக்குநர் சுதேஷ் குமார் மோக்தா கூறும்போது, "கின்னார் நிலச்சரிவில் எஸ்யுவி கார் ஒன்று புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படும் நிலையில், இதுவரை அந்த காரை கண்டுபிடிக்க முடியவில்லை" என்றார்.

நிலச்சரிவில் சிக்கிய அரசுப் பேருந்தில் 22 பயணிகள் இருந்தனர். இதில் பெரும்பாலானவர்களின் உடல்கள், உருக்குலைந்த அந்தப் பேருந்தில் இருந்து மீட்கப்பட்டன. நிலச்சரிவு நாளில் ஒரு டாக்சி காரில் 8 பேரின் உடல்கள் காணப்பட்டன. மேலும் இரு கார்கள் சேதமடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவற்றில் யாரும் இல்லை.

இதனிடையே அந்த வழித்தடத்தில் பாதுகாப்பு கருதி இரவு 9 மணி முதல் மறுநாள்காலை9மணிவரை அனைத்து வாகனப் போக்குவரத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.